முன்னுரை

எபிரெயு பாஷையில் எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்திற்கு தலைப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. மோசேயின் பஞ்சாகம புஸ்தகங்களுக்கு, முதல் வார்த்தையே அந்தந்த புஸ்தகங்களுக்கு பெயராகயிருக்கும். ஆதியாகமம் புஸ்தகம் எபிரெயு பாஷையில் "பெரிஷித்" என்று அழைக்கப்படுகிறது. அதுபோல எரேமியாவின் புலம்பல் புஸ்தகம், எபிரெயு பாஷையில் "எக்கா" என்னும் முதல் வார்த்தையினால் அழைக்கப்படுகிறது.

யூதமார்க்கத்தின் வியாக்கியான ஆசிரியர்களும், எபிரெய ஆசிரியர்களும் இந்தப் புஸ்தகத்திற்கு "கீனோத்" என்னும் பெயரை கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெயருக்கு "புலம்பல்கள்" என்று பொருள். பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்தமான சந்தோஷ கீதங்கள் இருப்பதுபோல, பரிசுத்தமான சோககீதங்களும், புலம்பலின் கீதங்களும் இருக்கிறது.

புலம்பல் புஸ்தகத்தின் ஆசிரியர் எரேமியா. இவர் இந்தப் புஸ்தகத்தை கவிதை நடையில் எழுதியிருக்கிறார். எரேமியாவின் புலம்பல் புஸ்தகம், அவருடைய தீர்க்கதரிசன புஸ்தகத்தோடு சேர்த்து கோர்க்கப்பட்டிருக்கிறது. எரேமியாவின் புலம்பல் புஸ்தகம் அவருடைய தீர்க்கதரிசன புஸ்தகத்திற்கு பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

எரேமியா தன்னுடைய தீர்க்கதரிசன புஸ்தகத்தில், யூதா, எருசலேம் ஆகியவற்றின் அழிவை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசன புஸ்தகத்தின் 52-ஆவது அதிகாரத்தில், யூதாவும் எருசலேமும் எவ்வாறு அழிந்துபோயிற்று என்னும் வரலாற்று சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. எரேமியா இந்தப் புலம்பல் புஸ்தகத்தில், யூதா, எருசலேம் ஆகியவற்றின் அழிவுக்காக வருத்தத்தோடு புலம்புகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாதேசத்திற்கும் எருசலேம் நகரத்திற்கும் வரப்போகும் அழிவை தீர்க்கதரிசன பார்வையோடு பார்த்தார். அப்போது தன்னுடைய கண்கள் நீரூற்றாயிருந்தால் நலமாயிருக்கும் என்று தன்னுடைய விருப்பத்தைச் சொன்னார். எரேமியா தீர்க்கதரிசனம் சொன்ன பிரகாரமாக யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் அழிவு வந்தது. எரேமியா தன்னுடைய தேசத்தின் அழிவைப் பார்த்து அழுது புலம்புகிறார்.

யூதாதேசத்தார் எரேமியாவின்மீது சிநேகமாயில்லை. அவரை விரோதித்தார்கள். அவருக்கு தீங்கு செய்தார்கள். ஆனாலும் எரேமியா யூதாதேசத்தின் அழிவுக்காக அழுது புலம்புகிறார். கர்த்தருடைய கோபத்தினால் யூதாதேசம் அழிந்துபோகும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னார். அவர் சொன்ன பிரகாரம் யூதாதேசமும் அழிந்துபோயிற்று. இதனால் எரேமியா ஒரு மெய்யான தீர்க்கதரிசி என்பது நிரூபணமாயிற்று. ஆனாலும் யூதாதேசம் அழிந்துபோனதற்காக எரேமியா வேதனையோடு அழுது புலம்புகிறார்.

கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணினார்கள். அவர்கள் எருசலேமை முற்றிக்கைப்போட்டார்கள். யூதாவின் பட்டணங்களையும் எருசலேம் நகரத்தையும் அழித்துப்போட்டார்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்தையும், அரமனையையும் தீயிட்டு கொளுத்திவிட்டார்கள். யூதாதேசம் அழிந்தது. தேவாலயமும் அழிந்தது. கல்தேயர்கள் தேவாலயத்தின் பலிபீடத்தையும் உடைத்துப்போட்டார்கள். தேவாலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். எரேமியா தீர்க்கதரிசி இந்த சந்தர்ப்பத்தில் யூதாவுக்காகவும், எருசலேமுக்காகவும் அழுது புலம்புகிறார்.

யோசியா ராஜா மரணமடைந்தார். "எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடினான்; சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள்; அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கிவருகிறது; அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" (2நாளா 35:25).

யோசியா ராஜா மரணமடைந்தபோது எரேமியா மிகவும் துக்கப்பட்டார். எரேமியா யோசியாவின்மேல் பாடிய புலம்பல் பாடலே, "எரேமியாவின் புலம்பல் புஸ்தகம்" என்றும் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தில் யோசியாவைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை. யூதாவின்மீதும் எருசலேமின்மீதும் ஏற்கெனவே வந்துவிட்ட அழிவுக்காக எரேமியா துக்கத்தோடு புலம்பல் பாடுகிறார். யோசியாவின் அடக்க ஆராதனைக்காக எரேமியா புலம்பல் பாடவில்லை. எருசலேம் நகரம் அழிந்துபோயிற்று. கர்த்தருடைய பரிசுத்த நகரம் இப்போது மரித்துப்போனதுபோல இருக்கிறது. எருசலேமின் அடக்க ஆராதனையில் புலம்புவதுபோல எரேமியா இந்தப் புலம்பல் பாடலை எழுதியிருக்கிறார்.

எரேமியாவின் புலம்பல் பாடல் கவிதை நடையிலும் எழுதப்பட்டிருக்கிறது. இது எபிரெய பாஷையின் அகர வரிசையிலும் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் ஐந்தாவது அதிகாரத்தைத் தவிர, மற்ற நான்கு அதிகாரங்களும் அகர வரிசையில் எழுதப்பட்டிருக்கிறது. எபிரெய பாஷை எழுத்தியலில் 22 எழுத்துக்கள் உள்ளன. முதலாவது எழுத்து ஆலெப். ஒவ்வொரு அதிகாரத்திலும், முதல் வசனத்தின் முதல் எழுத்து "ஆலெப்" என்னும் எபிரெய எழுத்தில் ஆரம்பமாகும். இரண்டாவது வசனம் "பேத்" என்னும் எழுத்திலும், மூன்றாவது வசனம் "கிமெல்" என்னும் எழுத்திலும் ஆரம்பமாகும்.

எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தில் முதல் இரண்டு அதிகாரத்திலும் 22 வசனங்கள் உள்ளன. மூன்றாவது அதிகாரத்தில் 66 வசனங்கள் உள்ளன. இந்த அதிகாரத்தில் முதல் மூன்று வசனங்களும் "ஆலெப்" என்னும் எழுத்தில் ஆரம்பமாகும். அடுத்த மூன்று வசனங்கள் "பேத்" என்னும் எழுத்தில் ஆரம்பமாகும். எபிரெய பாஷையின் ஒவ்வொரு எழுத்தும், மூன்று வசனங்களில் முதல் எழுத்தாக எழுதப்பட்டிருக்கிறது. எபிரெய பாடல்கள் அகர வரிசைப்படி எழுதப்பட்டிருப்பதினால், இந்தப் பாடல்களின் வரிகளை மனப்பாடம்பண்ணுவது மிகவும் எளிது.

எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தின் 2; 3; 4 ஆகிய மூன்று அதிகாரங்களிலும், "பே" என்னும் எபிரெய எழுத்து, "ஆயின்" என்னும் எபிரெய எழுத்திற்கு முன்பாக வருகிறது. எபிரெய எழுத்தியலில் "ஆயின்" என்னும் எழுத்திற்கு பின்பு "பே" வரும். ஆனால் இந்த மூன்று அதிகாரங்களிலும் இவ்விரண்டு எழுத்துக்களும், வரிசை மாறி எழுதப்பட்டிருக்கிறது.

எபிரெயர்கள் "எழுபது" என்னும் எண்ணைக் குறிப்பதற்கு "ஆயின்" என்னும் எபிரெய எழுத்தை பயன்படுத்துவது வழக்கம். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தார்கள். எழுபது வருஷங்களுக்கு பின்பு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனங்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலைபண்ணினார். எபிரெயர்கள் தங்களுடைய சிறையிருப்பின் வரலாற்றை மறந்துவிடாமல் நினைவுகூரும் வண்ணமாக, "ஆயின்" என்னும் எழுத்து அகரவரிசை மாற்றி எழுதப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பக்தியுள்ள யூதர்கள், பாபிலோன் தேசத்தில் தங்கள் முன்னோர்கள் அனுபவித்த சிறையிருப்பு வேதனைகளை சோகத்தோடு நினைவு கூருவது வழக்கம். அவர்களுடைய துக்கத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. எபிரெயர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் சீயோனையும் மறந்துவிடவில்லை.

யூதமார்க்கத்தார் எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்திற்கு ஆவிக்குரிய வியாக்கியானங்களும் சொல்லுவது வழக்கம். யூதர்கள் தங்களுடைய பாவங்களுக்காக கர்த்தரிடத்தில் அழுது புலம்பவேண்டும் என்று யூதமார்க்கத்து ரபீமார்கள் எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தை ஆதாரமாக வைத்து எபிரெயர்களுக்கு கற்றுக்கொடுப்பார்கள்.

1 அதிகாரம்

எரேமியாவின் புலம்பல் புஸ்தகம், முதலாம் அதிகாரத்தில் 22 வசனங்கள் உள்ளன. எருசலேம் இப்போது பாழாய்க் கிடக்கிறது. அது தன்னுடைய பரிதாபமான நிலமையைப் பார்த்து அழுது புலம்புகிறது. எருசலேம் ஒரு காலத்தில் அழகாகவும், செழிப்பாகவும் இருந்த நகரம். ஆனால் இப்போதோ அது பாழாய்க்கிடக்கிறது. எருசலேமின் அழிவுக்கு அதன் பாவங்களே காரணம். எருசலேமை அழித்துப்போட்ட சத்துருக்களுக்கு விரோதமாக கர்த்தர் நீதி செய்யவேண்டும் என்றும், எருசலேமின்மீது கர்த்தர் தம்முடைய கிருபையைக் காண்பிக்கவேண்டும் என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

எருசலேமின் அழுகையையும், துக்கத்தையும், துயரத்தையும் எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார் (புல 1:1-11). எருசலேமின் அழிவைக்குறித்து எரேமியா அவளுடைய சிநேகிதர்களிடத்திலும் முறையிடுகிறார் (புல 1:12-17). கர்த்தர் எருசலேமை அழித்துப்போட்ட சத்துருக்கள்மீது தம்முடைய நீதியை வெளிப்படுத்த வேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார் (புல 1:18-22).

எருசலேமின் அழிவு புல 1:1-11

புல 1:1. ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே! ஜாதிகளில் பெரியவளும், சீமைகளில் நாயகியுமாயிருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே!

புல 1:2. இராக்காலத்திலே அழுதுகொண்டிருக்கிறாள், அவளுடைய கண்ணீர் அவள் கன்னங்களில் வடிகிறது; அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை; அவளுடைய சிநேகிதர் எல்லாரும் அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள்.

புல 1:3. யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமைவேலை செய்யவும் சிறைப்பட்டுப் போனார்கள். அவள் புறஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள், இளைப்பாறுதல் அடையாள்; அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்துபிடித்தார்கள்.

புல 1:4. பண்டிகைக்கு வருவார் இல்லாததினால், சீயோனுக்குப் போகிற வழிகள் புலம்புகிறது; அவள் வாசல்கள் எல்லாம் பாழாய்க்கிடக்கிறது; அவள் ஆசாரியர்கள் தவிக்கிறார்கள்; அவள் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள்; அவளுக்குக் கசப்பே உண்டாயிருக்கிறது.

புல 1:5. அவள் சத்துருக்கள் தலைமையானார்கள்; அவள் பகைஞர் சுகித்திருக்கிறார்கள்; அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளைச் சஞ்சலப்படுத்தினார்; அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப்போனார்கள்.

புல 1:6. சீயோன் குமாரத்தியின் அழகெல்லாம் அவளை விட்டுப்போயிற்று; அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, தொடருகிறவனுக்கு முன்பாகச் சத்துவமில்லாமல் நடந்து போனார்கள்.

புல 1:7. தனக்குச் சிறுமையும் தவிப்பும் உண்டாகிய நாட்களிலே எருசலேம் பூர்வநாட்கள் முதற்கொண்டு தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைக்கிறாள்; அவளுக்கு உதவிசெய்வார் இல்லாமல் அவளுடைய ஜனங்கள் சத்துருவின் கையிலே விழுகையில், பகைஞர் அவளைப் பார்த்து, அவளுடைய ஓய்வுநாட்களைக் குறித்துப் பரியாசம்பண்ணினார்கள்.

புல 1:8. எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ்செய்தாள்; ஆதலால் தூரஸ்திரீயைப்போலானாள்; அவளைக் கனம்பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள்; அவளுடைய மானத்தைக் கண்டார்கள்; அவளும் பெருமூச்சுவிட்டுப் பின்னிட்டுத் திரும்பினாள்.

புல 1:9. அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது; தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள்; ஆகையால் அதிசயமாய்த் தாழ்த்தப்பட்டுப் போனாள்; தேற்றுவார் இல்லை; கர்த்தாவே, என் சிறுமையைப் பாரும்; பகைஞன் பெருமைபாராட்டினானே.

புல 1:10. அவளுடைய இன்பமான எல்லாவற்றின்மேலும் சத்துரு தன் கையை நீட்டினான்; உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டாள்.

புல 1:11. அவளுடைய ஜனங்களெல்லாரும் அப்பந்தேடித் தவிக்கிறார்கள்; தங்கள் உயிரைக் காப்பாற்றத் தங்களுடைய இன்பமானவைகளை ஆகாரத்துக்கென்று கொடுத்து விட்டார்கள்; கர்த்தாவே, நோக்கிப் பாரும்; எண்ணமற்றவளானேனே.

எருசலேம் நகரமும், அதிலுள்ள தேவாலயமும் அழிந்துபோயிற்று. எருசலேமின் அரமனையும் அழிந்துபோயிற்று. ஒரு காலத்தில் எருசலேம் நகரம் ஜனம்பெருத்த நகரமாயிருந்தது. இப்போதோ அது ஜனமில்லாமல் தனிமையாயிருக்கிறது. "ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே" (புல 1:1) என்று எரேமியா எருசலேமுக்காக அழுது புலம்புகிறார்.

எருசலேம் நகரத்தில் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ஏராளமானோர் இருந்தார்கள். அவர்கள் எருசலேம் நகரத்தையே நிரப்பினார்கள். மற்ற தேசத்தாரும் எருசலேம் நகரத்திற்கு வருவது வழக்கம். எருசலேமின் ஜனத்தார் மற்ற தேசத்தாரோடு வியாபாரம் பண்ணுவார்கள். பொருட்களை விற்பதும் வாங்குவதும் எருசலேமின் வீதிகளில் நடைபெறும். ஆனால் இப்போதோ எருசலேமிலுள்ள யூதர்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போயிருக்கிறார்கள். எருசலேம் நகரத்தில் ஆட்கள் யாருமே இல்லை. எருசலேம் நகரமே தனிமையாயிருக்கிறது.

எருசலேம் நகரத்தின் முக்கியமான வீதிகளெல்லாவற்றிலும் ஜனநடமாட்டம் அதிகமாயிருக்கும். எருசலேம் நகரம் ஜனம் பெருத்த நகரம். ஆனால் இப்போது எருசலேமின் வீதிகளில் ஒருவருமில்லை. எருசலேம் விதவைக்கு ஒப்பாயிருக்கிறது. யூதாதேசத்தின் ராஜா எருசலேமுக்கு புருஷனைப்போல இருந்தவர். பாபிலோன் தேசத்தார் யூதாவின் ராஜாவை சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டார்கள்.

எருசலேமில் கர்த்தருடைய தேவாலயம் இருக்கிறது. எருசலேம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். எபிரெயர்களோ கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப் போய்விடுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இதனால் கர்த்தரும் தம்முடைய ஜனத்தின்மீது கோபப்பட்டு, அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். எருசலேமில் ராஜா இல்லாததுபோல, இப்போது கர்த்தரும் அங்கே இல்லை. எருசலேம் நகரம் தனிமையாய் உட்கார்ந்திருக்கிறது. எருசலேமில் ஜனங்களும் இல்லை. எருசலேம் நகரம் பிள்ளைகளற்ற விதவைக்கு ஒப்பானவளாய் தனிமையில் உட்கார்ந்திருக்கிறாள்.

ஒரு காலத்தில் எருசலேம் நகரத்திற்கு அந்நிய தேசத்தின் ராஜாக்கள் வந்து கப்பம் கட்டுவது வழக்கம். தாவீதின் காலத்திலும், சாலொமோன் ராஜாவின் காலத்திலும் இஸ்ரவேல் தேசம் சமஸ்த இஸ்ரவேலாக, புகழும் பெலமும் மிகுந்து விளங்கிற்று. அது ஜாதிகளில் பெரியவளாயிருந்தது. சீமைகளில் நாயகியாயிருந்தது. மற்ற தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தை நேசித்தார்கள். அதை நேசியாதவர்களோ இஸ்ரவேல் தேசத்தின் பலத்தைப் பார்த்து பயந்து நடுங்கினார்கள்.

அந்நிய தேசத்து ராஜாக்கள் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு வெகுமதிகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். மற்ற தேசத்தாரோ இஸ்ரவேலுக்கு கப்பம் கட்டினார்கள். இஸ்ரவேல் தேசம் சீமைகளில் நாயகியைப்போல இருந்தது. ஆனால் இப்போதோ அவளுடைய மகிமை அவளைவிட்டு நீங்கிற்று. அவளுடைய சிநேகிதர்கள் எல்லோரும் அவளைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். எருசலேம் நகரம் இப்போது தனிமையில் உட்கார்ந்திருக்கிறது.

ஒரு காலத்தில் இஸ்ரவேல் தேசம் மற்ற தேசங்களை ஜெயித்து, அவர்களை தங்களுடைய ஆளுகைக்கு கட்டுப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் இப்போதோ இஸ்ரவேல் தேசத்தார் மற்ற தேசத்தாரிடம் தோற்றுப்போயிருக்கிறார்கள். ஒரு காலத்தில் மற்ற தேசங்களிடமிருந்து கப்பம் வசூலித்தவர்கள், இப்போது மற்ற தேசங்களுக்கு கப்பம் கட்டுகிறார்கள். ஆரம்பத்தில் அவர்கள் எகிப்து தேசத்திற்கு கப்பம் கட்டினார்கள். அதன் பின்பு அவர்கள் பாபிலோன் தேசத்திற்கும் கப்பம் கட்டினார்கள். எருசலேமின் பாவம் அவர்களை தனிமைப்படுத்திற்று. அவர்களுடைய பாவங்கள் அவர்களை அடிமைப்படுத்தவும் செய்தது.

எருசலேம் நகரம் சந்தோஷமான நகரம். அங்கே எப்போதும் மகிழ்ச்சியும், ஆனந்தமும், பூரிப்பும் நிரம்பியிருக்கும். ஆனால் இப்போதோ எருசலேம் நகரம் எங்கும் துக்கம் நிரம்பியிருக்கிறது. இஸ்ரவேலின் கோத்திரத்தார் எல்லோரும் எருசலேமுக்கு கூடிவந்து, கர்த்தருடைய ஆலயத்திலே, அவருடைய சமுகத்திற்கு முன்பாக மகிழ்ந்து களிகூருவார்கள். உலகம் முழுவதிலுமுள்ள நகரங்களில், எருசலேம் நகரமே மிகவும் சந்தோஷப்பட்டு களிகூருகிற நகரம்.

ஆனால் இப்போதோ எருசலேம் நகரம் இராக்காலத்திலே அழுதுகொண்டிருக்கிறாள். அவளுடைய கண்ணீர்கள் அவள் கன்னங்களில் வடிகிறது. இரவு வேளையில் எருசலேம் நகரம் தனிமையாகவும், அமைதியாகவும் கண்ணீர்விட்டு அழுகிறது. இராக்காலத்திலே மற்றவர்கள் எல்லோரும் ஒய்வெடுக்கும்போது, எருசலேம் நகரத்தால் ஒய்வெடுக்க முடியவில்லை. அவளுடைய வேதனையும், துக்கமும், வருத்தமும் அவளை உபத்திரவப்படுத்துகிறது. அவளால் அமைதியாக ஒய்வெடுக்க முடியவில்லை. ஆகையினால் எருசலேம் நகரம் இராக்காலத்தில் அழுதுகொண்டிருக்கிறது (புல 1:2).

"ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்" (எரே 9:1) என்று எரேமியா சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். அவர்கள் புறஜாதியாரோடு சம்பந்தங்கலக்காமல், கர்த்தருக்காக வேறு பிரிக்கப்பட்டு பரிசுத்தமாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ எபிரெயர்கள் புறஜாதிகளுக்குள்ளே தங்கியிருக்கிறார்கள். கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருந்த யூதர்கள், இப்போது புறஜாதியாரோடு கலந்துவிட்ட ஜனமாயிருக்கிறார்கள்.

"யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமைவேலைசெய்யவும் சிறைப்பட்டுப்போனார்கள். அவள் புறஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள், இளைப்பாறுதல் அடையாள்; அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்துபிடித்தார்கள்" (புல 1:3) என்று எரேமியா எருசலேமை நினைத்து புலம்புகிறார்.

யூதாஜனங்கள் தங்கள் சொந்த தேசத்தை விட்டுவிட்டு, தங்களுடைய சத்துருக்களின் தேசத்தில் தங்குகிறார்கள். பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய காணியாட்சிக்கும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும் புறம்பானவர்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு அந்நிய தேசத்தில் இளைப்பாறுதல் இல்லை.

எருசலேமின் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப்போனார்கள் (புல 1:5). இந்தப் பிள்ளைகள் எருசலேமின் வருங்கால சந்ததிக்கு வித்தாகயிருக்கிறார்கள். ஆனால் இவர்களோ எருசலேமில் தங்கியிராமல், பாபிலோன் தேசத்திற்கு சிறையாகப் போகிறார்கள். எருசலேம் நகரத்தில் பெற்றோருமில்லை, பிள்ளைகளுமில்லை. வருங்கால சந்ததியாரும் எருசலேமிலிருக்கமாட்டார்கள். எருசலேம் நகரம் தனிமையாகயிருக்கும்.

அந்நிய தேசத்தில் அடிமைகளாகயிருந்து வேதனைப்படுகிறவர்களை, தங்கள் சொந்த தேசத்தில் சுயாதீனமாக தங்கியிருக்கிற ஜனங்கள் பார்க்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். நாம் இன்று நிற்பதும், நிர்மூலமாகாதிருப்பதும் கர்த்தருடைய சுத்த கிருபை.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு காலத்தில் அந்நிய தேசத்தார்மீது யுத்தம்பண்ணி அவர்களை ஜெயித்தார்கள். ஆனால் இப்போதோ ஜெயித்தவர்கள் தோற்றுப் போயிருக்கிறார்கள். தோற்றுப்போனவர்கள் ஜெயித்திருக்கிறார்கள். இஸ்ரவேலைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களில் தொடர்ந்து பிடித்தார்கள் (புல 1:3).

இஸ்ரவேல் ஜனங்களால் அவர்களுடைய சத்துருக்களின் கைகளுக்கு விலகி ஓடமுடியவில்லை. இஸ்ரவேலுக்கு உதவி செய்ய ஒருவருமில்லை. இஸ்ரவேலின் ஜனங்கள் சத்துருக்களின் கைகளில் விழுந்தார்கள் (புல 1:7). இஸ்ரவேலின் சத்துருக்கள் தலைமையானார்கள். அவள் பகைஞர் சுகித்திருக்கிறார்கள் (புல 1:5). இஸ்ரவேலோ அவர்களுக்கு அடிமைகளாக வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு காலத்தில் மதிப்போடும் மரியாதையோடும், கண்ணியத்தோடும் ஜீவித்தார்கள். அவர்களுடைய அண்டை தேசத்தார் எல்லோரும் இஸ்ரவேலை கனம்பண்ணினார்கள். கர்த்தரும் இஸ்ரவேல் ஜனத்தார் மூலமாக மகிமைப்பட்டார். ஆனால் இப்போதோ இஸ்ரவேலைக் கனம்பண்ணினவர்கள் எல்லோரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள் (புல 1:8). இஸ்ரவேல் அதிகமாய்த் தாழ்த்தப்பட்டுப்போனாள். இஸ்ரவேல் சிறுமைப்பட்டது. அவர்களுடைய பகைஞர்கள் அவர்களுக்கு விரோதமாக பெருமை பாராட்டுகிறார்கள் (புல 1:9).

இஸ்ரவேலுடைய திரளான பாதகங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை சஞ்சலப்படுத்தினார் (புல 1:5). இஸ்ரவேலுக்கு சிறுமையும் தவிப்பும் உண்டாயிற்று. அவர்கள் பூர்வநாட்கள் முதற்கொண்டு தங்களுக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார்கள். ஆனால் இப்போதோ அவர்களுக்கு சிறுமையும் தவிப்பும் உண்டாயிருக்கிறது. ஒரு காலத்தில் இஸ்ரவேல் தேசம் செழிப்பாயிருந்தது. இப்போதோ இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் அப்பம் தேடி தவிக்கிறார்கள்.

"நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல்போயிற்று" (எரே 52:6).

இஸ்ரவேலின் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகயிருக்கிறார்கள் (புல 1:6). அவர்கள் தொடருகிறவனுக்கு முன்பாக சத்துவமில்லாமல் நடந்துபோகிறார்கள். அவர்களுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும் பெலனில்லாததினால், அவர்கள் கீழே மயங்கி விழுவதுபோல சத்துவமில்லாமல் நடந்துபோகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்தையும் இடித்துப்போட்டார்கள். அதை அக்கினியால் எரித்துவிட்டார்கள். யூதர்களுடைய மார்க்கம் மிகவும் பின்தங்கிப்போயிற்று. அவர்களால் பண்டிகைகளை ஆசரிக்க முடியவில்லை. எருசலேமிலே பண்டிகை கொண்டாடும்போது யூதேயா தேசம் முழுவதிலும் இருந்து ஏராளமான ஜனங்கள் எருசலேமுக்கு கூடிவருவார்கள்.

இப்போது எருசலேமிலே ஒரு பண்டிகையும் நடைபெறவில்லை. எருசலேமுக்கு ஒருவரும் வருவதுமில்லை. பண்டிகைக்கு வருவார் இல்லாததினால், சீயோனுக்குப் போகிற வழிகள் புலம்புகிறது; அவள் வாசல்கள் எல்லாம் பாழாய்க்கிடக்கிறது; அவள் ஆசாரியர்கள் தவிக்கிறார்கள்; அவள் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள்; அவளுக்குக் கசப்பே உண்டாயிருக்கிறது (புல 1:4).

சீயோனுக்குப்போகிற வழிகளில் அழுகையும் புலம்பல் சத்தமும் கேட்கிறது. ஒரு காலத்தில் அங்கே சந்தோஷத்தின் கீதசத்தங்கள் கேட்டது. சீயோனின் வாசல்கள் எல்லாம் துப்புரவாகயிருந்தது. இப்போதோ அங்கே களைகளும், முட்செடிகளும் முளைத்து அந்த இடமே பாழாய்க்கிடக்கிறது.

"உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது; காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை. நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்கவேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?" (ஏசா 1:11,12).

யூதர்கள் பண்டிகைகளை அசுத்தப்படுத்தினார்கள். பண்டிகைகளை ஆசாரிப்பதையே புறக்கணித்தார்கள். இப்போதோ அவர்களுக்கு பண்டிகையே இல்லாமல் போயிற்று. சீயோனுக்குப்போகிற வழிகளிலும் அதன் வாசல்களிலும் பக்தியுள்ள யூதர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வார்கள். அவர்கள் எல்லோருமே தேவாலயத்தில் கர்த்தரை ஆராதிக்க வந்தவர்கள். அவர்கள் யூதமார்க்கத்தின் பிரமாணங்களைப்பற்றியும் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றியும் ஒருவரோடொருவர் சந்தோஷமாய் பகிர்ந்து பேசிக்கொள்வார்கள். ஆனால் இப்போதோ சீயோனுக்குப்போகிற வழிகள் புலம்புகிறது. தன்னுடைய வேதனைகளை நினைத்து தவிக்கிறது. அங்கு சகலமும் பாழாய்க்கிடக்கிறது.

தேவாலயம் அழிந்துபோய்க்கிடப்பதை ஆசாரியர்கள் பார்க்கிறார்கள். இவர்கள் தேவாலயத்தில் பலிகளைச் செலுத்தி கர்த்தரை ஆராதிக்கவேண்டியவர்கள். லேவியர்கள் கர்த்தருக்கு துதியின் கீதங்களை பாடவேண்டியவர்கள். ஆனால் ஆசாரியர்களின் வாய்களில் துதியின் கீதத்திற்கு பதிலாக, புலம்பலின் கீதங்கள் நிரம்பியிருக்கிறது. அவர்களிடத்தில் சந்தோஷமில்லை. அவர்கள் தங்கள் வேதனைகளையும், தேவாலயம் இடித்துபோயிருப்பதையும் பார்த்து தவிக்கிறார்கள்.

"தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள்; என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள். முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள்" (சங் 68:24,25).

சீயோன் செழித்திருந்தபோது அங்கே ஆடலும், பாடலும், இசை இசைப்பதும் தாராளமாய் நடைபெற்றது. ஆனால் இப்போதோ அங்கே இசையும் இல்லை. பாடலும் இல்லை. தவிப்பும் சஞ்சலமுமே இருக்கிறது. சீயோனுக்கு சந்தோஷமில்லை. அவளுக்கு கசப்பே உண்டாயிருக்கிறது.

சீயோனிலிருக்கிறவர்கள் தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனைகளை நினைத்துப் பார்த்து, மனம் ஏங்குகிறார்கள். அதுபோன்ற ஆராதனை இப்போது நடைபெறவில்லை என்பதை நினைத்து கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள். சீயோனுக்கு வருத்தமும், வேதனையும், நிந்தையும் உண்டாயிற்று.

"உன் சபையின் மனுஷராயிருந்து, பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன்" (செப் 3:18).

கல்தேயர்கள் தேவாலயத்தை தீட்டுப்படுத்திவிட்டார்கள். தேவனுடைய பரிசுத்த ஆலயத்திற்குள் இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமே பிரவேசிக்க வேண்டும். மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் பிரவேசிக்கலாம். புறஜாதியாரோ தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்திலேயே தங்கிவிடவேண்டும். தேவாலயத்திற்குள் பிரவேசிக்க புறஜாதியாருக்கு அனுமதியில்லை. ஆனால் கல்தேயர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசித்து, அங்கே உள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய்விடுகிறார்கள். இவர்கள் கர்த்தரை ஆராதிக்க வந்தவர்களல்ல. தேவாலயத்திலுள்ள பொருட்களை கொள்ளையிட வந்தவர்கள்.

"அவளுடைய இன்பமான எல்லாவற்றின்மேலும் சத்துரு தன் கையை நீட்டினான்; உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டாள்" (புல 1:10) என்று எரேமியா வேதனையோடு புலம்புகிறார்.

சாலொமோன் ராஜா தேவாலயத்தைக் கட்டியபோது, அதை பொன்னினாலும், வெள்ளியினாலும் அலங்கரித்தான். அவன் விலையுயர்ந்த கற்களினால் தேவாலயத்தை அழகுபடுத்தினான். கர்த்தரை ஆராதிப்பதற்கு பயன்படுத்தப்படும் பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் பொன்னால் செய்யப்பட்டவை. இவையெல்லாம் பரிசுத்தமானவை. தேவனுடைய ஆராதனையில் பயன்படுத்தப்படவேண்டியவை.

கல்தேயர்களோ தேவாலயத்திற்குள் பிரவேசித்து, அங்கேயிருந்த பொன்னையும், வெள்ளியையும், விலையுயர்ந்த பொருட்களையும், பரிசுத்த பணிமுட்டுக்களையும் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். "அவளுடைய இன்பமான எல்லாவற்றின்மேலும் சத்துரு தன் கையை நீட்டினான்" (புல 1:10) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

"எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்களுடைய ஸ்தானங்களெல்லாம் பாழாயின" (ஏசா 64:11).

இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனுடைய பரிசுத்த ஆலயமும், அவருடைய மகிமையும், தங்களுடைய பரிசுத்தமுமே இன்பமாயிருந்தது. அவையெல்லாமே இப்போது அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று. அவர்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாயிற்று. தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளமாக தேவாலயத்தில் உடன்படிக்கை பெட்டியும் பலிபீடமும் இருந்தன. இவையெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இன்பமானவை. கல்தேயர்கள் இவையெல்லாவற்றையும் உடைத்துப்போட்டு, இவற்றை தங்களோடு பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோய்விட்டார்கள்.

கல்தேயர்கள் தேவாலயத்திலுள்ள விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் தங்களோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். சீயோன் குமாரத்தியின் அழகெல்லாம் அவளைவிட்டுப்போயிற்று (புல 1:6). பரிசுத்தமே சீயோன் குமாரத்தியின் அழகு. கர்த்தருடைய ஆலயம் பரிசுத்தமானது. பரிசுத்தமே ஆலயத்தின் அழகு. கல்தேயர்கள் ஆலயத்தை அழித்தபோது, ஆலயத்தின் அழகும் அதைவிட்டுப்போயிற்று.

இஸ்ரவேல் வம்சத்தார் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பார்கள். ஆனால் இப்போதோ அவர்களால் ஓய்வுநாளை ஆசரிக்க முடியவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாரின் பகைஞர்கள், யூதர்களுடைய பரிசுத்தநாளை பரியாசம்பண்ணுகிறார்கள். யூதர்கள் தங்களுடைய வாழ்நாளில் ஏழில் ஒரு பகுதியை வீணாக்கிவிடுகிறார்கள் என்று புறஜாதி ஜனங்கள் யூதாவின் மனுஷரைத் தூஷிக்கிறார்கள்.

வாரத்தில் ஒரு நாளை ஒய்வுநாளாக நியமித்து, அதை பரிசுத்தமாய் ஆசாரிக்கும்போது, வாரத்தின் மற்ற ஆறுநாட்களும் ஆசீர்வாதமாயிருக்கும். இது கர்த்தருடைய பிரமாணம். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து யூதர்கள் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்து பரியாசம்பண்ணுகிறார்கள். யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்களுக்கு துன்பமும், வேதனையும், பாடுகளும் மிகுதியாயிருக்கிறது. யூதர்களுக்கு இவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்போது, அவர்கள் ஏன் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்றும், ஒய்வுநாளை ஏன் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் என்றும், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை பரியாசம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் பூர்வ நாட்களில் செழித்திருந்தார்கள். அவர்களுக்கு சகலமும் இன்பமாயிருந்தது. இப்போதோ அவர்களுக்கு செழிப்பும் இல்லை. இன்பமும் இல்லை. அவர்களுக்கு சிறுமையும் தவிப்பும் உண்டாயிருக்கிறது. தனக்குச் சிறுமையும் தவிப்பும் உண்டாகிய நாட்களிலே எருசலேம் பூர்வநாட்கள் முதற்கொண்டு தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைக்கிறாள் (புல 1:7). இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பழைய மேன்மையையும், செழிப்பையும் தங்களுடைய தாழ்மையும் நினைத்துப் பார்க்கிறார்கள்.

நமக்கு குறைவு வரும்போதுதான், நிறைவின் முக்கியத்துவம் தெரியும். நாம் சஞ்சலத்தோடிருக்கும்போதுதான் சமாதானத்தின் ஆசீர்வாதம் புரியும். நமக்கு வியாதி வரும்போதுதான் ஆரோக்கியத்தின் ஆசீர்வாதம் புரியும். நமக்கு குறைவுபடும்போது, கர்த்தருடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, அதைப்பற்றி தியானித்துப் பார்ப்போம்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றினார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபங்கொண்டு, அவர்களைவிட்டு விலகிப்போனார். இதனால் கர்த்தருடைய ஜனத்திற்கு துன்பமும், வேதனையும், நெருக்கமும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தாரின் திரளான பாதகங்களின் நிமித்தம் கர்த்தர் அவர்களை சஞ்சலப்படுத்தினார். அவர்களுடைய பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப்போனார்கள். கர்த்தர் நீதியுள்ளவர். அவர் இஸ்ரவேலின் வழக்குகளை நியாயமாய் விசாரித்து, அவர்களுக்கு நீதியான தண்டனை கொடுக்கிறார். அவர்களுடைய சஞ்சலங்கள் அதிகமாயிருப்பதற்கு, அவர்களுடைய பாதகங்கள் திரளாயிருப்பதே காரணம்.

"உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள்; அவர்கள் உன்னைத் தேடார்கள்; திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், உன் பாவங்கள் பலத்துப்போனதினிமித்தமும், சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் நான் உன்னை தண்டித்தேன்" (எரே 30:14).

எருசலேம் மிகுதியாய்ப் பாவம் செய்தாள் (புல 1:8). எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாகப் பாவம் செய்தார்கள். பாவம் என்று தெரிந்திருந்தும், அந்தப் பாவங்களை மனப்பூர்வமாக செய்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த சந்ததியார். கர்த்தருடைய பிள்ளைகள் பாவத்தைவிட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு விரோதமாக மிகுதியாய்ப் பாவம் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ தங்களுக்கு வரப்போகும் முடிவை நினையாதிருந்தார்கள். இஸ்ரவேலை கனம்பண்ணிவர்கள் எல்லோரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை தாழ்த்தினார். உயர்ந்திருந்த அவர்கள் தாழ்ந்துபோனார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தாழ்வை நினைத்து ஆச்சரியப்பட்டார்கள். கர்த்தர் தங்களுடைய பாவங்களினிமித்தமாய் தங்களைத் தாழ்த்தினார் என்பதைக்கூட அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாரை தேற்றுவாரும் ஒருவருமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவத்தினால் தூரஸ்திரீயைப்போல தீட்டுப்பட்டார்கள். அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களிலிருந்தது (புல 1:8,9).

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பின் பிரகாரம் யூதாஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமை வேலை செய்யவும் புறப்பட்டுப்போனார்கள். யூதர்களில் ஐசுவரியவான்களாயிருந்தவர்கள் ஏழைகளை அநியாயமாய் ஒடுக்கினார்கள். இப்போதோ யூதர்களில் ஐசுவரியவான்களாயிருக்கிறவர்களும் உபத்திரவப்படுகிறார்கள். அவர்கள் கொடுமையான அடிமை வேலை செய்கிறார்கள். ஏழைகளை ஒடுக்கினவர்கள் இப்போது ஒடுக்கப்படுகிறார்கள். எபிரெயர்கள் தங்களுடைய எபிரெயர்களையே ஒடுக்கினார்கள். அவர்கள் தங்கள் இனத்தாரில் ஏழைகளாகயிருக்கிறவர் களையும், அடிமைகளாகயிருக்கிறவர்களையும் கொடுமைப்படுத்தினார்கள். கொடுமைப்படுத்திய யூதர்கள், இப்போது கொடுமையான அடிமை வேலை செய்கிறார்கள்.

"ஆனாலும் அதற்குப்பின்பு அவர்கள் மாறாட்டம்பண்ணி, தாங்கள் சுயாதீனராக அனுப்பிவிட்ட வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் மறுபடியும் அழைப்பித்து, அவர்களை வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்திக்கொண்டார்கள்" (எரே 34:11).

யூதர்களில் ஐசுவரியவான்களாயிருந்தவர்களை கனம்பண்ணினவர்கள் எல்லாரும், இப்போது அவர்களை அசட்டைபண்ணுகிறார்கள். அவர்களுடைய மானத்தைக் கண்டார்கள். யூதர்களின் ஐசுவரியவான்களும் பெருமூச்சுவிட்டு பின்னிட்டுத் திரும்பிப்போகிறார்கள். அவர்கள் பாவத்தின் உளையில் சிக்கியிருக்கிறார்கள். தூரஸ்திரீயைப்போல அசுத்தமாகவும் தீட்டாகவும் இருக்கிறார்கள். வஸ்திரத்தின் ஓரங்களில் அசூசம் இருப்பதுபோல, யூதர்களில் ஐசுவரியவான்களாயிருந்தவர்கள் இப்போது அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறார்கள்.

எருசலேம் செழித்திருந்தபோது, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான சிநேகிதர்கள் இருந்தார்கள். அவர்களுடைய அண்டை தேசத்தார் எல்லோரும் அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆனால் இப்போதோ ஜனம் பெருத்த எருசலேம் நகரம் தனிமையிலிருக்கிறது. சீமைகளில் நாயகியாயிருந்த எருசலேம் இப்போது கப்பம் கட்டுகிறது. எருசலேமின் சிநேகிதர்கள் யாரும் அவர்களுக்கு உதவிசெய்ய வரவில்லை.

"அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை; அவளுடைய சிநேகிதர் எல்லாரும் அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள்" (புல 1:2) என்று எரேமியா வேதனையோடு புலம்புகிறார். ஒரு காலத்தில் எருசலேம் ஜனத்தாருக்கு சிநேகிதர்களாயிருந்தவர்கள் இப்போது அவர்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். எருசலேமின் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களைப்போல இருக்கிறார்கள்.

எருசலேமுக்கு ஆபத்து வருகிறது என்னும் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டவுடனேயே, எருசலேமின் பிரபுக்கள், மான்கள் தப்பித்து ஓடுவதுபோல, தங்களுடைய ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள தப்பித்து ஓடிப்போகிறார்கள். ஆனாலும் அவர்கள் தப்பி ஓடும் இடங்களில் பாதுகாப்பு கிடைக்கவில்லை. ஆகையினால் எருசலேமின் பிரபுக்கள் மேய்ச்சலைக்காணாத மான்களுக்கு ஒப்பாகி, தொடருகிறவனுக்கு முன்பாக சத்துவமில்லாமல் நடந்துபோகிறார்கள் (புல 1:6). எருசலேமுக்கு ஆபத்து வரும்போது அவர்களுக்கு உதவிசெய்ய ஒருவருமில்லை. எருசலேமின் குடிகள் எல்லோரும் அவர்களுடைய சத்துருவின் கைகளில் விழுந்தார்கள். எருசலேம் தாழ்த்தப்பட்டபோது அவர்களைத் தேற்றுவதற்குக்கூட ஒருவருமில்லை (புல 1:7,9).

கர்த்தர் எருசலேமை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் செழித்திருந்த காலத்திலும் கர்த்தர் அவர்களைப் பார்த்தார். அவர்கள் தாழ்ந்திருக்கிற இப்போதும் கர்த்தர் அவர்களை நோக்கிப் பார்க்கிறார். "கர்த்தாவே என் சிறுமையைப் பாரும்" (புல 1:9) என்று எருசலேம் ஜனங்கள் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். "கர்த்தாவே நோக்கிப் பாரும், எண்ணமற்றவளானேனே" (புல 1:11) என்று எருசலேமின் குடிகள் கர்த்தருடைய சமுகத்தில் அழுது புலம்புகிறார்கள்.

நமக்கு மிகுந்த துக்கங்களும், வேதனைகளும், வருத்தங்களும், பாரங்களும் வரும்போது, நம்முடைய பாரங்களையெல்லாம் கர்த்தருடைய சமுகத்தில் இறக்கி வைத்துவிடவேண்டும். கர்த்தருக்கு சித்தமானது நிறைவேறட்டும் என்று தீர்மானித்து, சகலவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். கர்த்தர் தமக்கு பிரியமானதையும், நன்மையானதையும், சித்தமானதையும் செய்யட்டும் என்று சொல்லி, கர்த்தருடைய கிருபைக்காகவும், அவருடைய இரக்கத்திற்காகவும் காத்திருக்கவேண்டும். இதுவே நம்முடைய பாரங்கள் நீங்கி, இளைப்பாறுதலைப் பெறுவதற்கு எளிமையான வழி.

கர்த்தருடைய கோபம் புல 1:12-22

புல 1:12. வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள்.

புல 1:13. உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினார், அது அவைகளில் பற்றியெரிகிறது; என் கால்களுக்கு வலையை வீசினார்; என்னைப் பின்னிட்டு விழப்பண்ணினார்; என்னைப் பாழாக்கினார்; நித்தம் நான் பலட்சயப்பட்டுப் போகிறேன்.

புல 1:14. என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறது; அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது; என் பெலனை விழப்பண்ணினார்; நான் எழுந்திருக்கக்கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்.

புல 1:15. என்னிலுள்ள பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்களெல்லாரையும் ஆண்டவர் மிதித்துப்போட்டார்; என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தார்; திராட்சப்பழத்தை ஆலையில் மிதிக்கிறதுபோல, ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தார்.

புல 1:16. இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்; என் கண், என் கண்ணே நீராய்ச் சொரிகிறது; என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்; பகைஞன் மேற்கொண்டதினால் என் பிள்ளைகள் பாழாய்ப்போனார்கள்.

புல 1:17. சீயோன் தன் கைகளை விரிக்கிறாள்; அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை; கர்த்தர் யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவனுக்குச் சத்துருக்களாகக் கட்டளையிட்டார்; அவர்களுக்குள்ளே எருசலேம் தூரஸ்திரீக்கு ஒப்பானாள்.

புல 1:18. கர்த்தர் நீதிபரர்; அவருடைய வாக்குக்கு விரோதமாய் நான் எழும்பினேன்; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேட்டு என் துக்கத்தைப் பாருங்கள்; என் கன்னிகைகளும் என் வாலிபரும் சிறைப்பட்டுப்போனார்கள்.

புல 1:19. என்னைச் சிநேகித்தவர்களைக் கூப்பிட்டேன், அவர்களோ என்னை மோசம் போக்கினார்கள்; என் ஆசாரியர்களும் என் மூப்பர்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றத் தங்களுக்கு அப்பந்தேடுகையில் நகரத்தில் மூச்சொடுங்கி மாண்டார்கள்.

புல 1:20. கர்த்தாவே, பாரும், நான் நெருக்கப்படுகிறேன்; என் குடல் கொதிக்கிறது; நான் கடுந்துரோகம் பண்ணினபடியினால் என் இருதயம் வியாகுலப்படுகிறது; வெளியிலே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று, வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது.

புல 1:21. நான் தவிக்கிறதை அவர்கள் கேட்டாலும் என்னைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை; என் பகைஞர் எல்லாரும் எனக்கு வந்த ஆபத்தைக் கேட்டு, தேவரீர் அதைச் செய்தபடியால் சந்தோஷமாயிருக்கிறார்கள்; நீர் கூறின நாளை வரப்பண்ணுவீர், அப்பொழுது அவர்களும் என்னைப்போலாவார்கள்.

புல 1:22. அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் உமது முகத்துக்கு முன்பாக வரக்கடவது. என் சகல பாதகங்களினிமித்தமும் நீர் எனக்குச் செய்ததுபோல அவர்களுக்கும் செய்யும்; என் பெருமூச்சுகள் மிகுதியாயின, என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகுந்த துன்பமும் வேதனையும் உண்டாயிருக்கிறது. இந்த வேதனைகளெல்லாவற்றிற்கும் கர்த்தருடைய நீதியான கோபமே காரணம் என்பதை எரேமியா அங்கீகரிக்கிறார். தேவனுடைய நீதியான கரம் அவருடைய ஜனத்தின்மீது வந்து இறங்கியிருக்கிறது. இதனால் அவர்களுக்கு மிகுந்த துன்பமும் வேதனையும் உண்டாயிற்று. எரேமியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனத்தாரின் வேதனைகளுக்காக கர்த்தரிடத்தில் அழுது புலம்புகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் வேதனைப்படுவதை எல்லோரும் பார்க்கிறார்கள். வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களும் யூதாவின் மனுஷர் கஷ்டப்படுவதைப் பார்க்கிறார்கள். "இதைக் குறித்து உங்களுக்கு கவலையில்லாயா" (புல 1:12) என்று எரேமியா சகல ஜனங்களிடத்திலும் கேட்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி எருசலேமின் துக்கத்தைப்பற்றி இங்கு சொன்னாலும், இந்த துக்கத்தை நம்முடைய துக்கமாகப் பாவித்து, எரேமியாவின் வசனங்களைத் தியானிக்கவேண்டும். நமக்கும் சோதனைகளும், வேதனைகளும், வருத்தங்களும் வருகிறது. நாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் நம்மீது வருகிறது.

நமக்கு துன்பம் வரும்போது, எல்லா துன்பங்களையும் நாமே தாங்கிக்கொள்வதற்குப் பதிலாக, அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தால், நமக்கு கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும். விசுவாசிகள் மற்ற விசுவாசிகளின் துக்கங்களை பகிர்ந்துகொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் ஜெபம்பண்ணி, ஆலோசனை சொல்லி உதவிபண்ண வேண்டும்.

எருசலேம் நகரம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. தன்னுடைய அழிவுக்கு யார் காரணம் என்பதை எருசலேம் சிந்தித்துப் பார்க்கிறது. "கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள்" (புல 1:12) என்று எருசலேம் சொல்லுகிறது. எருசலேமின் சஞ்சலத்திற்கும், துக்கத்திற்கும் கர்த்தருடைய கோபமே காரணம்.

கர்த்தர் யார்மீதும் காரணமில்லாமல் கோபப்படமாட்டார். அவர் கிருபையும் இரக்கமும் மிகுந்தவர். கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்கள்மீது கோபப்படுகிறார். அவர்களைத் திருத்துவதற்காக கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். எருசலேமின் பாவத்தினிமித்தமாகவே கர்த்தருடைய உக்கிரமான கோபம் அதன்மீது மூண்டிருக்கிறது.

"உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினார், அது அவைகளில் பற்றியெரிகிறது; என் கால்களுக்கு வலையை வீசினார்; என்னைப் பின்னிட்டு விழப்பண்ணினார்; என்னைப் பாழாக்கினார்; நித்தம் நான் பலட்சயப்பட்டுப் போகிறேன்" (புல 1:13) என்று எருசலேம் தன்னுடைய சஞ்சலத்தையும், துக்கத்தையும் பற்றிச் சொல்லுகிறது.

எருசலேம் வலையில் சிக்கியிருக்கிறது. வலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு சுயமாய் முயற்சி செய்து பார்க்கிறது. ஆனால் முடியவில்லை. கர்த்தர் எருசலேமின் பெலனை விழப்பண்ணினார். எருசலேமால் எழுந்திருக்கக்கூடாதபடிக்கு, கர்த்தர் அதை ஒடுக்குகிறவர்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.

"என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறது; அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது" (புல 1:14) என்று எருசலேம் வேதனையோடு புலம்புகிறது. எருசலேமின்மீது நுகம் பூட்டப்பட்டிருக்கிறது. இது ஊழியம் செய்வதற்கான நுகமல்ல. இது அடிமைத்தனத்தின் நுகம். எருசலேமுக்கு தண்டனையாகக் கொடுக்கப்பட்ட நுகம். இது எருசலேமினுடைய பாதகங்களின் நுகம். கர்த்தரே இந்த நுகத்தை தம்முடைய கையினால் எருசலேமுக்கு பூட்டியிருக்கிறார். இந்த நுகம் எருசலேமின் கழுத்திலே பிணைக்கப்பட்டு அதைச் சுற்றிக்கொண்டது. எருசலேமால் இந்த நுகத்திலிருந்து தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள முடியாது.

இயேசுகிறிஸ்துவின் நுகம் இலகுவானது. "என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத் 11:30). நம்முடைய பாதகங்களோ பாரமானது. நம்முடைய பாவங்களினிமித்தமாய், நம்முடைய மனச்சாட்சி நமக்குள் குற்றவுணர்வைக் கொடுக்கும். தேவனுடைய நீதியான கரம் நம்முடைய பாதகங்களின் நுகத்தை நம்முடைய கழுத்திலே பிணைக்கும். கர்த்தர் பிணைக்கும் நுகத்தை அவரால் மாத்திரமே அவிழ்க்க முடியும். கர்த்தருடைய கிருபைக்கு மாத்திரமே நம்முடைய கழுத்தில் பிணைக்கப்பட்டிருக்கிற நுகத்தை அவிழ்க்கும் வல்லமையுள்ளது. நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ, நம்முடைய கழுத்தில் கட்டப்பட்டிருக்கிற நுகத்தை நம்மால் அவிழ்க்க முடியாது.

எருசலேமில் ஏராளமான பலசாலிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் கர்த்தர் மிதித்துப்போட்டார். "என்னிலுள்ள பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்களெல்லாரையும் ஆண்டவர் மிதித்துப்போட்டார்; என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தார்; திராட்சப்பழத்தை ஆலையில் மிதிக்கிறதுபோல, ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தார்" (புல 1:15) என்று எருசலேம் வேதனையோடு அழுது புலம்புகிறது.

எருசலேம் நகரம் ஆலையில் மிதிக்கப்படுகிற திராட்சப்பழங்களைப்போல இருக்கிறது. கர்த்தர் எருசலேம் நகரத்தார் எல்லோரையும் தம்முடைய கால்களால் மிதித்துப் போடுகிறார். கர்த்தர் தம்முடைய கைகளால் அவர்களுடைய கழுத்துக்களில் பாதகங்களின் நுகத்தை பிணைத்துக் கட்டுகிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தினால், எருசலேமின் ஜனங்களை, தம்முடைய கைகளாலும், கால்களாலும் தண்டிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்குகிறவர்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். இஸ்ரவேலை ஒடுக்கிறவர்கள் அவர்களுடைய சத்துருக்கள். அவர்கள் இஸ்ரவேலை மென்மையாய் நடத்தாமல், கொடுமையாய் நடத்துவார்கள்.

"தேவனே, நீர் என் ராஜா; யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும்" (சங் 44:4). கர்த்தர் பல சமயங்களில் யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கிறார். யாக்கோபோ கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். ஆகையினால் கர்த்தர் யாக்கோபின்மேல் கோபங்கொண்டு,அவர்களை ஒடுக்கிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்து விடுகிறார். யாக்கோபை இரட்சித்த கர்த்தர் இப்போது, யாக்கோபை தண்டிக்கிறார்.

எருசலேம் நகரம் முற்றிலுமாய் அழிந்து போயிற்று. வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களும் எருசலேமின் அழிவை ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். "இதைக் குறித்து உங்களுக்கு கவையில்லையா" என்று எருசலேம் சகல ஜனங்களிடத்திலும் கேட்கிறது. தன்னைப் பார்க்கிறவர்கள் தனக்காக பரிதபிக்கவேண்டும் என்று எருசலேம் எதிர்பார்க்கிறது.

நம்முடைய பக்கத்து வீடு தீயில் எரியும்போது, நாம் அவர்களுக்காக பரிதாபப்படாமலிருக்க முடியாது. அவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம். அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும் சொல்வோம். ஆனால் எருசலேம் தவிக்கும்போது, அவர்களைத் தேற்றுவார் ஒருவருமில்லை. அவர்களுடைய ஆபத்தைப் பார்த்து அவர்கள் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள்.

எருசலேம் நகரம் தன்னுடைய துக்கத்தை வெளிப்படுத்துகிறது. "இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்" (புல 1:16) என்று சொல்லி எருசலேம் அழுது புலம்புகிறது. எருசலேம் இராக்காலத்திலே அழுதுகொண்டிருக்கிறாள் (புல 1:2). எல்லோரும் அமைதியாக நித்திரைபண்ணும் போது, எருசலேமுக்கு நித்திரை வரவில்லை. அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வருகிறது. "என் கண், என் கண்ணே நீராய்ச் சொரிகிறது" என்று எருசலேம் அழுதுகொண்டே சொல்லுகிறாள். சீயோன் தன் கைகளை விரிக்கிறாள் (புல 1:17). கைகளை விரிப்பது இங்கு ஆனந்தத்திற்கு அடையாளமாயிராமல், துக்கத்திற்கும், சஞ்சலத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் சீயோனை விட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார். அவர் சீயோனுக்கு தம்முடைய பாதுகாப்பையும் பராமரிப்பையும் கொடுப்பதை நிறுத்திவிடுகிறார். "என் உயிரை காப்பாற்றி தேற்றுகிறவர் என்னைவிட்டுத் தூரமானார்" (புல 1:16) என்று சொல்லி எருசலேம் அழுகிறாள். பரிசுத்த ஆவியானவரே நம்முடைய தேற்றரவாளர். அவரே நம்முடைய ஆபத்து வேளைகளில் நம்முடைய ஜீவனைக் காப்பாற்றுகிறவர். கர்த்தருடைய பிரசன்னம் நம்மைவிட்டுத் தூரமாய் விலகிப்போகும்போது, நமக்கு மிகுந்த துக்கமும் வேதனையும் உண்டாகும். கர்த்தருடைய பிரசன்னம் தங்களைவிட்டு விலகிப்போனால் பரிசுத்தவான்களின் ஆத்துமா அதிகமாய் வியாகுலப்படும்.

எருசலேமை பகைஞர் மேற்கொண்டார்கள். இதனால் அவளுடைய பிள்ளைகள் பாழாய்போனார்கள் (புல 1:16). அந்தப் பிள்ளைகளால் எருசலேமுக்கு உதவிசெய்ய முடியவில்லை. அவர்களால் தங்களுக்குக்கூட உதவிசெய்துகொள்ள முடியவில்லை. எருசலேமிலுள்ள கன்னிகைகளும், வாலிபரும் சிறைப்பட்டுப்போனார்கள். எருசலேமுக்கு அவளுடைய பிள்ளைகளே நம்பிக்கையாயும் ஆனந்தமாயும் இருந்தார்கள். அவர்கள் அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகும் போது, எருசலேமின் நம்பிக்கையும், சந்தோஷமும் அதைவிட்டு விலகிப்போயிற்று.

எருசலேமின் சிநேகிதர்கள் அவளுக்கு உதவிசெய்ய வரவில்லை. எருசலேம் மிகுந்த சஞ்சலத்திலிருக்கும்போது, அவளுக்கு ஆறுதல் சொல்லவோ, அவளைத் தேற்றவோ, அவளுடைய சிநேகிதர் ஒருவரும் வரவில்லை. எருசலேமின் சுற்றுப்புறத்தார் எல்லாரும் ஒரு காலத்தில் அவளுக்கு சிநேகிதர்களாயிருந்தார்கள். கர்த்தரோ யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவளுக்கு சத்துருக்களாக கட்டளையிட்டார். சிநேகிதர்களாகயிருந்தவர்கள் இப்போது சத்துருக்களாகயிருக்கிறார்கள். எருசலேம் அவர்களுக்குள்ளே தூரஸ்திரீக்கு ஒப்பானாள் (புல 1:17). அவள் எல்லோராலும் அருவருக்கப்படுகிறாள். எல்லோரும் எருசலேமை விட்டுத் தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள்.

எருசலேம் தன்னுடைய சுற்றுப்புறத்தாரைப் பார்த்து, தன்னுடைய கைகளை விரித்து உதவி கேட்கிறாள். தன்னுடைய பரிதாபமான நிலமையை புலம்பலாகச் சொல்லுகிறாள். ஆனாலும் எருசலேமை தேற்றுவார் ஒருவருமில்லை. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை நம்பாமல் விக்கிரகங்களை நம்பினார்கள். அவர்கள் தூபங்காட்டின அந்நிய தெய்வங்கள் அவர்களுக்கு உதவி செய்ய வரவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தியரையும் அசீரியரையும் நம்பினார்கள். தங்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்கள் தங்களுக்கு உதவிசெய்ய வருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களோ இஸ்ரவேல் வம்சத்தாரை வஞ்சித்துவிட்டார்கள். இஸ்ரவேலின் ஆபத்தில் அவர்கள் அவளுக்கு உதவிசெய்ய வரவில்லை. "என்னை சிநேகித்தவர்களைக் கூப்பிட்டேன். அவர்களோ என்னை மோசம்போக்கினார்கள்" (புல 1:19) என்று எருசலேம் அழுது புலம்புகிறது.

யூதாவின் மனுஷருக்கு அவர்களுடைய ஆசாரியர்களும், மூப்பர்களும் ஆதரவாயிருக்கவேண்டும். ஜனங்களுக்கு உதவி தேவைப்படும்போது இவர்கள் உதவிசெய்ய முன்வரவேண்டும். யூதாமனுஷரின் உயிரைக் காப்பாற்ற ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யவேண்டும். ஆனால் அவர்களோ ஜனங்களின் உயிரைக் காப்பாற்றாமல் தங்களுடைய உயிரையே முதலாவதாக காப்பாற்றிக்கொள்ள முயற்சி பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தங்களுக்கு அப்பம் தேடுகிறார்கள். பிச்சையெடுப்பதுபோல மற்றவர்களின் உதவிகளுக்காக கெஞ்சுகிறார்கள். எருசலேம் நகரத்திற்குள் பஞ்சம் அதிகமாயிருக்கிறது. நகரத்திற்கு வெளியே கல்தேயர்கள் பட்டயத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். யூதர்கள் எருசலேம் நகரத்திற்குள்ளே இருந்தால் பட்டினியால் செத்துப்போவார்கள். நகரத்திற்கு வெளியே போனால் கல்தேயரின் பட்டயத்தால் செத்துப்போவார்கள். யூதர்களுக்கு மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்தைத் தண்டிப்பதற்கு, கல்தேயரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். ஆனால் அவர்களோ ஈவு இரக்கமற்றவர்களாக, மிருககுணமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். ஏதோமியர்களும், அம்மோனியர்களும் இஸ்ரவேல் ஜனத்தாரை கொடுமைப்படுத்தியது போல, இப்போது கல்தேயரும் இஸ்ரவேல் ஜனத்தாரை கொடுமைப்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தவிக்கிறார்கள். இஸ்ரவேலுக்கு சுற்றுப்புறத்திலிருக்கிற தேசத்தார், இஸ்ரவேல் ஜனத்தார் தவிக்கிற சத்தத்தைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை தேற்றவில்லை. எருசலேமைத் தேற்றுவார் ஒருவருமில்லை. "என் பகைஞர் எல்லாரும் எனக்கு வந்த ஆபத்தைக் கேட்டு, தேவரீர் அதைச் செய்தபடியால் சந்தோஷமாயிருக்கிறார்கள்" (புல 1:21) என்று எருசலேம் அழுது புலம்புகிறது. எருசலேமுக்கு சஞ்சலமாயிருக்கிறது. அவர்களுடைய சத்துருக்களுக்கோ சந்தோஷமாயிருக்கிறது.

தங்களுடைய சஞ்சலத்திற்கும், துக்கத்திற்கும் தங்களுடைய பாவங்களே காரணம் என்பதை எருசலேம் அங்கீரிக்கிறது. தங்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் தங்களைத் தண்டிக்கிறார் என்பதை எருசலேமின் குடிகள் புரிந்துகொள்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாதகங்களின் நுகம் கர்த்தருடைய கையால் அவர்கள்மீது பூட்டப்பட்டிருக்கிறது. அந்த நுகங்கள் இஸ்ரவேல் புத்திரர்மீது பிணைக்கப்பட்டிருக்கிறது. அவை அவர்களுடைய கழுத்தை சுற்றிக்கொண்டது (புல 1:14). இந்த நுகங்கள் அவர்களுடைய பாதகங்களின் நுகங்கள். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களுடைய பாவங்களை விசாரித்து, அவர்களுக்கு இப்போது தண்டனை கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய சொந்த மிலாறுகளால் அடிக்கப்படுகிறார்கள். தாங்கள் கர்த்தருக்கு விரோதமாக கடுந்துரோகம்பண்ணியதினால், கர்த்தர் தங்களை அடிப்பதை இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரிக்கிறார்கள். "நான் கடுந்துரோகம்பண்ணினபடியினால் என் இருதயம் வியாகுலப்படுகிறது; வெளியிலே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று, வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது" (புல 1:20) என்று எருசலேமின் குடிகள் வேதனையோடு சொல்லுகிறார்கள்.

கர்த்தர் நீதிபரர். இஸ்ரவேல் ஜனங்களோ அவருடைய வாக்குக்கு விரோதமாய் எழும்பினார்கள் (புல 1:18). அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கடுந்துரோகம்பண்ணினார்கள் (புல 1:20). பாவத்தின் தீங்குகளை விவரிப்பதற்கு நம்முடைய வார்த்தைகள் போதாது. பாவத்தின் சாபங்களையும், அதன் துரோகங்களையும், நாம் எப்படித்தான் விவரித்தாலும், அதை நம்மால் முழுமையாக விவரிக்க முடியாது.

பாவத்தை துரோகம் என்றோ, கடுந்துரோகம் என்றோ சொல்லலாம். நம்முடைய பாவங்களுக்கு நம்மிடத்தில் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் இருக்கவேண்டும். பாவம் செய்கிறவர்கள் எல்லோரும் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிறார்கள். துரோகம் கடுந்துரோகமாயிருக்கும்போது, நம்முடைய துக்கமும் கடுந்துக்கமாயிருக்கவேண்டும். நாம் துக்கப்படுவது நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படவேண்டும். நாம் செய்த பாவங்களையும், நாம் அனுபவிக்கும் துக்கங்களையும் நம்முடைய ஆத்துமா உணரவேண்டும்.

கர்த்தர் தனக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும் என்றும், தன்னை இந்த அளவுக்கு சஞ்சலப்படுத்திய சத்துருக்களை கர்த்தர் நியாயம் விசாரிக்கவேண்டும் என்றும், எருசலேம் கர்த்தரிடத்தில் முறையிடுகிறது. "கர்த்தாவே, பாரும், நான் நெருக்கப்படுகிறேன், என் குடல் கொதிக்கிறது" (புல 1:20) என்று எருசலேம் கர்த்தரிடத்தில் முறையிடுகிறது.

எருசலேம் சஞ்சலத்தாலும், துக்கத்தாலும் தவிக்கிறது. அவர்களை தேற்றுவதற்கு ஒருவருமில்லை. எருசலேமின் பகைஞர் எல்லோரும், அதற்கு வந்த ஆபத்தைக் கேட்டு சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தரே இந்த ஆபத்தை எருசலேமுக்கு வரப்பண்ணினார் என்று சத்துருக்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாள், தன்னை பாழாக்கின சத்துருக்கள்மீது வரவேண்டும் என்று, எருசலேம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறது. "நீர் கூறின நாளை வரப்பண்ணுவீர், அப்பொழுது அவர்களும் என்னைப் போலாவார்கள்" (புல 1:21) என்று விண்ணப்பம்பண்ணி, எருசலேம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளுக்காக காத்துக்கொண்டிருக்கிறது.

தேவனுடைய நாளிலே அவருடைய ஆலோசனைகள் நிறைவேறும். எருசலேம் நகரம் இப்போது அழிந்துபோயிருக்கிறது. எருசலேம் நகரத்திற்கு இப்போது சஞ்சலமும் துக்கமும் வந்திருக்கிறது. கர்த்தருடைய நாளிலே, எருசலேமின் சத்துருக்களும் அவர்களைப் போலாவார்கள். அவர்களும் அழிந்துபோவார்கள். அவர்களுக்கும் சஞ்சலமும் துக்கமும் வரும். கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரம் அவர்களுக்குக்கும் குடிக்க கொடுக்கப்படும். இப்போது இந்தப் பாத்திரம் எருசலேமின் கைகளிலிருக்கிறது. கர்த்தருடைய நாளில், அவருடைய உக்கிரத்தின் பாத்திரம், எருசலேமை அழித்துப்போட்ட அவளுடைய சத்துருக்களின் கைகளில் கொடுக்கப்படும்.

"நீர் கூறின நாளை வரப்பண்ணுவீர்" (புல 1:21) என்பது எருசலேம் கர்த்தரிடத்தில் கேட்கும் ஜெபவிண்ணப்பமாயிருக்கிறது. கர்த்தருடைய நாள் சீக்கிரத்தில் வரவேண்டும் என்று எருசலேம் விரும்புகிறது. தங்களுடைய மீறுதல்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தண்டனைகளை, தங்களுடைய சத்துருக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று எருசலேம் எதிர்பார்க்கிறது.

"அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் உமது முகத்துக்கு முன்பாக வரக்கடவது. என் சகல பாதகங்களினிமித்தமும் நீர் எனக்குச் செய்ததுபோல அவர்களுக்கும் செய்யும்" (புல 1:22) என்று எருசலேம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறது. எருசலேமுக்கு விரோதமாக அநேக ஜாதியார் ஒன்றுசேர்ந்து, கூட்டுச்சேர்ந்து, அதை அழித்துப்போட்டார்கள். அவர்கள் எல்லோருமே ஏகமாய் எருசலேமுக்கு பொல்லாப்பு செய்தார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் எல்லோர் மேலும் வரவேண்டும் என்று எருசலேம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறது.

நம்முடைய ஜெபம் கர்த்தருடைய வார்த்தையோடு ஒத்துப்போகவேண்டும். நம்முடைய சத்துருக்களையும் நாம் நேசிக்கவேண்டும். நமக்கு விரோதமாய் தீங்கு செய்தவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். கர்த்தர் நம்முடைய தப்பிதங்களை மன்னிப்பதுபோல, நாமும் பிறருடைய தப்பிதங்களை மன்னிக்கவேண்டும்.

அதே வேளையில், தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாகவும், தம்முடைய சபைக்கு விரோதமாகவும் தீங்கு செய்தவர்களை கர்த்தர் தண்டிப்பார் என்பதையும், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வரும் என்பதையும் நாம் விசுவாசிக்கவேண்டும். கர்த்தர் நம்மை நியாயந்தீர்த்ததுபோல, நம்முடைய சத்துருக்களையும் நியாயத்தீர்ப்பார் என்று விசுவாசித்து, அதற்காக ஜெபிக்கவேண்டும்.

நாம் வேதனைகளை அனுபவிக்கும் போது நம்முடைய பெருமூச்சுக்கள் மிகுதியாயிருக்கும். நம்முடைய இருதயம் பலட்சயமாயிருக்கும். அதுபோலவே எருசலேமுக்கும் இருந்தது. எருசலேம் தன்னுடைய சஞ்சலத்தினாலும், வருத்தத்தினாலும் "என் சகல பாதகங்களினிமித்தமும் நீர் எனக்கு செய்ததுபோல அவர்களுக்கும் செய்யும்" என்று ஜெபிக்கிறது.

2 அதிகாரம்

எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தின், இரண்டாவது அதிகாரம், முதலாவது வசனம் "ஈகா" என்னும் எபிரெய வார்த்தையோடு ஆரம்பமாகிறது. இந்த வார்த்தைக்கு "எங்களுக்கு ஐயோ" என்று பொருள். சீயோனின் துன்பத்திற்கு கர்த்தருடைய உக்கிர கோபமே காரணம் (புல 2:1-9). சீயோன் அழிந்துபோனதைப் பார்த்து சீயோனின் குமாரத்திகள் சஞ்சலப்படுகிறார்கள் (புல 2:10-19). கர்த்தர் தங்களுக்கு இரங்கவேண்டுமென்று இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள் (புல 2:20-22).

கர்த்தருடைய கோபம் புல 2:1-9

புல 2:1. ஐயோ! ஆண்டவர் தமது கோபத்தில் சீயோன் குமாரத்தியை மந்தாரத்தினால் மூடினார்; அவர் தமது கோபத்தின் நாளிலே தமது பாதபீடத்தை நினையாமல் இஸ்ரவேலின் மகிமையை வானத்திலிருந்து தரையிலே விழத்தள்ளினார்.

புல 2:2. ஆண்டவர் தப்பவிடாமல் யாக்கோபின் வாசஸ்தலங்களையெல்லாம் விழுங்கினார்; அவர் யூதா குமாரத்தியின் அரண்களையெல்லாம் தமது சினத்திலே இடித்து, தரையோடே தரையாக்கிப்போட்டார்; ராஜ்யத்தையும் அதின் பிரபுக்களையும் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்.

புல 2:3. அவர் தமது உக்கிரகோபத்திலே இஸ்ரவேலின் கொம்பு முழுவதையும் வெட்டிப் போட்டார்; சத்துருவுக்கு முன்பாக அவர் தமது வலதுகரத்தைப் பின்னாகத் திருப்பி, சுற்றிலும் இருப்பதைப் பட்சிக்கிற அக்கினிஜுவாலையைப்போல் யாக்கோபுக்கு விரோதமாக எரித்தார்.

புல 2:4. பகைஞனைப்போல் தம்முடைய வில்லை நாணேற்றினார்; சத்துருவைப்போல் தம்முடைய வலதுகரத்தை நீட்டிநின்று, கண்ணுக்கு இன்பமானதையெல்லாம் அழித்துப்போட்டார்; சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே தம்முடைய உக்கிரத்தை அக்கினியைப் போல் சொரியப்பண்ணினார்.

புல 2:5. ஆண்டவர் பகைஞன்போலானார்; இஸ்ரவேலை விழுங்கினார்; அதின் அரமனைகளையெல்லாம் விழுங்கினார்; அதின் அரண்களை அழித்து, யூதா குமாரத்திக்கு மிகுந்த துக்கிப்பையும் சலிப்பையும் உண்டாக்கினார்.

புல 2:6. தோட்டத்தின் வேலியைப்போல இருந்த தம்முடைய வேலியைப் பலவந்தமாய்ப் பிடுங்கிப்போட்டார்; சபைகூடுகிற தம்முடைய ஸ்தலங்களை அழித்தார்; கர்த்தர் சீயோனிலே பண்டிகையையும் ஓய்வுநாளையும் மறக்கப்பண்ணி, தமது உக்கிரமான கோபத்தில் ராஜாவையும் ஆசாரியனையும் புறக்கணித்துவிட்டார்.

புல 2:7. ஆண்டவர் தமது பலிபீடத்தை ஒழித்துவிட்டார்; தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்துவிட்டார்; அதினுடைய அரமனைகளின் மதில்களைச் சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தார்; பண்டிகை நாளில் ஆரவாரம்பண்ணுகிறதுபோல் கர்த்தரின் ஆலயத்தில் ஆரவாரம்பண்ணினார்கள்.

புல 2:8. கர்த்தர் சீயோன் குமாரத்தியின் அலங்கத்தை நிர்மூலமாக்க நினைத்தார்; நூலைப்போட்டார்; அழிக்காதபடித் தம்முடைய கையை அவர் முடக்கிக் கொண்டதில்லை; அரணிப்பையும் அலங்கத்தையும் புலம்பச்செய்தார்; அவைகள் முற்றிலும் பெலனற்றுக் கிடக்கிறது.

புல 2:9. அவள் வாசல்கள் தரையில் அமிழ்ந்திக்கிடக்கிறது; அவள் தாழ்ப்பாள்களை முறித்து உடைத்துப்போட்டார்; அவள் ராஜாவும் அவள் பிரபுக்களும் புறஜாதியாருக்குள் இருக்கிறார்கள்; வேதமுமில்லை; அவள் தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறதுமில்லை.

கர்த்தருடைய ஜனம் மிகுந்த வேதனையிலும், துக்கத்திலும் இருக்கிறார்கள். இவர்கள் யாக்கோபின் சந்ததியார். பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தருடைய ஜனத்தை அழைப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர், சீயோனின் குமாரத்திகள், எருசலேமின் குடிகள் ஆகிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலின் மகிமையைப்பற்றியும், அவர்களுடைய மேன்மையைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படவில்லை. கர்த்தருடைய கோபமான கரம் சீயோன் குமாரத்தியின்மீது எவ்வாறு வந்து இறங்கிற்று என்று இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். இஸ்ரவேலின் தேவன் தமது கோபத்தினால், யாக்கோபின் சந்ததியாரைத் தண்டிக்கிறார். கர்த்தரே தம்முடைய ஜனத்தை கண்டித்து திருத்துகிறார். கர்த்தருடைய கோபம் மிகவும் அதிகமாயிருக்கிறது.

பூர்வகாலத்தில் கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது பிரியமாயிருந்தார். இஸ்ரவேலின் தேவன், யாக்கோபின் சந்ததியாருக்கு சிநேகிதராயிருந்தார். இவையெல்லாம் பூர்வகாலத்து நிலமை. இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கோபமாயிருக்கிறார். யாக்கோபின் வம்சத்தாருக்கு விரோதமாக கர்த்தர் சத்துருவைப்போல தீங்கு செய்கிறார்.

கர்த்தருடைய கிருபையையும், அவருடைய சிலாக்கியத்தையும் தியானிப்பதற்கு "தேவனுடைய விரல்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். கர்த்தர் தம்முடைய கிரியைகளை தமது விரலினால் நடப்பிக்கிறார். கர்த்தர் தம்முடைய அன்பினால் நம்மைத் திருத்தும்போது, அதை எளிதாக சகித்துக்கொள்கிறோம். கர்த்தருடைய வார்த்தைகளைத் தாங்கிக்கொள்கிறோம். அதே கர்த்தர் தம்முடைய அன்பினால், நம்மை கண்டிக்கும்போது, கர்த்தருடைய கோபத்தை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. கர்த்தர் நம்மை அடிக்கும்போது, நம்முடைய காயம் மிகவும் ஆழமாகவும் அதிகமாகவும் இருக்கும்.

கர்த்தர் பட்சிக்கிற அக்கினி ஜுவாலையைப்போல் யாக்கோபுக்கு விரோதமாக எரிகிறார் *(புல 2:3)*. கர்த்தர் தமது கோபத்தை அவர்களுக்கு விரோதமாகக் காண்பிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய கோபத்தின் அக்கினியை பற்றியெரியச் செய்கிறது.

கர்த்தர் தமது சுபாவத்தில் அன்பானவர். கிருபையும் இரக்கமும் மிகுந்தவர். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரக்கம் காண்பிப்பதுபோல, கர்த்தரும் தம்முடைய ஜனத்திற்கு இரக்கம் காண்பிக்கிறார். அவர்கள்மீது அன்பாகயிருக்கிறார். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகள்மீது காரணமில்லாமல் கோபப்படுவதில்லை. கர்த்தருக்கு சாதாரணமாக கோபம் வராது. ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் பாவத்தினால் அவரை கோபப்பட வைத்துவிடுகிறார்கள். கர்த்தருடைய கோபத்திற்கு அவர்களே காரணமாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் இப்போது தம்முடைய ஜனத்திற்கு பகைஞனைப்போல இருக்கிறார். "ஆண்டவர் பகைஞன் போலானார்" *(புல 2:5)* என்று எரேமியா சொல்லுகிறார். அவர் பகைஞனைப்போல் தம்முடைய வில்லை நாணேற்றினார் *(புல 2:4)*.

கர்த்தர் சத்துருவைப்போல் தம்முடைய வலதுகரத்தை நீட்டிநின்று, கண்ணுக்கு இன்பமானதையெல்லாம் அழித்துப்போட்டார்; சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே தம்முடைய உக்கிரத்தை அக்கினியைப்போல் சொரியப்பண்ணினார் *(புல 2:4)*.

கர்த்தர் தமது உக்கிரகோபத்திலே இஸ்ரவேலின் கொம்பு முழுவதையும் வெட்டிப்போட்டார்; சத்துருவுக்கு முன்பாக அவர் தமது வலதுகரத்தைப் பின்னாகத் திருப்பி, சுற்றிலும் இருப்பதைப் பட்சிக்கிற அக்கினிஜுவாலையைப்போல் யாக்கோபுக்கு விரோதமாக எரிந்தார் (புல 2:3).

கர்த்தர் ஒருபோதும் தம்முடைய ஜனத்திற்கு பகைஞரல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். அவர்களைக் கண்டித்து திருத்துகிறார். ஆனாலும் சில சமயங்களில் ஆண்டவர் தம்முடைய ஜனத்திற்கு பகைஞனைப்போல இருக்கிறார். கர்த்தர் கோபப்படும்போது, அவர் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தமாட்டார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகப்பெரிய அழிவு உண்டாயிற்று. அவர்கள் எல்லாவற்றையும் இழந்துபோனார்கள். கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அவர்களைத் தண்டித்தார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நமக்கு சமாதானமாயிருக்கிறார். அவரே நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணுகிறவர். அவருடைய நாமம் சமாதான பிரபு என்று அழைக்கப்படுகிறது. அவர் பகையை சிலுவையில் அறைந்தார்.

பூர்வகாலத்தில் கர்த்தருடைய ஜனம் செழித்திருந்தார்கள். மற்ற தேசங்கள் மத்தியில் இஸ்ரவேல் தேசம் உயர்ந்திருந்தது. ஆனால் இப்போதோ ஆண்டவர் தமது கோபத்தில் சீயோன் குமாரத்தியை மந்தாரத்தினால் மூடியிருக்கிறார் (புல 2:1). மந்தாரம் கார்மேகம்போல இருக்கிறது.

நம்மை மந்தாரம் மூடும்போது, மந்தாரத்தின் வழியாக நம்மால் எதையும் தெளிவாகப் பார்க்க முடியாது. மந்தாரம் கார்மேகம்போல கருமையாக இருக்கும். மந்தாரம் நம்மை மூடும்போது, நம்மால் கர்த்தரை தரிசிக்க முடியாது.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு மேகஸ்தம்பம் அடையாளமாயிருந்தது. மேகம் அவர்களை பகல்வேளையில் வழிநடத்திற்று. ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, மேகம் அங்கு வந்து இறங்கிற்று. கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தை நிரப்பியதற்கு அடையாளமாக, மேகம் அந்த இடத்தை மூடிற்று.

சீயோன் குமாரத்தியை கர்த்தர் தமது மந்தாரத்தினால் மூடினார். இந்த மந்தாரம் வனாந்தரத்தில் காணப்பட்ட மேகஸ்தம்பம் போன்றதோ அல்லது ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட மேகம் போன்றதோ அல்ல. இந்த மந்தாரம் கர்த்தருடைய கோபத்தின் மேகம். இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலைக் கடந்தபோது, எகிப்தியர்களும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். இஸ்ரவேலருக்கு வழிகாட்டிய மேகஸ்தம்பம், எகிப்தியர் பக்கமாய்த் திரும்பிற்று. அங்கு காரிருள் உண்டாயிற்று. எகிப்தியர் எல்லோரும் செங்கடலில் மூழ்கினார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு மேகஸ்தம்பத்தைக் காண்பிக்கிறார். தம்முடைய சத்துருக்களுக்கோ மந்தாரத்தைக் காண்பிக்கிறார்.

"கர்த்தர் சத்துருவுக்கு முன்பாக தமது வலதுகரத்தை பின்னாகத் திருப்புகிறார்" (புல 1:3). இந்த வாக்கியத்திற்கு "கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் வலதுகரத்தை பின்னாகத் திருப்புகிறார்" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தர் தம்முடைய சத்துருவை அடிக்கும்போது, சத்துரு தன்னுடைய வலதுகரத்தினால், கர்த்தர் கொடுக்கும் அடியை தடுக்கவோ, தாங்கவோ முயற்சி செய்வான். கர்த்தர் சத்துருவின் வலதுகரத்தை பின்னாகத் திருப்பிவிட்டால், அவனுடைய வலதுகரம் செயலிழந்துபோகும். கர்த்தர் அடிக்கும்போது, சத்துரு தன்னுடைய வலதுகரத்தினால் அந்த அடியை தாங்கவோ தடுக்கவோ முடியாது. சத்துருவின் கை மரத்துப்போனதுபோல இருக்கும். அது செயலிழந்துபோகும்.

கர்த்தர் தமது உக்கிர கோபத்திலே இஸ்ரவேலின் கொம்பு முழுவதையும் வெட்டிப்போட்டார். அவர்களால் கர்த்தருடைய கோபத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. அந்தக் கோபத்தை அவர்களால் தாங்கிக்கொள்ளவும் முடியவில்லை. கர்த்தர் அவர்களுடைய வலதுகரத்தை பின்னாகத் திருப்பிவிட்டார். அவர்களுடைய வலதுகரம் செயலிழந்து மரத்துப்போயிற்று.

பூர்வகாலத்தில் எருசலேமும், யூதாவின் பட்டணங்களும் அரணிப்பான நகரங்களாயிருந்தது. அவையெல்லாமே பெலமான நகரமாயிருந்தது. கர்த்தரோ அந்தப் பட்டணங்களில் ஒன்றையும் தப்பவிடவில்லை. ஆண்டவர் யாக்கோபின் வாசஸ்தலங்களையெல்லாம் விழுங்கினார் (புல 2:2). யூதா மனுஷருக்கு பூரணமான அழிவு உண்டாயிற்று. கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டார். அவர் ஒன்றையும் மீதியாக வைக்கவில்லை.

கர்த்தர் இஸ்ரவேலை விழுங்கினார். அதின் அரமனைகளையெல்லாம் விழுங்கினார் (புல 2:5). யூதாதேசம் செழிப்பான தேசமாகவும், அரணிப்பான தேசமாகவும், வலுவான தேசமாகவும் இருந்தது. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலை விழுங்கிவிட்டார். அவர்களுடைய வாசஸ்தலங்களை அழித்துப் போட்டதுபோல, அவர்களுடைய அரணான அரமனைகளையும் அழித்துப்போட்டார்.

யூதாவின் அரணான பட்டணங்களெல்லாம் அழிந்துபோயிற்று. அவர்களுடைய வாசஸ்தலங்களெல்லாம் இடிந்துபோயிற்று. எருசலேமிலுள்ள தேவாலயம் அக்கினியில் எரிந்துபோயிற்று. அவர்களுடைய அரண்கள் அவர்களை பாதுகாக்கவில்லை. இதனால் யூதா குமாரத்திக்கு மிகுந்த துக்கிப்பும் சலிப்பும் உண்டாயிற்று. கர்த்தரே அவர்களுக்கு இந்த துக்கிப்பையும் சலிப்பையும் உண்டாக்கினார்.

எரேமியா தீர்க்கதரிசி எருசலேமுக்கு வந்த அழிவை இங்கு மறுபடியும் சொல்லுகிறார். கர்த்தர் எருசலேமிலுள்ள அரமனைகளின் மதில்களை சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தார். எருசலேமின் வாசல்கள் தரையில் அமிழ்ந்திக்கிடக்கிறது.

"ஆண்டவர் தமது பலிபீடத்தை ஒழித்துவிட்டார்; தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்துவிட்டார்; அதினுடைய அரமனைகளின் மதில்களைச் சத்துருவின் கையில் ஒப்புக்கொடுத்தார்; பண்டிகை நாளில் ஆரவாரம்பண்ணுகிறதுபோல் கர்த்தரின் ஆலயத்தில் ஆரவாரம்பண்ணினார்கள். கர்த்தர் சீயோன் குமாரத்தியின் அலங்கத்தை நிர்மூலமாக்க நினைத்தார்; நூலைப்போட்டார்; அழிக்காதபடித் தம்முடைய கையை அவர் முடக்கிக்கொண்டதில்லை; அரணிப்பையும் அலங்கத்தையும் புலம்பச்செய்தார்; அவைகள் முற்றிலும் பெலனற்றுக் கிடக்கிறது. அவள் வாசல்கள் தரையில் அமிழ்ந்திக்கிடக்கிறது; அவள் தாழ்ப்பாள்களை முறித்து உடைத்துப்போட்டார்; அவள் ராஜாவும் அவள் பிரபுக்களும் புறஜாதியாருக்குள் இருக்கிறார்கள்; வேதமுமில்லை; அவள் தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறதுமில்லை" (புல 2:7-9).

எருசலேமின் மதில்கள் கர்த்தருடைய ஜனத்தை பாதுகாக்கவில்லை. கர்த்தரே அவர்களுக்கு அக்கினி மதிலாகயிருக்க வேண்டும். கர்த்தர் அவர்களைச் சுற்றிலும் தமது அக்கினியினால் வேலியடைத்து பாதுகாக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாதுகாக்கவில்லை என்றால், அவர்களுக்கு வேறு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை.

கர்த்தருடைய ஜனத்திற்கு சில சமயங்களில் சேதமும், நாசமோசமும் வருகிறது. கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு தீங்கை வரவழைக்கிறார். இவையெல்லாம் அவருடைய தெய்வீக ஆலோசனையின் பிரகாரமாக நடைபெறுகிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் தம்முடைய ஜனத்தை தண்டிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அழிவு வரும்போது, கர்த்தர் நியமித்த அளவுக்குட்பட்டே அந்த அழிவு வரும். கர்த்தர் நியமித்த எல்லையைத் தாண்டி அவருடைய பிள்ளைகளுக்கு ஒரு தேசமும் உண்டாவதில்லை.

பூர்வகாலத்தில் இஸ்ரவேல் தேசம் செழித்திருந்தது. தாவீது, சாலொமோன் ஆகிய ராஜாக்களின் காலத்தில் சமஸ்த இஸ்ரவேலும் அதிக பெலனோடிருந்தது. இஸ்ரவேல் தேசத்தார் மற்ற தேசத்தாரைவிட பெலமுள்ளவர்களாயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் பெலவீனராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ராஜ்யத்தையும் அதின் பிரபுக்களையும் பரிசுத்த குலைச்சலாக்கினார் (புல 2:2).

இஸ்வேல் ஜனங்களும் அவர்களுடைய பிரபுக்களும் கர்த்தரை விட்டுவிட்டு அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்கள் விக்கிரகங்களினால் தங்களை அசுத்தப்படுத்தி தீட்டுப்படுத்தினார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கும் வண்ணமாய் இஸ்ரவேல் ராஜ்யத்தையும், அதின் பிரபுக்களையும் பரிசுத்த குலைச்சலாக்கினார்.

கர்த்தர் உக்கிரமான கோபத்தில் ராஜாவையும் ஆசாரியனையும் புறக்கணித்து விட்டார் (புல 2:6). இவர்கள் தோட்டத்தின் வேலியைப்போல, இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய வேலியாகயிருந்தார்கள். கர்த்தரோ தம்முடைய வேலியை பலந்தமாய்ப் பிடுங்கிப்போட்டார். சபை கூடுகிற தம்முடைய ஸ்தலங்களை கர்த்தர் அழித்தார். கர்த்தர் சீயோனிலே பண்டிகையையும் ஓய்வுநாளையும் மறக்கப்பண்ணினார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் ராஜாக்களும், அவர்களுடைய பிரபுக்களும் புறஜாதியாருக்குள் இருக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பில் அடிமைகளாகயிருக்கிறார்கள். அவர்களுடைய கிரீடங்கள் அவர்களுடைய தலைகளிலிருந்து கீழே விழுந்துவிட்டது. ராஜாக்களுக்குரிய மரியாதை அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அவர்கள் சிறையிருப்பில் அடைக்கப்பட்டு வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் ராஜாக்களும் பிரபுக்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். தங்களுடைய பாவங்களினால் தங்களை தீட்டுப்படுத்தி அசுத்தப்படுத்தினார்கள். அவர்களுடைய பாவம், அவர்களுடைய மகிமையை அவர்களை விட்டு நீக்கிப்போட்டது.

கர்த்தரோ தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால், இஸ்ரவேலின் ராஜாக்களை அவர்களுடைய சிங்காசனத்திலிருந்து கீழே தள்ளிவிடுகிறார். அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பி, அவர்களுடைய மகிமையையும், நீக்கிப்போடுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களும், அவர்களுடைய ராஜாக்களும் பிரபுக்களும், தங்களுடைய பாவங்களினிமித்தமாய் வேதனைகளையும் தண்டனைகளையும் அனுபவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை புறக்கணித்தார்கள். கர்த்தர் அவர்களை புறக்கணித்துவிட்டார். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து கர்த்தரை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் ராஜ்யத்தையும் அதின் பிரபுக்களையும் பரிசுத்த குலைச்சலாக்கினார்.

பூர்வகாலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தார்கள். பண்டிகைகளையும் ஓய்வுநாளையும் பரிசுத்தமாய் ஆசரித்தார்கள். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக அவர்கள் மத்தியில் உடன்படிக்கைப் பெட்டியிருந்தது. இஸ்ரவேல் ஜனத்தாரின் பரிசுத்தமே அவர்களுக்கும், கர்த்தருடைய ஆலயத்திற்கும் மெய்யான அழகாயிருந்தது. இப்போதோ அவர்களிடத்தில் பரிசுத்தமுமில்லை. இஸ்ரவேலில் மெய்யான அழகுமில்லை. இஸ்ரவேலின் மகிமை அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி கிருபாசனத்திற்கு கீழிருந்தது. அது சேராபீன்களுக்கு நடுவில் வைக்கப்பட்டிருந்தது. ஆசாரிப்புக்கூடாரத்திலும், கர்த்தருடைய ஆலயத்திலும், மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. இது கர்த்தருடைய பாதபீடம். கர்த்தரோ தமது கோபத்தின் நாளிலே, தமது பாதபீடத்தை நினையாமல், இஸ்ரவேலின் மகிமையை வானத்திலிருந்து தரையிலே விழத்தள்ளினார் (புல 2:1).

"அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன்" (1நாளா 28:2).

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்" (சங் 99:5). "அவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து, அவர் பாதபடியில் பணிவோம்" (சங் 132:7).

தேவாலயத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்தில், கர்த்தருடைய ஷேக்கைனா மகிமை தங்கியிருக்கும். கர்த்தரோ இப்போது தமது பாதபீடத்தை நினைக்கவில்லை. கல்தேயர்கள் தேவாலயத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியையும் உடைத்துப்போட்டார்கள். உடன்படிக்கைப் பெட்டியையும், தேவாலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையும் பாபிலோன் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். தேவாலயத்தில் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகயிருந்த உடன்படிக்கைப் பெட்டி, தேவாலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பின்பு, கர்த்தருடைய பிரசன்னமும் தேவாலயத்திலிருந்து விலகிப்போயிற்று. கர்த்தரும் அவருடைய ராஜ்யமும் பாதபீடமில்லாமல் இருக்கிறது. சீயோன் குமாரத்தின் கூடாரத்தில் கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை அக்கினியைப்போல் சொரியப்பண்ணினார் (புல 2:4).

கர்த்தருடைய ஆலயத்திலே ஊழியம் செய்கிறவர்களுக்கு, அவருடைய உடன்படிக்கைப் பெட்டியும், பரிசுத்த பணிமுட்டுக்களும், அவர்களுடைய கண்களுக்கு இன்பமானவையாயிருந்தது. ஆனால் கர்த்தரோ சத்துருவைப்போல் தம்முடைய வலது கரத்தை நீட்டி நின்று, சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே கண்ணுக்கு இன்பமானதையெல்லாம் அழித்துப்போட்டார்.

"அவளுடைய நசரேயர் உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப் பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப் பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள். இப்பொழுதோ அவர்களுடைய முகம் கரியிலும் கறுத்துப்போயிற்று; வீதிகளில் அறியப்படார்கள்; அவர்கள் தோல் அவர்கள் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு, காய்ந்த மரத்துக்கு ஒப்பாயிற்று" (புல 4:7,8).

சீயோன் குமாரத்தியின் கண்ணுக்கு இன்பமானது உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையுமாயிருந்தது. ஆனால் கல்தேயர்கள் அவற்றை உடைத்துப்போட்டார்கள்.

தேவனுடைய கூடாரமே கர்த்தருடைய ஆலயம். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும் படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" (சங் 27:4). கர்த்தரோ சபை கூடுகிற தம்முடைய ஸ்தலங்களை அழித்தார் (புல 2:6). ஆசரிப்புக்கூடாரத்தின் முளைகளைப் பிடுங்கிப்போட்டார். அதின் கயிறுகளை அறுத்துப்போட்டார். இனிமேல் அது ஆசரிப்புக்கூடாரமாக ஸ்தாபிக்கப்பட முடியாது. தோட்டத்தின் வேலியைப்போலிருந்த தம்முடைய வேலியை கர்த்தர் பலவந்தமாய்ப் பிடுங்கிப்போட்டார் (புல 2:6).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய ஆசரிப்புக்கூடாரத்தை தீட்டுப்படுத்தினார்கள். கர்த்தரோ தம்முடைய நீதியினால் தம்முடைய வாசஸ்தலத்தை அவர்கள் மத்தியிலிருந்து அழித்துப்போடுகிறார். கர்த்தர் தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்துவிட்டார் (புல 2:7). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் பாவம் செய்து, தங்களுடைய பாவத்தினால் தேவாலயத்தை தீட்டுப்படுத்தினார்கள். கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர். அவர் பாவத்தைத் தவிர வேறு எதையும் வெறுக்கிறவரல்ல. தம்முடைய ஆலயத்தில் பாவம் பிரவேசித்ததினால், கர்த்தர் தமது பரிசுத்த ஸ்தலத்தையே வெறுத்துவிடுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் அவருக்கு இன்பமானது. அது கர்த்தருடைய நித்திய வாசஸ்தலம். "இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்" *(சங் 132:14).* ஆனாலும் தம்முடைய ஆலயத்தில் பாவம் பிரவேசித்து, அதை தீட்டுப்படுத்தியதினால், கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தையே வெறுத்துவிடுகிறார்.

கர்த்தர் சபை கூடுகிற தம்முடைய ஸ்தலங்களை அழித்தார் *(புல 2:6).* சபை கூடுகிற கர்த்தருடைய ஸ்தலங்கள் என்பது ஜெபாலயங்களையும், தீர்க்கதரிசிகளின் பாடசாலைகளையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சத்துருக்களோ இவையெல்லாவற்றையும் அக்கினியினால் எரித்துப்போடுகிறார்கள்.

"அவர்களை ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப் போட்டார்கள்" *(சங் 74:8).*

இஸ்ரவேல் வம்சத்தார் பண்டிகைகளையும் ஒய்வுநாளையும் பரிசுத்தமாய் ஆசரிப்பது வழக்கம். அவர்கள் இந்தப் பரிசுத்த நாட்களை நினைவுகூர்ந்து, அதை பயபக்தியோடு ஆசரித்து, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் சீயோனிலே பண்டிகையையும் ஓய்வுநாளையும் மறக்கப்பண்ணிவிடுகிறார் *(புல 2:6).*

சீயோன் இப்போது அழிந்து கிடக்கிறது. சீயோனிலே ஒருவருமில்லை. எல்லாம் பாழாய்ப்போயிற்று. சீயோனில் ஒய்வுநாளுக்கும் மற்ற நாட்களுக்கும் வித்தியாசமில்லாதபடியிருக்கிறது. சீயோனிலே மனுஷரும் இல்லை. வீடுகளும் இல்லை. எல்லாம் அழிந்துபோயிற்று. எல்லா நாளுமே ஒய்வுநாளைப்போல இருக்கிறது. அங்கே ஒரு வேலையும் நடைபெறவில்லை. ஒவ்வொரு நாளும் துக்கநாளைப்போல இருக்கிறது. சீயோனிலே ஜனங்கள் பண்டிகையையும் ஓய்வுநாளையும் மறந்துவிட்டார்கள்.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் ஆசாரியர்கள் பலிகளையும் காணிக்கைகையும் செலுத்துவது வழக்கம். ஆண்டவர் தேவாலயத்திலுள்ள தமது பலிபீடத்தை ஒழித்துவிட்டார். கர்த்தர் அவர்களுடைய பலிகளில் பிரியப்படவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் பூர்வகாலத்தில் கர்த்தருக்கு பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி அவரை மகிமைப்படுத்தினார்கள். இப்போதோ கர்த்தர் அவர்களுடைய பலிகளில் மகிமைப்படவில்லை. ஆண்டவர் தமது பலிபீடத்தையே ஒழித்துவிட்டார்.

பலிபீடம் கர்த்தருடைய பரிசுத்தமான மேஜை. அதுவே கர்த்தர் போஜனம்பண்ணும் இடம். தேவாலயத்தில் இப்போது கர்த்தருடைய பிரசன்னம் இல்லை. ஆகையினால் கர்த்தர் போஜனம்பண்ணுவதற்கு பலிபீடமும் தேவைப்படவில்லை. கர்த்தர் தமக்கு தேவையில்லாத பலிபீடத்தை தேவாலயத்திலிருந்து ஒழித்துவிட்டார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு இனிமேல் விருந்து கொடுக்கவுமாட்டார். அவர்களோடு விருந்து புசிக்கவுமாட்டார்.

இஸ்ரவேல் தேசத்தில் தீர்க்கதரிசிகளும், நியாயப்பிரமாணத்தை உபதேசிக்கிறவர்களும் இருந்தார்கள். இப்போதோ இஸ்ரவேல் தேசத்தில் வேதம் இல்லை. ஜனங்கள் வேதம் வாசிப்பதில்லை. வேதபாரகர்கள் வேதவாக்கியங்களை வியாக்கியானம் பண்ணுவதுமில்லை. கல்தேயர்கள் உடன்படிக்கைப்பெட்டியை எடுத்துச் சென்றபோது, நியாயப்பிரமாண புஸ்தகச்சுருள்களையும் தங்களோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

அவர்களுடைய தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரால் தரிசனம் கிடைக்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்தினார்கள். தீர்க்கதரிசிகள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட செய்திகளை ஜனங்களுக்கு சொன்னார்கள். அவர்களோ தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரால் கிடைத்த தரிசனத்தையும் அவர்கள் மதிக்கவில்லை. இதனால் தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரால் தரிசனம் கிடைப்பது நின்றுபோயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் தீர்க்கதரிசிகளும் இல்லை. அவர்களுக்கு தரிசனமும் கிடைக்கவில்லை.

சீயோன் குமாரத்தியின் புலம்பல்
புல 2:10-22

புல 2:10. சீயோன் குமாரத்தியின் மூப்பர்கள் தரையில் உட்கார்ந்து மௌனமாய் இருக்கிறார்கள்; தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக்கொள்ளுகிறார்கள்; இரட்டு உடுத்தியிருக்கிறார்கள்; எருசலேமின் கன்னியர்கள் தலைகவிழ்ந்து தரையை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

புல 2:11. என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுக்குதலினிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது; என் குடல்கள் கொதிக்கிறது; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது; குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கிறார்கள்.

புல 2:12. அவைகள் குத்துண்டவர்களைப் போல நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கும் போதும், தங்கள் தாய்களின் மடியிலே தங்கள் பிராணனை விடும்போதும், தங்கள் தாய்களை நோக்கி: தானியமும் திராட்சரசமும் எங்கே என்கிறார்கள்.

புல 2:13. எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர்சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?

புல 2:14. உன் தீர்க்கதரிசிகள் அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை உனக்காகத் தரிசித்தார்கள்; அவர்கள் உன் சிறையிருப்பை விலக்கும்படி உன் அக்கிரமத்தை எடுத்துக்காட்டாமல், அபத்தமானவைகளையும் கேடானவைகளையும் உனக்காக தரிசித்தார்கள்.

புல 2:15. வழிப்போக்கர் யாவரும் உன்பேரில் கை கொட்டுகிறார்கள்; எருசலேம் குமாரத்தியின்பேரில் ஈசற்போட்டு, தங்கள் தலைகளைத் துலுக்கி: பூரணவடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரம் இதுதானா என்கிறார்கள்.

புல 2:16. உன் பகைஞர் எல்லாரும் உன்பேரில் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்; ஈசற்போட்டுப் பற்கடிக்கிறார்கள்; அதை விழுங்கினோம், நாம் காத்திருந்த நாள் இதுவே, இப்பொழுது நமக்குக் கிடைத்தது, அதைக் கண்டோம் என்கிறார்கள்.

புல 2:17. கர்த்தர் தாம் நினைத்ததைச் செய்தார்; பூர்வநாட்கள் முதற்கொண்டு தாம் கட்டளையிட்ட தமது வார்த்தையை நிறைவேற்றினார்; அவர் தப்பவிடாமல் நிர்மூலமாக்கி, உன்மேல் பகைஞன் சந்தோஷிக்கும்படி செய்தார்; உன் சத்துருக்களின் கொம்பை உயர்த்தினார்.

புல 2:18. அவர்கள் இருதயம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகிறது; சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே.

புல 2:19. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு.

புல 2:20. கர்த்தாவே, யாருக்கு இந்தப்பிரகாரமாகச் செய்தீரென்று நோக்கிப்பாரும்; ஸ்திரீகள் கைக்குழந்தைகளாகிய தங்கள் கர்ப்பக்கனியைத் தின்னவேண்டுமோ? ஆண்டவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியனும் தீர்க்கதரிசியும் கொலைசெய்யப்படவேண்டுமோ?

புல 2:21. இளைஞனும் முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் தரையிலே கிடக்கிறார்கள்; என் கன்னிகைகளும் என் வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்கள்; உமது கோபத்தின் நாளிலே வெட்டி, அவர்களைத் தப்பவிடாமல் கொன்றுபோட்டீர்.

புல 2:22. பண்டிகைநாளில் கும்புகளை வரவழைப்பதுபோல் சுற்றிலுமிருந்து எனக்குத் திகில்களை வரவழைத்தீர்; கர்த்தருடைய கோபத்தின் நாளிலே தப்பினவனும் மீதியானவனுமில்லை; நான் கைகளில் ஏந்தி வளர்த்தவர்களை என் பகைஞன் நாசம்பண்ணினான்.

எரேமியா எழுதின இந்த புஸ்தகத்திற்கு "புலம்பல்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. எசேக்கியேலின் புஸ்தகசுருளிலே (எசே 2:10) எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்களைப்போலவே, எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

பூர்வகாலத்தில் இஸ்ரவேல் தேசம் செழித்திருந்தது. அவர்களுடைய நியாயாதிபதிகளும், அதிகாரிகளும், அவர்களுடைய உத்தியோகத்திற்குரிய பிரத்தியேகமான அங்கிகளை அணிந்திருந்தார்கள். அவர்களுடைய அங்கிகள் அவர்களிடமிருந்து உரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் இரட்டு உடுத்தியிருக்கிறார்கள். துக்கப்படுகிறவர்களும், புலம்புகிறவர்களும் இரட்டு உடுத்தியிருப்பார்கள். அவர்களைப் போலவே சீயோன் குமாரத்தியின் மூப்பர்கள் தரையில் உட்கார்ந்து மௌனமாய் இருக்கிறார்கள்; தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக்கொள்ளுகிறார்கள்; இரட்டு உடுத்தியிருக்கிறார்கள் (புல 2:10).

எருசலேமின் மூப்பர்கள் நியாயாசனங்களில் உட்கார்ந்து வழக்குகளை விசாரிப்பது வழக்கம். தாவீதின் வம்சத்தார் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்தார்கள். இப்போதோ அவர்கள் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்காமல் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய துக்கம் அதிகமாயிருக்கிறது. அவர்களுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. அவர்கள் மௌனமாயிருக்கிறார்கள்.

எருசலேமின் கன்னியர்கள் தலைகவிழ்ந்து தரையை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கன்னியர்கள் எப்போதுமே சந்தோஷமாகவும், ஆடல் பாடலோடும் மகிழ்ச்சியாயிருப்பது வழக்கம். ஆனால் இப்போதோ அவர்களை துக்கம் சூழ்ந்திருக்கிறது. அவர்களுடைய இருதயத்தை வேதனை நிரப்பியிருக்கிறது. அவர்களால் தங்கள் தலைகளை உயர்த்தி சந்தோஷமாயிருக்க முடியவில்லை. அவர்கள் தலைகவிழ்ந்து, துக்கத்தோடு தரையை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

எருசலேமின் ஜனங்கள் தங்கள் வேதனைகளைத் தாங்கமுடியாமல் அழுது புலம்பும்போது, எரேமியா தீர்க்கதரிசியும் அவர்களோடுகூட அழுகிறார். "என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுக்குதலி னிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது; என் குடல்கள் கொதிக்கிறது; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது; குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கிறார்கள்" (புல 2:11) என்று சொல்லி எரேமியா அழுது புலம்புகிறார்.

எரேமியாவால் இதற்குமேல் அழமுடியவில்லை. அவர்களுடைய கண்களின் கண்ணீர்கள் வற்றிப்போகும் வரையிலும் அழுகிறார். அவருடைய கண்கள் பூத்துப்போகும் வரையிலும் அழுகிறார். எரேமியாவால் பார்க்கக்கூட முடியவில்லை.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை சிறைப்பிடித்தபோது, அவர்கள் எரேமியாவுக்கு சலுகை காண்பித்தார்கள். அவரை பட்சமாய் நடத்தி அவருக்கு ஆதரவு கொடுத்தார்கள். யூதாதேசத்திலுள்ள மற்ற ஜனங்களைவிட எரேமியா அதிகமான சலுகைகளையும், அதிகமான சிலாக்கியங்களையும் கல்தேயரிடத்தில் பெற்றுக்கொண்டார். யூதா அழிந்துபோகும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக யூதாதேசம் அழிந்துபோயிற்று. எரேமியா சொன்ன வார்த்தைகள் உண்மையாயிற்று.

ஆனாலும் அழிந்துபோனவர்கள் யூதாவின் மனுஷர்கள். அவர்கள் சீயோனின் குமாரத்திகள். தன்னுடைய ஜனமாகிய குமாரத்தி நொறுங்கிப்போனதைப் பார்த்து எரேமியா கண்ணீர்விட்டு அழுகிறார். அவருக்கு யூதாஜனங்கள்மீது அன்பும் பாசமும் இருக்கிறது. எரேமியா அவர்களைப்போல அதிகமான துன்பங்களை அனுபவிக்காவிட்டாலும், அவர்கள் எல்லோரையும்விட, எரேமியாவே சீயோன் குமாரத்தியின் நொறுங்குதலினிமித்தம் அதிகமாய்க் கண்ணீர் விட்டழுகிறார்.

எருசலேம் ஜனத்தாரின் இருதயம் ஆண்டவரை நோக்கி கூப்பிடுகிறது (புல 2:18). யூதர்களில் சிலர் தங்களுக்கு வந்திருக்கிற வேதனைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல், கர்த்தரை நோக்கி கோபமாக கூப்பிடுகிறார்கள். அவரிடத்தில் கோபத்தோடு முறையிடுகிறார்கள். அதே வேளையில் யூதர்களில் அநேகர் தங்களுடைய வேதனைகளையும் பாடுகளையும் கர்த்தரிடத்தில் கண்ணீரோடு சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தங்களுக்கு காண்பிக்கப்பட வேண்டும் என்று வாஞ்சையோடு ஜெபிக்கிறார்கள்.

"சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (புல 2:18,19) என்று எரேமியா இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் சொல்லுகிறார்.

"சீயோன் குமாரத்தியின் மதிலே" என்னும் வாக்கியம் மதிலின்மீது நிற்கும் யூதர்களையோ அல்லது மதில்கள்மீது நிற்கும் ஜாமக்காரரையோ குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது" (ஏசா 62:6).

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைப் பிடித்து, ஒரு மாதத்திற்கு பின்பு அதின் மதில்களை இடித்துப்போட்டார்கள். எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டதற்காக சீயோனின் குமாரத்திகள் ஓயாமல் கண்ணீர் விட்டழுகிறார்கள். நெகேமியாவும் இடிந்துபோன எருசலேமின் மதிலைப் பார்த்து அழுது புலம்பினார்.

"அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணினேன்" (நெகே 1:3,4).

சீயோன் குமாரத்தி இரவும் பகலும் இடைவிடாமல் அழவேண்டும். அழுகையை நிறுத்திவிடக்கூடாது. நதியவ்வளவு கண்ணீர் விடவேண்டும். அவளுடைய கண்ணின் கருப்பு விழி சும்மாயிருக்கக்கூடாது. எருசலேம் இப்போது அழிந்துபோயிருக்கிறது. அது இன்னும் அழிந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஒவ்வொரு நாளும் சீயோனுக்கு அழிவின்மேல் அழிவு வருகிறது. ஆகையினால் சீயோன் குமாரத்தி தன்னுடைய அழுகையை நிறுத்திவிடக்கூடாது. இருதயத்தில் பெருமையுள்ளவர்கள் தங்களைத் தாழ்த்தும் வரையிலும் சீயோன் குமாரத்தி அழவேண்டும். கடின இருதயமுள்ளவர்களின் இருதயம் மென்மையாகும் வரையிலும் சீயோன் குமாரத்தி இரவும் பகலும் இடைவிடாமல் அழவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய புலம்பலுக்கான காரணங்கள் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. ஏராளமானோர் பஞ்சத்தினாலும் பசியினாலும், பட்டினியினாலும் அழிந்துபோகிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று. "மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்" *(எரே 14:1)*. இதனால் அவர்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. தானியம் விளையவில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கு எல்லாவற்றிலும் குறைவு உண்டாயிற்று.

இப்போது எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் கல்தேயர்கள் முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். கர்த்தரே கல்தேயர்களை தம்முடைய ஜனத்திற்கு விரோதமாக வரவழைத்திருக்கிறார். எருசலேம் நகரத்திற்குள்ளேயோ அல்லது எருசலேம் நகரத்திற்கு வெளியேயோ யாராலும் போகமுடியவில்லை. அலங்கங்களின் கதவுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கிறது. நகரத்திற்குள்ளே பஞ்சமுண்டாயிற்று. ஜனங்கள் பசியினாலும் பட்டினியினாலும் வேதனைப்படுகிறார்கள்.

எருசலேமிலே குழந்தைகளும் பாலகர்களும், "தங்கள் தாய்களின் மடியிலே தங்கள் பிராணனை விடும்போதும், தங்கள் தாய்களை நோக்கி: தானியமும் திராட்சரசமும் எங்கே" *(புல 2:12)* என்று பசியோடு கேட்கிறார்கள்.

எல்லா தெருக்களின் முனைகளிலும் இஸ்ரவேல் ஜனத்தாரின் குழந்தைகள் பசியினால் மூர்ச்சித்துப்போகிறார்கள் *(புல 2:19)*. ஒரு சில ஸ்திரீகள் தங்களுடைய பசியையும் பட்டினியையும் தாங்கிக்கொள்ள முடியாமல், கைக்குழந்தைகளாகிய தங்கள் கர்ப்பக்கனியைத் தின்கிறார்கள் *(புல 2:20)*.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தின்ற சம்பவம், சமாரியா முற்றிக்கையிலிருந்த காலத்திலும் நடைபெற்றிருக்கிறது. "அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி: நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்து விட்டாள் என்றாள்" *(2இராஜா 6:29)*.

எருசலேம் குடிகளில் ஏராளமானோர் பட்டயத்தால் செத்துப்போகிறார்கள். கல்தேயர்கள் ஈவு இரக்கம் பார்க்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பெரியோரையும், சிறியோரையும் தங்கள் பட்டயத்தால் வெட்டிக்கொன்றுபோடுகிறார்கள். இஸ்ரவேலின் சத்துருக்கள் கொடூரகுணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் வயது வித்தியாசம் எதுவும் பார்ப்பதில்லை.

ஆண்டவருடைய பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரியனும் தீர்க்கதரிசியும் கொலைசெய்யப்பட்டார்கள். இளைஞனும், முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் செத்துக்கிடக்கிறார்கள். எருசலேமின் கன்னிகைகளும் அவருடைய வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்கள் *(புல 2:21)*. கர்த்தரை தமது கோபத்தின் நாளில், தம்முடைய பிள்ளைகளை வெட்டி, அவர்களை தப்பவிடாமல் கொன்றுபோட்டார். இது கர்த்தருடைய செய்கை.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் ஜனத்தாரை வெட்டினாலும், அவர்களை தப்பவிடாமல் கொன்றுபோட்டாலும், அவர்கள் செத்துப்போனதற்காக கர்த்தர் பரிதாபப்படவில்லை, மனம் வருத்தப்படவும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாய், கர்த்தருடைய ஆத்துமாவைத் துக்கப்படுத்தினார்கள்.

நாம் வேதனைப்படும்போது கர்த்தரே நம்மைத் தேற்றவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் மாத்திரமே நமக்கு மெய்யான ஆறுதல் உண்டு. கர்த்தர் நம்மைத் தேற்றவில்லையென்றால், நம்முடைய வேதனை மிகவும் அதிகமாயிருக்கும். நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தரே கொன்றுபோடுகிறார். அதே வேளையில் அவர் அவர்களை தேற்றவும் மறுத்துவிடுகிறார்.

"எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர்சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?" (புல 2:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை அனுப்பவில்லை. ஆனால் அவர்களோ கர்த்தரே தங்களை அனுப்பியதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து வார்த்தைகளையும், தரிசனங்களையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் கள்ளத்தீர்க்கதரிசிகள், அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை எருசலேமின் குடிகளுக்காக தரிசிக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாதேசத்திலே இருந்த கள்ளத்தீர்க்கதரிசிகளுக்காக ஏற்கெனவே கவலையோடு புலம்பியிருக்கிறார்.

"அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார் என்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே" (எரே 14:13) என்று எரேமியா ஏற்கெனவே கர்த்தரிடத்தில் முறையிட்டார்.

எரேமியா மறுபடியுமாக, தன்னுடைய புலம்பல் பாடலில், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்காக புலம்புகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் யூதர்களுடைய சிறையிருப்பை விலக்கும்படி, அவர்களுடைய அக்கிரமத்தை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ, யூதருக்கு பிரயோஜனமான எதையும் சொல்லாமல், செய்யாமல், அபத்தமானதையும் கேடானதையும் அவர்களுக்காக தரிசிக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய சொந்த வார்த்தைகளை கர்த்தருடைய வார்த்தைகள் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய தரிசனங்களெல்லாம் அபத்தமும், வியர்த்தமும், கேடானதுமாயிருக்கிறது. அவை கர்த்தர் கொடுத்த தரிசனமல்ல. தங்களுடைய தரிசனங்கள் பொய்யானவை என்பது கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் அவர்கள் யூதாவின் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். தாங்கள் செய்வது பாவம் என்று தெரிந்திருந்தும், கள்ளத்தீர்க்கதரிசிகள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய நல்ல தீர்க்கதாசிகளைப்போல நடித்து, பொய்யான வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கள்ளத்தீர்க்கதரிசிகளை ஆளுகை செய்கிறார்கள். தங்களுக்கு என்னென்ன வார்த்தைகளைச் சொல்லவேண்டும் என்றும், அதை எங்கு, எப்போது, எப்படி சொல்லவேண்டும் என்றும் யூதாவின் மனுஷர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கட்டளை கொடுக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, அவர்களை பிரியப்படுத்துவதற்காக, அவர்களுக்கு பிரியமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் யூதா மனுஷருடைய இருதயங்களை அறிந்து, அதற்கேற்ற பிரகாரம் தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகள், ஜனங்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை பூரணமாகச் சொல்லவேண்டும். அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கவேண்டும். அவர்கள் அநியாயம் செய்யும்போது, அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்கவேண்டும். ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப, தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். அவர்களை அழிவுக்கு தப்பிக்க வைக்க தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்யவேண்டும். இதுவே தீர்க்கதரிசிகளைக் குறித்து கர்த்தருடைய திட்டம்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு ஜனங்களைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு அப்படியே சொன்னால், அவர்கள் வருத்தப்படுவார்கள் என்றும், தங்கள்மீது பிரியமாயிருக்கமாட்டார்கள் என்றும், தங்களுக்கு கொடுக்க விரும்பும் பொருளாதார ஆசீர்வாதங்களை நிறுத்திவிடுவார்கள் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நன்றாய்த் தெரியும். இதனால் அவர்கள் ஜனங்களுடைய அக்கிரமத்தை எடுத்துக்காட்டுவதில்லை.

யூதர்களுடைய சிறையிருப்புக்கு, அவர்களுடைய அக்கிரமங்களே காரணம். அவர்களுடைய சிறையிருப்பை விலக்கவேண்டும் என்னும் விருப்பம் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு இல்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய சுயநலத்தையும், தங்களுடைய வருமானத்தையும், ஜனங்கள் மத்தியில் தங்களுக்கு இருக்கும் மதிப்பையும், மரியாதையையும் பற்றி மாத்திரமே அக்கரையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

எருசலேம் நகரம் ஒரு காலத்தில், பூமியிலே மகிழ்ச்சியான நகரமாயிருந்தது. இப்போதோ அது அழுது புலம்புகிறது. எருசலேமிலே பூரண வடிவமில்லை. அதற்கு அழகில்லை. அலங்கங்கள் இடிந்து கிடக்கிறது. அரமனைகள் பாழாய்க்கிடக்கிறது. தங்களுடைய அழிவைப் பார்த்து, எருசலேமின் குடிகள் அழுது புலம்புகிறார்கள்.

எருசலேமின் வழியாய் ஏராளமான வழிப்போக்கர்கள் போகிறார்கள். அவர்களுக்கு எருசலேமின் முந்திய காலத்து செழிப்பும், சந்தோஷமும் தெரியும். இப்போது அது ஒன்றுமில்லாமல் பாழாய்க்கிடக்கிறது. இதனால் வழிப்போக்கர் யாவரும், எருசலேமின் பேரில் கைகொட்டுகிறார்கள். எருசலேமை ஏளனம்பண்ணுகிறார்கள். எருசலேம் குமாரத்தியின்பேரில் ஈசற்போட்டு, தங்கள் தலைகளைத் துலுக்கி: பூரணவடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரம் இதுதானா என்று ஏளனமாய் கேட்கிறார்கள் (புல 2:15).

"பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார்" (சங் 50:2). சீயோனின் பூரண வடிவம் சிதைந்துபோயிற்று. தேவன் இன்னும் பிரகாசமாயிருக்கிறார். கர்த்தர் நித்திய பிரகாசமுள்ளவர். ஆனால் சீயோனின் பிரகாசம் மங்கிப்போயிற்று. சீயோனின் அழகு குலைந்துபோயிற்று.

எருசலேமின் அண்டை தேசத்தாரில் அநேகர் அவர்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய இஸ்ரவேலுக்கு பகைஞராயிருக்கிறார்கள். எருசலேமின் பகைஞர் எல்லாரும் அதன்பேரில் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்; ஈசற்போட்டுப் பற்கடிக்கிறார்கள்; "அதை விழுங்கினோம், நாம் காத்திருந்த நாள் இதுவே, இப்பொழுது நமக்குக் கிடைத்தது, அதைக் கண்டோம்" (புல 2:16) என்று எருசலேமின் பகைஞர் சொல்லுகிறார்கள்.

எருசலேம் அழிந்துபோகவேண்டும் என்று அவளுடைய பகைஞர்கள் எல்லோரும் விரும்பினார்கள். அவளுடைய அழிவுக்காக ஆவலாய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய கோபத்தினால் எருசலேமை அழித்தார். ஆனால் எருசலேமின் பகைஞர்களோ, தாங்களே அதை அழித்ததாக பெருமைப்படுகிறார்கள். கர்த்தர் தாம் செய்ய நினைத்ததை செய்தார். எருசலேமின் பகைஞர்களோ, கர்த்தருடைய கிரியைகளை, தங்களுடைய கிரியைகள் என்று சொல்லி, வீணாய்ப் பெருமைப்படுகிறார்கள்.

எருசலேம் அழிந்துபோனதினால் தங்களுக்கு ஜெயமும், லாபமும் உண்டாயிற்று என்று அதன் பகைஞர் சொல்லுகிறார்கள். எருசலேம் இப்போது தங்களுக்கு சொந்தமாயிற்று என்று அதன் சத்துருக்கள் வீரம் பேசுகிறார்கள். எருசலேம் எப்போதுமே கர்த்தருக்கு மாத்திரம் சொந்தம்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இதனால் கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போனார். கர்த்தருடைய கோபம் அவர்களுக்கு விரோதமாக வந்தது. கர்த்தர் தாம் செய்ய நினைத்ததை எருசலேமுக்கு விரோதமாகச் செய்தார். பூர்வநாட்கள் முதற்கொண்டு தாம் கட்டளையிட்ட தமது வார்த்தையை நிறைவேற்றினார்; அவர் தப்பவிடாமல் நிர்மூலமாக்கி, எருசலேமின்மேல் அவளுடைய பகைஞன் சந்தோஷிக்கும்படி செய்தார்; எருசலேமுடைய சத்துருக்களின் கொம்பை உயர்த்தினார் (புல 2:17).

எருசலேமின் பாவங்களும், அக்கிரமங்களும் அதிகமாயிருக்கிறது. எருசலேமின் குடிகள் கர்த்தருடைய ஜனமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிற தம்முடைய ஜனத்தை அழித்துப்போடவேண்டும் என்று கர்த்தர் திட்டமிடுகிறார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்க முடியாது.

கர்த்தர் சீனாய் மலையில் தம்முடைய பிரமாணங்களையெல்லாம் மோசேயினிடத்தில் கொடுத்தார். இஸ்ரவேல் ஜனங்கள் தம்முடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார். தம்முடைய பிரமாணங்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுக்கு என்னென்ன தண்டனைகள் கொடுக்கப்படும் என்றும் கர்த்தர் தெளிவுபடுத்தினார்.

"நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்: நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்; நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்" (லேவி 26:14-17)

"இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும். உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்" (உபா 28:15-18).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. இதன் நிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் ஜனங்களை நியாயந்தீர்க்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது.

எருசலேம் குமாரத்தி துக்கத்தினால் அழுது புலம்புகிறாள். அவளுடைய புலம்பலைக் குணப்படுத்துவதற்கு ஆறுதலான வார்த்தைகள் தேவைப்படுகிறது. கர்த்தரே அவர்களுக்கு ஆறுதலைத் தரவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் ஆறுதலுக்காகவும், தேற்றுதலுக்காகவும் பணிவோடு விண்ணப்பம்பண்ணவேண்டும்.

"எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர்சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?" (புல 2:13) என்று எரேமியா எருசலேமுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்ல முயற்சி பண்ணுகிறார்.

எருசலேமிலுள்ள எல்லோருமே வேதனையில் புலம்புகிறார்கள். ஒருவர் மாத்திரம் புலம்பி, மற்றவர்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்னும் நிலமை அங்கே இல்லை. எல்லோரும் ஏகமாய்ப் புலம்புகிறார்கள். எருசலேமின் குடிகள் எல்லோரும் கண்ணீர்விட்டு அழுகிறார்கள். ஆனால் எரேமியாவோ அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்போது, "நான் உனக்கு சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்" என்று ஒருமையில் சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற நம்எல்லோருக்குமே பிரச்சனைகளும், பாடுகளும், வருத்தங்களும், வேதனைகளும் இருக்கிறது. நம்முடைய பிரச்சனைகளைவிட மற்றவர்களுடைய பிரச்சனைகள் பெரிதாயிருக்கலாம். ஒருவருடைய வேதனைகளைவிட, மற்றவர்களின் வேதனைகள் மிகவும் அதிகமாயிருக்கலாம்.

ஆனால் எருசலேமின் வேதனைகளோ, எல்லோருடைய வேதனைகளையும்விட அதிகமாயிருக்கிறது. அவர்களுடைய வேதனைகளை மற்ற யாருடைய வேதனைகளோடும் ஒப்பிட முடியாது. ஆகையினால் எரேமியா எருசலேமின் குடிகளிடத்தில், "உன்னை எதற்கு ஒப்பிடுவேன்" என்று ஒருமையில் சொல்லுகிறார்.

எருசலேம் நகரத்தைப்போல வேறு எந்த நகரத்திற்கும் இவ்வளவு பெரிய அழிவு வந்ததில்லை. யூதாதேசத்தைப்போல, வேறு எந்த தேசத்திற்கும் இவ்வளவு பெரிய பாடுகளும், வேதனைகளும் வந்ததில்லை. யூதாவின் மனுஷரைப்போல வேறு எந்த ஜாதியாரும் இவ்வளவு உபத்திரவங்களை அனுபவித்ததுமில்லை. அவர்களுடைய பாடுகளையும் வேதனைகளையும் வேறு யாரோடும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாது.

யூதர்களைப்போல வேறு யாரும் வேதனைகளை அனுபவிக்காவிட்டாலும், யூதர்கள் பெற்றிருந்த நன்மைகளைப்போல வேறு எந்த ஜாதியாரும் கர்த்தரிடத்திலிருந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றதுமில்லை. அவர்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவருடைய காணியாட்சிக்குட்பட்டவர்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தம் முதலாவதாக அவர்களுக்கே சொந்தம். ஆகையினால் அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளும் அதிகமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களைத் தண்டிப்பதும் அதிகமாயிருக்கிறது. கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டதில், இஸ்ரவேல் ஜனத்தாரை, வேறு எந்த ஜாதியாரோடும் ஒப்பிடமுடியாது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இப்போது பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தாலும், அவர்களுக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறது. அவர்களுடைய காயம் சமுத்திரத்தைப்போல் பெரியதாயிருந்தாலும், அவர்களைக் குணப்படுத்தும் ஔஷதம் கர்த்தரிடத்தில் உள்ளது. கர்த்தரே பரம வைத்தியர். இஸ்ரவேல் புத்திரரின் அக்கிரமங்கள் பெரியதாயிருந்தாலும், அவர்களை இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் மனந்திரும்பவேண்டும். கர்த்தரிடத்தில் பணிவோடும் பயபக்தியோடும் மறுபடியுமாய் திரும்பி வரவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வேதனைகளிலிருந்தும், பாடுகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கு இதுவே வழி.

கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்கிறவர். மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும். நாம் மனுஷர் சிந்திக்கிற பிரகாரமாக சிந்திப்போம். கர்த்தரோ தம்முடைய அனந்த ஞானத்தினாலே சிந்திக்கிறார்.

இஸ்ரவேலுக்கு ஏற்பட்டிருக்கிற காயம், நம்முடைய பார்வையில் சமுத்திரத்தைப்போல பெரிதாயிருக்கிறது. மனுஷருடைய சுயமுயற்சியினால் இவ்வளவு பெரிய காயத்தைக் குணப்படுத்த முடியாது. ஆனால், கர்த்தரால் அவர்களுடைய காயத்தைக் குணப்படுத்த முடியும். உடைப்பு சமுத்திரத்தைப்போல பெரியதாயிருந்தாலும், கர்த்தரால் அதை அடைக்க முடியும்.

எரேமியா எருசலேமின் காயத்தைப் பார்க்கிறார். "உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரியதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்" (புல 2:13) என்று வேதனையோடு கேட்கிறார். மனுஷனுடைய வல்லமையோ, அவனுடைய பலமோ, பராக்கிரமமோ இவ்வளவு பெரிய காயத்தைக் குணப்படுத்தாது. மனுஷ வைத்தியர்களால் இவ்வளவு பெரிய காயத்தைக் குணப்படுத்துவது இயலாத காரியம். பரம வைத்தியரால் மாத்திரமே இப்படிப்பட்ட காயங்களைக் குணப்படுத்த முடியும். கர்த்தரே நம்முடைய பரம வைத்தியர்.

நம்முடைய காயங்கள் குணமடைய வேண்டுமென்றால், நம்முடைய பரமவைத்தியரிடத்திற்கு நாம் போகவேண்டும். நம்முடைய காயங்களைப் பற்றியும், வேதனைகளைப்பற்றியும், பிரச்சனைகளைப் பற்றியும் கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லவேண்டும். நம்முடைய ஜீவனை கர்த்தருடைய பாதபடியில் சமர்ப்பித்து, பயபக்தியோடு ஜெபிக்கவேண்டும். நாம் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் ஜெபங்களை ஏறெடுக்கும்போது, கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். தம்மை நோக்கி கூப்பிடுகிற அனைவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

எருசலேமின் காயங்கள் குணமடைவதற்கும், அவர்களுடைய வேதனைகள் அவர்களைவிட்டு நீங்குவதற்கும், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று எரேமியா அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

"சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (புல 2:18,19).

நாம் பாவம் என்னும் சேற்றிலே சிக்கி தவித்துக்கொண்டிருக்கலாம். நம்முடைய சொந்த முயற்சியினால் பாவச்சேற்றிலிருந்து நம்மை நாமே விடுவித்துக்கொள்ள முடியாது. நாம் கர்த்தரை நம்பவேண்டும். அவரையே சார்ந்துகொள்ளவேண்டும். இராத்திரியிலே முதற்சாமத்தில் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும். மற்றவர்கள் அயர்ந்த நித்திரையிலிருக்கும்போது, நாம் நம்முடைய முழங்காலில் நின்று, கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், கிருபைக்காகவும் கெஞ்சி மன்றாடவேண்டும்.

இராத்திரியிலே முதற்சாமத்திலே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிற நாம், மற்ற ஜாமங்களிலும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண வேண்டும். யூதர்கள் இரவுவேளையை நான்கு ஜாமங்களாகப் பிரிப்பது வழக்கம். ஒவ்வொரு ஜாமத்தின் ஆரம்பத்திலும், நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய இருதயத்திலுள்ள வேதனைகளை ஆண்டவரின் சமுகத்தில் தண்ணீரைப்போல ஊற்றிவிடவேண்டும். தெளிந்த சிந்தனையோடு ஜெபிக்கவேண்டும். விடுதலையோடு விண்ணப்பம்பண்ணவேண்டும். ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும்.

நம்முடைய கரங்களை கர்த்தருடைய பரிசுத்த சமுகத்திற்கு நேராக உயர்த்தி, கர்த்தருடைய இரக்கங்களுக்காக கெஞ்சி மன்றாடவேண்டும். எதிர்பார்ப்போடு ஜெபிக்கவேண்டும். நாம் நமக்காக ஜெபிப்பது மாத்திரமல்ல, நம்முடைய பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

"எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (புல 2:19) என்று எரேமியா எருசலேமின் குமாரத்தியிடம் சொல்லுகிறார். நம்முடைய பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும் இருக்கக்கூடாது என்பதற்காகவும், விபத்துக்களிலும், ஆபத்துக்களிலும் மரித்துப்போய்விடக்கூடாது என்பதற்காகவும், கர்த்தருடைய பாதுகாப்பான கரம் அவர்கள்மேல் தங்கியிருக்கவேண்டும் என்பதற்காகவும், நாம் கர்த்தருடைய சமுகத்திலே, இராத்திரி ஜாமங்களிலே ஜெபம்பண்ணவேண்டும்.

எரேமியா இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். "கர்த்தாவே, யாருக்கு இந்தப்பிரகாரமாகச் செய்தீரென்று நோக்கிப்பாரும்; ஸ்திரீகள் கைக்குழந்தைகளாகிய தங்கள் கர்ப்பக்கனியைத் தின்னவேண்டுமோ? ஆண்டவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியனும் தீர்க்கதரிசியும் கொலைசெய்யப்படவேண்டுமோ?" (புல 2:20) என்று கர்த்தரிடத்தில் பணிவோடு கேட்கிறார். இப்படிப்பட்ட விண்ணப்பங்களை எருசலேமின் குமாரத்தியும் கர்த்தரிடத்தில் ஏறெடுக்க வேண்டும் என்று அவர்களுக்கும் ஆலோசனை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாள், அவருடைய கோபத்தின் நாளாகவும் இருக்கிறது. கர்த்தருடைய கோபத்தின் நாளிலே தப்பினவனும் மீதியானவனும் இல்லை.

கர்த்தர் தம்முடைய கோபத்தின் நாளிலே, தமக்கு விரோதமாய்ப் பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரரை வெட்டினார். அவர்களைத் தப்பவிடாமல் கொன்றுபோட்டார். பண்டிகை நாளில் கும்புகளை வரவழைப்பதுபோல், சுற்றிலுமிருந்து எருசலேமுக்கு திகில்களை வரவழைத்தார்.

கர்த்தர் தம்முடைய கோபத்தின் நாளில் எருசலேமுக்கு விரோதமாக சத்துருக்களை வரவழைக்கிறார். அவர்கள் வயது வித்தியாசம் பாராமல், இளைஞனையும் முதிர்வயதுள்ளவனையும் வெட்டிக்கொன்று போடுகிறார்கள். அவர்களுடைய பிரேதங்கள் தெருக்களிலே தரையில் கிடக்கிறது. சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரின் கன்னிகைகளையும் வாலிபரையும் பட்டயத்தால் வெட்டிக்கொன்றுபோடுகிறார்கள். ஒருவரும் தப்பிக்கவில்லை.

"நான் கைகளில் ஏந்தி வளர்த்தவர்களை என் பகைஞன் நாசம்பண்ணினான்" (புல 2:22) என்று எரேமியாவும், எருசலேமின் குமாரத்தியும் கர்த்தரிடத்தில் அழுது புலம்புகிறார்கள்.

3 அதிகாரம்

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய சினத்தின் மிலாறு இஸ்ரவேல் புத்திரர்மீது பிரயோகம்பண்ணப்படுகிறது (புல 3:1-20). கர்த்தருடைய ஜனத்திற்கு ஆறுதலான வார்த்தைகள் (புல 3:21-36). இஸ்ரவேல் புத்திரர் நெருக்கப்படும்போது அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகள் (புல 3:37-41).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கையிடுகிறார்கள். கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்று அவரிடத்தில் முறையிடுகிறார்கள் (புல 3:42-54). கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கர்த்தருக்குள் நம்பிக்கையுள்ளது (புல 3:55-66).

எரேமியா தீர்க்கதரிசி காவல் கிடங்கில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று இப்படிப்பட்ட சூழ்நிலையில் எரேமியா இந்த அதிகாரத்திலுள்ள எல்லா வசனங்களையும் எழுதினார் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

எரேமியா இந்த வசனங்கள் எல்லாவற்றையும் சிறையிருப்பிலிருக்கிற ஜனங்களுக்கும், யூதாதேசத்தில் மீந்திருக்கிற ஜனத்திற்கும் பொதுவாகச் சொல்லுகிறார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த அதிகாரத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அடையாளமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஆண்டவருடைய சினத்தின் மிலாறு

புல 3:1-20

புல 3:1. ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான்.

புல 3:2. அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்தி வந்தார்.

புல 3:3. அவர் தமது கையை எனக்கு விரோதமாகவே நித்தமும் திருப்பினார்.

புல 3:4. என் சதையையும் என் தோலையும் முற்றலாக்கினார்; என் எலும்புகளை நொறுக்கினார்.

புல 3:5. அவர் எனக்கு விரோதமாகக் கொத்தளங்கட்டி, கசப்பினாலும் வருத்தத்தினாலும் என்னை வளைந்துகொண்டார்.

புல 3:6. பூர்வகாலத்தில் செத்துக் கிடக்கிறவர்களைப்போல என்னை இருளான இடங்களில் கிடக்கப்பண்ணினார்.

புல 3:7. நான் புறப்படக்கூடாதபடி என்னைச் சூழ வேலியடைத்தார்; என் விலங்கைப் பாரமாக்கினார்.

புல 3:8. நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப்போட்டார்.

புல 3:9. வெட்டின கற்களின் சுவரால் என் வழிகளை அடைத்துப்போட்டார், என் பாதைகளைத் தாறுமாறாக்கினார்.

புல 3:10. அவர் எனக்குப் பதிவிருக்கிற கரடியும், மறைவிடங்களில் தங்குகிற சிங்கமுமாயிருக்கிறார்.

புல 3:11. என் வழிகளை அப்புறப்படுத்தி, என்னைத் துண்டித்துப்போட்டார்; என்னை பாழாக்கிவிட்டார்.

புல 3:12. தமது வில்லை நாணேற்றி, என்னை அம்புக்கு இலக்காக வைத்தார்.

புல 3:13. தம்முடைய அம்பறாத்தூணியின் அம்புகளை என் உள்ளிந்திரியங்களில் படப்பண்ணினார்.

புல 3:14. நான் என் ஜனத்தார் யாவருக்கும் பரியாசமும், நித்தம் அவர்கள் கின்னரப்பாடலுமானேன்.

புல 3:15. கசப்பினால் என்னை நிரப்பி, எட்டியினால் என்னை வெறிக்கச் செய்தார்.

புல 3:16. அவர் பருக்கைக்கற்களால் என் பற்களை நொறுக்கி, என்னைச் சாம்பலில் புரளப்பண்ணினார்.

புல 3:17. என் ஆத்துமாவைச் சமாதானத்துக்குத் தூரமாக்கினார்; சுகத்தை மறந்தேன்.

புல 3:18. என் பெலனும் நான் கர்த்தருக்குக் காத்திருந்த நம்பிக்கையும் அழிந்துபோயிற்று என்றேன்.

புல 3:19. எட்டியும் பிச்சுமாகிய என் சிறுமையையும் என் தவிப்பையும் நினைத்தருளும்.

புல 3:20. என் ஆத்துமா அவைகளை நினைத்து நினைத்து எனக்குள் முறிந்துபோகிறது.

102-ஆவது சங்கீதத்திற்கு, "துயரப்படுகிறவன் துக்கத்தில் மூழ்கி, கர்த்தரிடத்தில் தன் வியாகுலத்தைத் தெரிவித்துச் செய்யும் விண்ணப்பம்" என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எரேமியாவின் புலம்பல் மூன்றாவது அதிகாரத்திற்கும் இதே தலைப்பு சரியாகப் பொருந்தும். இந்த அதிகாரத்தில் எரேமியா தன்னுடைய இருதயத்திலுள்ள பாரங்களை கர்த்தருடைய சமுகத்தில் ஊற்றுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது கோபமாயிருக்கிறார். அவருடைய கோபத்தினாலேயே, அவருடைய ஜனங்களுக்கு வேதனை உண்டாயிற்று. "ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான்" (புல 3:1) என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தர் ஒரு சில சமயங்களில் தம்முடைய பிள்ளைகள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய கோபம் அவருடைய பிள்ளைகளை கொன்றுபோடும் பட்டயமல்ல. அது அவர்களைத் திருத்துகிற மிலாறு. கர்த்தருடைய கையில் அவருடைய சினத்தின் மிலாறு இருக்கிறது.

கர்த்தர் தம்முடைய மிலாற்றினால் நம்மைத் தண்டிக்கும்போது, நமக்கு மிகுந்த வேதனை உண்டாகும். ஆனாலும் வேதனை நிலைத்திருக்காது. நாம் தண்டிக்கப்பட்டதினால், நம்முடைய தப்பிதங்களை நாம் உணருவோம். தப்பிதங்களுக்கு விலகி நம்மைத் திருத்திக்கொள்வோம். கர்த்தருடைய சினத்தின் மிலாறு நமக்கு இப்போது வேதனையைக் கொடுத்தாலும், பிற்காலத்தில் அது நமக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.

கர்த்தர் தம்முடைய சினத்தின் மிலாற்றை நம்மீது பயன்படுத்தும்போது, நமக்கு சிறுமை உண்டாகும். நம்முடைய சிறுமையை நாம் காணவேண்டும். கர்த்தர் நம்மை தம்முடைய மிலாற்றினால் அடித்ததற்காக நாம் அவரோடு வழக்காடக்கூடாது. கர்த்தருடைய கோபம் நீதியானது என்பதையும், கர்த்தர் தம்முடைய அன்பினாலும், இரக்கத்தினாலும், நம்மைத் தண்டிக்கிறார் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

எல்லா மனுஷருக்குமே சிறுமை வரும். இவையெல்லாம் இயற்கையாகவே வருகிற பொதுவான சிறுமைகள். ஆண்டவருடைய சினத்தின் மிலாறினால் வருகிற சிறுமைக்கும், இயற்கையாக வரும் பொதுவான சிறுமைக்கும் வித்தியாசமுண்டு. கர்த்தர் நம்மை சிறுமைப்படுத்தும்போது, ஏற்றவேளையிலே நம்மை மறுபடியும் உயர்த்துவார். கர்த்தர் நம்முடைய நன்மைக்காகவே நம்மை சிட்சிக்கிறார். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளை சிட்சிப்பதுபோல கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார். கர்த்தருடைய மிலாற்றில் அவருடைய சினம் வெளிப்பட்டாலும், அந்த சினத்தில் அவருடைய கிருபையும் இரக்கமும் கலந்திருக்கிறது.

"அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்திவந்தார்" (புல 3:2) என்று எரேமியா தன்னுடைய நிலமையைப்பற்றியும், கர்த்தர் தனக்கு செய்தது பற்றியும் சொல்லுகிறார். எரேமியா இருளிலே இருந்தார். இருள் என்பது தொல்லைகளுக்கும், வேதனைகளுக்கும், குழப்பங்களுக்கும் அடையாளம். எரேமியாவுக்கு பிரச்சனைகளுக்குமேல் பிரச்சனைகள் உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவை வெளிச்சத்திற்கு அழைத்து வராமல், இருளிலே அழைத்து நடத்தி வருகிறார்.

எரேமியா வெளிச்சத்திற்காக நம்பிக்கையோடு காத்திருக்கிறார். அவர் இருளை நினைத்து பயப்படுகிறார். எரேமியா பயந்தது பிரகாரமே கர்த்தர் அவரை இருளிலே அழைத்து நடத்தி வருகிறார்.

"பூர்வகாலத்தில் செத்துக்கிடக்கிறவர்களைப்போல என்னை இருளான இடங்களில் கிடக்கப்பண்ணினார்" (புல 3:6) என்றும் எரேமியா சொல்லுகிறார். ஜனங்கள் செத்துப்போனவர்களை மறந்துவிடுவார்கள். கர்த்தரும் தன்னை இருளான இடங்களில் கிடக்கப்பண்ணி, தன்னை மறந்துவிட்டார் என்று எரேமியா நினைக்கிறார்.

கர்த்தருடைய ஜனம் அவருக்கு சிநேகிதர்களாயிருப்பார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, கர்த்தர் அவர்களுக்கு சத்துருவானார். "அவர் தமது கையை எனக்கு விரோதமாகவே நித்தமும் திருப்பினார்" (புல 3:3) என்று எரேமியா சொல்லுகிறார்.

"நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்" (சங் 73:14) என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கை நமக்கு விரோதமாகத் திருப்பப்பட்டிருக்கும்போது, அவருடைய இருதயமும் நமக்கு விரோதமாக திருப்பப்பட்டிருக்கும் என்று நாம் பொதுவாக நினைப்போம். கர்த்தர் தனக்கு பதிவிருக்கிற கரடியும் மறைவிடங்களில் தங்குகிற சிங்கமுமாயிருக்கிறார் (புல 3:10) என்று எரேமியா சொல்லுகிறார்.

பதிவிருக்கிற கரடி திடீரென்று பாய்ந்து, நமக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும். அதுபோலவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எரேமியாவுக்கு அதிர்ச்சியாயிருக்கிறது.

சிங்கம் மறைவிடங்களில் தங்கியிருக்கும். நாம் எந்த வழியாகப்போனாலும், அங்கே சிங்கம் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் நமக்கு விரோதமாக இருக்கும்போது, நமக்கு எந்த வழியும் பாதுகாப்பான வழியல்ல.

"தமது வில்லை நாணேற்றி, என்னை அம்புக்கு இலக்காக வைத்தார். தம்முடைய அம்பறாத்தூணியின் அம்புகளை என் உள்ளிந்திரியங்களில் படப்பண்ணினார்" (புல 3:12,13) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவின் உள்ளத்தில் காயமுண்டாயிற்று. அவருடைய உள்ளந்திரியங்களில் அம்பு துளைத்திருக்கிறது. அவருடைய இருதயம் காயம்பட்டு, துடிக்கிறது.

யூதாதேசம் இப்போது வயது முதிர்ந்த பெரியவரைப்போல பலவீனமாயிருக்கிறது. முதியோர்களுடைய சதையும் தோலும் முற்றிப்போயிருக்கும். அவர்களுடைய எலும்புகளும் பலமிழந்து நொறுங்கியிருக்கும். கர்த்தரே தன் சதையையும், தன் தோலையும் முற்றலாக்கினார் என்றும், தன் எலும்புகளை நொறுக்கினார் (புல 3:4) என்றும் எரேமியா சொல்லுகிறார். ஒரு மனுஷனுக்கு வயது ஆக ஆக, அவனுடைய சரீரத்தில் முதுமை காணப்படும். தோல்கள் சுருங்கிவிடும். கண் பார்வை மங்கிவிடும். எலும்புகள் பெலன் குறைந்துபோகும்.

"கசப்பினால் என்னை நிரப்பி, எட்டியினால் என்னை வெறிக்கச்செய்தார். அவர் பருக்கைக்கற்களால் என் பற்களை நொறுக்கி, என்னைச் சாம்பலில் புரளப்பண்ணினார்" (புல 3:15,16) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியாவுக்கு சரீர வேதனைகளினால் கசப்பு உண்டாயிற்று. கர்த்தரே தன்னை கசப்பினால் நிரப்பியிருப்பதாக எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். "என்னை சாம்பலில் புரளப்பண்ணினார்" என்னும் வாக்கியத்திற்கு, கர்த்தர் எனக்கு சாம்பலைப் புசிக்கக்கொடுத்தார் என்று பொருளாகும்.

கர்த்தர் எரேமியாவுக்கு பாடுகளையும் வேதனைகளையும் கொடுத்தபோது, அந்த வேதனையிலிருந்து அவரால் தப்பிக்கவே முடியவில்லை. தப்பிக்கும் வழியையும் கண்டுபிடிக்க முடியவில்லை. "அவர் எனக்கு விரோதமாகக் கொத்தளங்கட்டி, கசப்பினாலும் வருத்தத்தினாலும் என்னை வளைந்துகொண்டார்" (புல 3:5) என்று எரேமியா சொல்லுகிறார்.

ஒரு நகரம் முற்றிக்கைப்போடப்படும் போது, கோட்டைச் சுவரைச் சுற்றிலும் கொத்தளங்களைப்போடுவது வழக்கம். மதிலிடிக்கும் இயந்திரங்களையும் கோட்டைச் சுவரைச் சுற்றிலும் நிறுத்துவார்கள். நகரத்திற்குள்ளே இருக்கிறவர்கள் வெளியே போகமாட்டார்கள். முற்றிக்கைப்போட்டவர்களும் நகரத்திற்குள்ளே பிரவேசித்துவிடாதபடி, கோட்டையின் கதவுகளை அடைத்துக்கொள்வார்கள்.

கர்த்தர் எரேமியாவுக்கு விரோதமாக கொத்தளம் வெட்டி முற்றிக்கைப் போட்டிருக்கிறார். அவரை கசப்பினாலும் வருத்தத்தினாலும் வளைந்துகொண்டார். எரேமியாவால் தப்பிக்க முடியவில்லை. "நான் புறப்படக்கூடாதபடி என்னைச் சூழ வேலியடைத்தார்; என் விலங்கைப் பாரமாக்கினார்" (புல 3:7) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார். தேசத்தில் மிகப்பெரிய குற்றவாளிகளாக கருதப்படுகிறவர்களுக்கு பூட்டப்படும் பெரிய பாரமான விலங்கு எரேமியாவுக்கு போடப்பட்டிருக்கிறது. "வெட்டின கற்களின் சுவரால் என் வழிகளை அடைத்துப்போட்டார், என் பாதைகளைத் தாறுமாறாக்கினார்" (புல 3:9) என்று எரேமியா சொல்லுகிறார். கற்சுவரை எளிதாக உடைக்க முடியாது. கற்கள் பெரிய கற்களாகவும், பெலமுள்ளதாகவும் இருக்கும். பாதைகளும் தாறுமாறாயிருப்பதினால் தப்பித்துப்போவதற்கே வழியில்லை.

"என் வழிகளை அப்புறப்படுத்தி, என்னைத் துண்டித்துப்போட்டார்; என்னை பாழாக்கிவிட்டார்" (புல 3:11) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவின் விருப்பங்களும், யோசனைகளும், திட்டங்களும் பாழாய்ப்போயிற்று. எரேமியாவின் ஆத்துமாவிலிருந்த எல்லா ஆறுதல்களும், அவரை விட்டு நீங்கிப்போயிற்று.

எரேமியாவுக்கு ஏராளமான பிரச்சனைகளும் நெருக்கங்களும் உண்டாயிற்று. அவர் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறார். "நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப்போட்டார்" (புல 3:8) என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தர் எரேமியாவின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கவில்லை. அவருடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கவில்லை. கர்த்தர் தன்னுடைய விண்ணப்பத்தைக் கேட்காவிட்டாலும், எரேமியா சத்தமிட்டு கூப்பிடுகிறார். கர்த்தரோ ஜெபம்பண்ணுவதற்கு உண்டான வாய்ப்புக்களையெல்லாம் எரேமியாவினிடத்திலிருந்து நீக்கிப்போடுகிறார். எரேமியாவால் ஜெபம்பண்ண முடியவில்லை.

கர்த்தர் பொதுவாக தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு செவிகொடுப்பார். அவர்களுடைய ஜெபங்களில் பிரியமாயிருப்பார். ஆனாலும் ஒரு சில சமயங்களில், கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் ஜெபங்களுக்கு விரோதமாகக் கோபப்படுகிறார். "சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்" (சங் 80:4).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய ஜெபத்திற்கு செவிகொடுக்க மறுக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகிறார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றினார்கள். கர்த்தரும் தம்முடைய ஜனங்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார்.

எரேமியாவுக்கு உற்றார் உறவினர், அவருடைய ஜனத்தார் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்கள் எரேமியாவின் வேதனைகளையும் பாடுகளையும் பார்க்கிறார்கள். "நான் என் ஜனத்தார் யாவருக்கும் பரியாசமும், நித்தம் அவர்கள் கின்னரப்பாடலுமானேன்" (புல 3:14) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவின் ஜனத்தாரில் துன்மார்க்கரும் இருக்கிறார்கள். எரேமியாவுக்கு தீங்கு வரும்போது அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.

எரேமியா கர்த்தருக்காக காத்திருக்கிறார். நம்பிக்கையோடு காத்திருக்கிறார். ஆனால் அவர் கர்த்தருக்கு காத்திருந்த நம்பிக்கை அழிந்துபோயிற்று. எரேமியாவின் பெலனும் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. கர்த்தர் எரேமியாவின் ஆத்துமாவை சமாதானத்திற்கு தூரமாக்கினார். எரேமியா தன்னுடைய சுகத்தை மறந்து விடுகிறார் (புல 3:17,18).

எரேமியாவுக்கு இப்போது சந்தோஷம் என்றால் என்ன என்பது தெரியவில்லை. அவருக்கு சகலமும் துக்கமாயிருக்கிறது. எரேமியாவுக்கு சுயாதீனமான விடுதலை என்றால் என்ன என்பதும் புரியவில்லை. அவர் காவற்கிடங்கில் அடைக்கப்பட்டிருக்கிறார். கர்த்தர் எரேமியாவுக்கு ஆதரவாயில்லை. அவர் எரேமியாவின்மீது பிரியமாயில்லை.

எரேமியா ஒரு காலத்தில் சமாதானமாயும், ஆறுதலாயும், ஆசீர்வாதமாயும் செழித்திருந்தார். கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், விசேஷித்த பராமரிப்புக்களும் எரேமியாவுக்கு கிடைத்தது. இப்போதோ கர்த்தர் எரேமியாவை மறந்துவிடுகிறார். எரேமியாவுக்கு கர்த்தரிடத்திலிருந்து கிருபையோ, இரக்கமோ விசேஷித்த பராமரிப்போ, ஆறுதலான வார்த்தைகளோ கிடைக்கவில்லை.

எரேமியா மிகுந்த வேதனையிலிருக்கும்போது, ஒரு காலத்தில், கர்த்தர் தன்னை ஆசீர்வதித்ததையும், தான் ஆறுதலாயும், செழிப்பாயும் இருந்ததையும் நினைவுகூருகிறார். எரேமியாவின் ஆத்துமா, பழைய ஆசீர்வாதங்களை நினைத்து அவருக்குள் முறிந்துபோகிறது. எரேமியா கர்த்தரிடத்தில் "எட்டியும் பிச்சுமாகிய என் சிறுமையையும் என் தவிப்பையும் நினைத்தருளும்" (புல 3:19) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

நம்முடைய பாவங்களே, கர்த்தர் நமக்கு கொடுக்கும் பாத்திரத்தை எட்டியும், பிச்சுமாக்குகிறது. நம்முடைய பாவங்களினால், கர்த்தர் நமக்கு உபத்திரவத்தின் பாத்திரத்தையும், தத்தளிப்பின் பாத்திரத்தையும் கொடுக்கிறார்.

பாபிலோன் தேசத்திலுள்ள யூதர்கள் தங்கள் தேசத்திற்கு ஏற்பட்ட பழைய சம்பவங்களை நினைத்துப் பார்க்கிறார்கள். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டதையும், தாங்கள் நகரத்திற்குள் பசியாலும், பஞ்சத்தினாலும், பட்டினியினாலும், பட்டயத்தாலும் வேதனைகளை அனுபவித்ததையும் நினைவுகூருகிறார்கள். அவர்கள் சீயோனை நினைத்து அழுகிறார்கள். அவர்களால் எருசலேமை மறக்க முடியவில்லை.

"பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்" (சங் 137:1) "எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலைமறப்பதாக. நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக" (சங் 137:5,6).

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே புல 3:21-36

புல 3:21. இதை என் மனதிலே வைத்து, நம்பிக்கைகொண்டிருப்பேன்.

புல 3:22. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.

புல 3:23. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

புல 3:24. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமாசொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்.

புல 3:25. தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.

புல 3:26. கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது.

புல 3:27. தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது.

புல 3:28. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்கக்கடவன்.

புல 3:29. நம்பிக்கைக்கு இடமுண்டோ என்று தன் வாயைத் தூளில் நுழுந்துவானாக.

புல 3:30. தன்னை அடிக்கிறவனுக்குத் தன் கன்னத்தைக் காட்டி, நிந்தையால் நிறைந்திருப்பானாக.

புல 3:31. ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.

புல 3:32. அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்.

புல 3:33. அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை.

புல 3:34. ஒருவன் பூமியில் சிறைப்பட்டவர்கள் யாவரையும் தன் கால்களின் கீழ் நசுக்குகிறதையும்,

புல 3:35. உன்னதமானவரின் சமுகத்தில் மனுஷருடைய நியாயத்தைப் புரட்டுகிறதையும்.

புல 3:36. மனுஷனை அவனுடைய வழக்கிலே மாறுபாடாக்குகிறதையும், ஆண்டவர் காணாதிருப்பாரோ?

யூதாதேசத்திற்கு மேலேயிருந்த மந்தாரம் விலகியதுபோலவும், வானம் தெளிவாவதுபோலவும், யூதாவின் துன்பங்களும் வேதனைகளும் சிறிது சிறிதாக நீங்குகிறது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் புலம்பலைப் பாடும்போது, அதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார். சீயோனுக்காக புலம்புகிறவர்கள் சிறிது சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த நம்பிக்கைக்கூட அவர்களுக்கு இல்லையென்றால், அவர்களுடைய இருதயங்கள் நொறுங்கிப்போகும்.

யூதாவின் மனுஷருக்கு ஆறுதலான செய்தியும் தேவைப்படுகிறது. அவர்களுக்கு பிரச்சனைகளின்மேல் பிரச்சனைகளும், புலம்பல்களின்மேல் புலம்பல்களும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால், அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோகும். அவர்களுக்கு ஆறுதல் சொல்லும் விதமாக, எரேமியா, சில காரியங்களை மனதில் வைத்துக்கொள்ளுமாறு அவர்களுக்குச் சொல்லுகிறார். இதை மனதில் நினைக்கும்போது, அவர்களுடைய இருதயத்தில் நம்பிக்கை பிறக்க ஆரம்பிக்கும்.

"இதை என் மனதிலே வைத்து, நம்பிக்கைகொண்டிருப்பேன்" (புல 3:21) என்று எரேமியா சொல்லுகிறார். "இதை என் மனதிலே வைத்து" என்னும் வாக்கியத்திற்கு, "என்னுடைய மனதில் நினைத்துப் பார்ப்பேன்" என்று பொருள் சொல்லலாம். நம்முடைய மனது சில காரியங்களை மறந்திருக்கும். நாம் மறந்துபோன காரியங்களை கர்த்தர் நமக்கு நினைவுபடுத்துவார். அவற்றை நினைக்கும்போது நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையும் விருத்தியடையும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை மனதிலே வைத்து நினைத்துப் பார்க்காமல், அதை மறந்துபோவோமென்றால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்வு உண்டாகும்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு பாடுகளும் கஷ்டங்களும் வந்திருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆகையினால்தான் அவர்களால் இம்மட்டுமாக நிலைத்திருக்க முடிகிறது. இல்லையென்றால் அவர்களுடைய வேதனைகளும் பாடுகளும் கஷ்டங்களும் அவர்களை அழித்திருக்கும்.

ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் நமக்கு சிறுமை உண்டாகிறது. கர்த்தருடைய கிருபையினால் நாம் நிர்மூலமாகாதிருக்கிறோம் (புல 3:1; 22). யூதாவின் மனுஷர் வேதனைகளை அனுபவித்தாலும், கர்த்தருடைய கிருபை தங்களுக்கு கிடைத்திருப்பதையும் அங்கீகரிக்கிறார்கள். தாங்கள் கஷ்டங்களிலிருந்தாலும், தாங்கள் இன்னும் நிர்மூலமாகவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

மோசே சீனாய் மலையில் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, அங்கே எரியும் முட்செடியைப் பார்த்தார். முட்செடியில் அக்கினி எரிந்துகொண்டிருந்தாலும், அது அந்தச் செடியை பட்சித்துப்போடவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளும் எரிகிற முட்செடிகளைப்போல இருக்கிறார்கள். முட்செடிகள் எரிந்தாலும், அக்கினி அவற்றை பட்சித்துப்போடாது. கர்த்தருடைய பிள்ளைகள் பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தாலும், அவர்கள் நிர்மூலமாகாமாட்டார்கள்.

"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" (2கொரி 4:8,9). நாம் அக்கினியிலே புடமிடப்பட்டாலும், சுத்தப்பொன்னாக விளங்குவோமேயல்லாமல், அக்கினியிலே பொசுங்கிப்போகமாட்டோம்.

கர்த்தருடைய கிருபை நீரூற்றுபோல புறப்பட்டு வருகிறது. கர்த்தரே எல்லா கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும் நீரூற்றாயிருக்கிறார். அவரே ஊற்றின் ஆதாரமாகவும் இருக்கிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக கர்த்தர் நம்மைத் தண்டித்திருந்தால், நாம் எப்போதோ நிர்மூலமாகியிருப்போம். கர்த்தரோ தம்முடைய நீதியினால் நம்மைத் தண்டியாமல், தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். இன்றைய தினத்தில் நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.

யூதாவின் மனுஷர் இப்போது நெருக்கப்படுகிறார்கள். வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள். இந்தப் பாடுகளுக்கு மத்தியிலும் அவர்கள் தேவனுடைய இரக்கத்தையும், அவருடைய தெய்வீக வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்கள் வேதனைப்பட்டபோது, கர்த்தர் தங்களுக்கு இரங்கவில்லை என்றும், கர்த்தர் தங்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை என்றும் பல சமயங்களில் கர்த்தரிடத்தில் முறையிட்டார்கள்.

"கர்த்தர் தாம் நினைத்ததைச் செய்தார்; பூர்வநாட்கள் முதற்கொண்டு தாம் கட்டளையிட்ட தமது வார்த்தையை நிறைவேற்றினார்; அவர் தப்பவிடாமல் நிர்மூலமாக்கி, உன்மேல் பகைஞன் சந்தோஷிக்கும்படி செய்தார்; உன் சத்துருக்களின் கொம்பை உயர்த்தினார்" (புல 2:17).

"இளைஞனும் முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் தரையிலே கிடக்கிறார்கள்; என் கன்னிகைகளும் என் வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்கள்; உமது கோபத்தின் நாளிலே வெட்டி, அவர்களைத் தப்பவிடாமல் கொன்றுபோட்டீர்" (புல 2:21).

கர்த்தர் தங்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லையென்று சொன்னவர்கள், இப்போது தாங்கள் சொன்னது தப்பிதமானது என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். தங்களுடைய தப்பிதங்களைத் திருத்திக்கொள்ளவும் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பித்திருக்கிறார். "கர்த்தருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" (புல 3:22) என்று இஸ்ரவேல் புத்திரர் அறிக்கை செய்கிறார்கள்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களை விட்டு எப்போதும் விலகிப்போனதில்லை. "கர்த்தருடைய கிருபைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது" (புல 3:23) என்று இஸ்ரவேல் புத்திரர் நன்றியுள்ள இருதயத்தோடு சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபமாகயிருந்தாலும், அவர் தம்முடைய கிருபைகளை அவர்களுக்கு காண்பித்தார். கர்த்தருடைய கிருபை நீரூற்றைப்போல அவர்களுக்கு வந்துகொண்டேயிருந்தது. நீரூற்று பூரணமாயிருந்தது. அது நின்றுபோகாமல் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

கர்த்தருடைய கிருபையின் நீரூற்று ஒருபோதும் வற்றிப்போகாது. அவருடைய இரக்கங்கள் காலைதோறும் புதியவைகளாயிருக்கும். ஒவ்வொரு நாள் காலையிலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு புதிதாய்க் கிடைக்கும்.

"அதற்குள் இருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர்; அவர் அநியாயஞ்செய்வதில்லை; அவர் குறைவில்லாமல் காலைதோறும் தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார்; அநியாயக்காரனோ வெட்கம் அறியான்" (செப் 3:5).

நமக்கு ஒருவேளை ஆறுதல் இல்லாமலிருக்கலாம். ஆனாலும் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு தொடர்ந்து கிடைத்துக்கொண்டேயிருக்கும். கர்த்தருடைய உண்மை பெரிதாயிருக்கும். அது எப்போதும் நிலைத்திருக்கும். எருசலேம் இப்போதும் அழிந்துபோயிருக்கிறது. கர்த்தருடைய உண்மையோ ஒருபோதும் அழிந்துபோவதில்லை. அது நித்திய காலமாய் நிலைத்திருக்கும்.

தம்மை நம்புகிறவர்களுக்கு கர்த்தருடைய கிருபை போதுமானதாயிருக்கும். கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு தேவையான சந்தோஷத்தையும், சாமாதானத்தையும் ஆறுதலையும் கொடுக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் போதுமானவராயிருந்தார். இப்போதும் போதுமானவராயிருக்கிறார். இனிமேலும் போதுமானவராயிருப்பார். "கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமாசொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்" (புல 3:24) என்று எரேமியா சொல்லுகிறார்.

நாம் இந்த உலகத்தில் எல்லாவற்றையும் இழந்து ஒன்றுமில்லாமலிருக்கலாம். நம்முடைய சுதந்தரம் நம்மைவிட்டு நீங்கிப்போயிருக்கலாம். நம்முடைய ஜீவாதாரங்களெல்லாம் அழிந்துபோயிருக்கலாம். நம்முடைய சரீர ஆரோக்கியம்கூட கெட்டுப்போயிருக்கலாம். ஆனாலும் கர்த்தருக்குள் நம்முடைய பங்கு ஒருபோதும் அழிந்துபோவதில்லை. கர்த்தரே நம்முடைய பங்கு.

கர்த்தர் நமக்கு போதுமானவராயிருக்கிறார். நமக்கு பிரச்சனைகள் அதிகம் இருந்தாலும், துக்கங்களும், துயரங்களும் ஏராளமாயிருந்தாலும், இவையெல்லாவற்றையும் சரிசெய்வதற்கு கர்த்தருடைய கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கிறது.

நம்முடைய சந்தோஷத்திற்கும், சமாதானத்திற்கும் கர்த்தரை மாத்திரமே நம்பவேண்டும். கர்த்தரே நமக்குப் போதுமானவர். "நான் கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்" (புல 3:24) என்று எரேமியா சொல்வதுபோல நாமும் சொல்லவேண்டும். நாம் நம்புகிற உலகப்பிரகாரமான காரியங்கள் எல்லாமே நம்மை கைவிட்டுவிடும். கர்த்தர் மாத்திரமே நம்மை கைவிடாத தேவன். கர்த்தரே நம்முடைய பங்காயிருக்கவேண்டும்.

கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவர்கள் செழித்திருப்பார்கள். கர்த்தரை நம்புகிற நம்பிக்கை ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. நாம் விசுவாசத்தினால் கர்த்தருக்காக காத்திருக்கிறோம். நம்முடைய ஜெபத்தினால் கர்த்தரைத் தேடுகிறோம்.

"தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது" (புல 3:25,26) என்று எரேமியா சொல்லுகிறார். நாம் கர்த்தரைத் தொடர்ந்து தேடுவது, நாம் கர்த்தருக்காக காத்திருப்பதற்கு உதவிசெய்யும். கர்த்தருக்கு காத்திருப்பது நம்முடைய கடமை. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களுக்கும் அவரைத் தேடுகிறவர்களுக்கும் ஆறுதலும், ஆத்தும திருப்தியும் உண்டாகும்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில், நம்முடைய இரட்சிப்புக்காக காத்திருக்கும் போது, கர்த்தர் நம்மை இரட்சிப்பார் என்று நம்பிக்கையோடு காத்திருக்கவேண்டும். இரட்சிப்பு வரும் என்று நம்பவேண்டும். நமக்கு இரட்சிப்பு வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நம்முடைய இரட்சிப்புக்காக நாம் கர்த்தருடைய சமுகத்தில் அமைதியாக காத்திருக்கவேண்டும்.

இரட்சிப்பு வர காலதாமதம் ஏற்படும் போது, கர்த்தரோடு வழக்காடக்கூடாது. தேவனுடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும், வேளைக்கும் நாம் ஒருபோதும் எதிர்த்து நிற்கக்கூடாது. "பிதாவே, உம்முடைய சித்தம் ஆகக்கடவது" என்று கர்த்தருடைய சமுகத்தில் பணிவோடு சொல்லவேண்டும்.

பாடுகளை அனுபவிப்பது நமக்கு நல்லது. "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" (புல 3:27) என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தர் நம்முடைய நன்மைக்காகவே நமக்கு பாடுகளை அனுமதிக்கிறார். கர்த்தர் நம்மீது நுகத்தை வைக்கும்போது, அதைப் பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். நுகத்தை ஏனோதானோவென்று சுமக்காமல், பொறுமையாகவும் சரியாகவும் சுமக்கவேண்டும்.

கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. அதே வேளையில், இரட்சிப்பு வரும் வரையிலும், நுகத்தை சுமக்கிறதும், பாடுகளை சகிக்கிறதும் மனுஷருக்கு நல்லது.

யூதாமனுஷரில் அநேகர் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போய்விட்டார்கள். பெரியவர்களோடு, அவர்களுடைய வாலிபர்களும், சிறுபிள்ளைகளும் சிறையிருப்புக்குப்போனார்கள். அந்நிய தேசத்து சிறையிருப்பு ஒரு நுகம்போல் பாரமாயிருக்கிறது. கர்த்தர் அந்த நுகத்தை கீழே இறக்கி வைக்கும்போது, இளம்பிராயத்திலுள்ளவர்கள் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், அன்பையும், ஆதரவையும், இரட்சிப்பையும் புரிந்துகொள்வார்கள். கர்த்தர் தங்கள் ஜெபத்திற்கு பதில்கொடுத்தார் என்பதையும், தங்களுடைய விசுவாசம் வீணாய்ப்போய்விடவில்லை என்பதையும் அறிந்துகொள்வார்கள்.

தன் இளம்பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது. சிறுவயதில் குனிந்து, வளைந்து வேலை செய்தால்தான், பெரியவர்களான பின்பும் அவர்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள். சிறுவயதில் ஒழுக்கத்தோடும், கட்டுப்பாடோடும் இருக்கிறவர்கள்தான், பெரியவர்களான பின்பும் ஒழுக்க கட்டுப்பாடோடு இருப்பார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. சிறுபிள்ளையாகயிருக்கும்போது ஊதாறித்தனமாக ஊர் சுற்றித்திரிந்தவர்கள், பெரியவர்களான பின்பு உருப்படாமல் போய்விடுவார்கள். தன் இளம்பிராயத்தில் மனத்தாழ்மையைக் கற்றுக்கொண்டால், அவர்கள் பெரியவர்களான பின்பு அவர்களுடைய இருதயத்தில் பெருமையிருக்காது.

நாம் நுகத்தை சுமந்தாலும், அதை நம்முடைய இளம்பிராயத்தில் சுமப்பதுதான் நமக்கு நல்லது. நமக்கு கஷ்டங்களும் பாடுகளும், வேதனைகளும் வரும்போது, நாம் தனித்திருந்து மௌனமாயிருக்க வேண்டும். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண வேண்டும். வீணான சிந்தனைகளுக்கு இருதயத்தில் இடங்கொடுக்கக்கூடாது. கர்த்தரே அந்த நுகத்தை நம்மேல் வைத்திருக்கிறார் என்பதை புரிந்துகொண்டு, அது நமக்கு நல்லது என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் வேதனைகளை அனுபவிக்கும் போது, நாம் கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் மனத்தாழ்மையிருக்கவேண்டும். "நம்பிக்கைக்கு இடமுண்டோ என்று தன் வாயைத் தூளில் நுழுந்துவானாக" (புல 3:29) என்று எரேமியா சொல்லுகிறார். நாம் பாடுகளை அனுபவிக்கும்போது, கர்த்தருடைய சமுகத்தில் தனித்திருந்து, மௌனமாய் அமர்ந்திருக்கவேண்டும். நம்முடைய மௌனத்திற்கு அடையாளமாக நம்முடைய கைகளால், நம்முடைய வாயை பொத்திக்கொள்ளவேண்டும்.

பாடுகளையும் வேதனைகளையும் சகித்துக்கொள்ளாமல், நம்முடைய வாயை விரிவாய்த் திறந்து, கர்த்தரோடு வழக்காடக்கூடாது. நம்முடைய வாயை நம்முடைய கைகளால் பொத்தினால் மாத்திரம் போதாது. "அதை தூளில் நுழுந்துவானாக" என்றும் எரேமியா சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு "நம்முடைய வாயை மண்ணில் புதைத்துக் கொள்ளவேண்டும்" என்பது பொருளாகும்.

நம்முடைய சத்துருக்களை நாம் நேசிக்கவேண்டும். நமக்கு விரோதமாக தீங்கு செய்தவர்களுக்கு நாம் நன்மை செய்யவேண்டும். நம்மிடத்தில் பிறரை மன்னிக்கும் சுபாவம் காணப்படவேண்டும். நம்முடைய பாடுகளுக்கும் வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும் ஒரு சிலர் காரணமாகயிருக்கலாம். அவர்களை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணம் நமக்கு வரக்கூடாது. கர்த்தர்மேல் நம்முடைய பாரங்களை வைத்துவிட்டு, நாம் எப்போதுமே மனத்தாழ்மையோடிருக்கவேண்டும்.

"தன்னை அடிக்கிறவனுக்குத் தன் கன்னத்தைக் காட்டி, நிந்தையால் நிறைந்திருப்பானாக" (புல 3:30) என்று எரேமியா சொல்லுகிறார்.

"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசா 50:6) என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் நுகத்தை சுமக்கும்போது, அந்த நுகம் நமக்கு ஆவிக்குரிய நன்மைகளைத் தரும்.

நாம் சிறுமைப்பட்ட அளவுக்கு தக்கதாக, கர்த்தர் தம்முடைய கிருபையினால், நமக்கு ஆறுதலான காலங்களையும் திரும்பக் கொடுப்பார். நமக்கு பாடுகளும், வேதனைகளும், சிறுமையும் வரும்போது, ஆண்டவர் நம்மை என்றென்றைக்கும் கைவிடமாட்டார் என்னும் நம்பிக்கையோடு இருக்கவேண்டும். கர்த்தர் நம்மை சஞ்சலப்படுத்தினாலும், தமது மிகுந்த கிருபையின்படி நமக்கு இரங்குவார் என்றும் விசுவாசிக்கவேண்டும் (புல 3:31,32).

கர்த்தர் நம்மை கீழே தள்ளினாலும், அவர் ஒருபோதும் தம்முடைய சமுகத்திலிருந்து நம்மை வெளியே தள்ளிவிடமாட்டார். தகப்பன் தன்னுடைய பிள்ளைகளை சிட்சிப்பதுபோலவே கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார். தன்னுடைய பிள்ளை நன்றாயிருக்கவேண்டும் என்பதே தகப்பனுடைய நோக்கம். கர்த்தர் நம்மை கண்டித்து திருத்தும்போது, நம்முடைய சுதந்தரமான ஆசீர்வாதங்களிலிருந்து நம்மை விலக்கி வைக்கமாட்டார்.

சில சமயங்களில் கர்த்தர் நம்மை ஒதுக்கி வைப்பதுபோலவும், நமக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் விலக்கப்பட்டது போலவும் இருக்கும். ஆனாலும் சிறிதுகாலம் மாத்திரமே கர்த்தர் தம்முடைய முகத்தை நமக்கு மறைப்பார். நம்முடைய பாவங்களினால், கர்த்தர் நம்மீது கோபப்படும்போது, அவர் சிறிதுகாலம் நம்மை விட்டு விலகிப்போகிறார். ஆனாலும் தம்முடைய நித்திய கிருபையினால் கர்த்தர் நம்மை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார். கர்த்தருடைய கிருபையிலிருந்து நாம் சிறிதுகாலம் பிரிந்திருந்தாலும், நித்திய காலமாக பிரிந்திருக்கமாட்டோம்.

நம்முடைய ஜீவியத்தில் நமக்கு துக்கங்களும், வருத்தங்களும் உண்டாகிறது. வேதனைகளும் பாடுகளும் வருகிறது. கர்த்தருடைய சித்தமில்லாமல் நமக்கு ஒன்றும் நேரிடாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நம்முடைய ஜீவியத்தில் நடைபெறும் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தருடைய கரம் இருக்கிறது. நமக்கு பாடுகளும், கஷ்டங்களும் வந்தாலும் அவை நமக்கு நித்தியமான வேதனைகளாகயிருக்காது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் மாத்திரமே நமக்கு கஷ்டம் இருக்கும். கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால் நம்முடைய கஷ்டங்களிலிருந்து நம்மை மீட்டுக்கொள்வார்.

"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" (1பேது 1:6).

நாம் கர்த்தரை துக்கப்படுத்தியிருந்தாலும் கர்த்தர் நம்மை துக்கப்படுத்தியிருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு அவருடைய கிருபையும், இரக்கமும், ஆறுதல்களும் நிச்சயமாய்க் கிடைக்கும். கர்த்தரே நம்மை காயப்படுத்துகிறவர். அவரே நம்முடைய காயங்களுக்கு மருந்து கட்டி, நம்முடைய காயங்களைக் குணப்படுத்துகிறவர்.

"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்" (ஓசி 6:1).

கர்த்தர் தம்முடைய பெரிதான இரக்கத்தினால் நமக்கு கிருபை காண்பிக்கிறார். நம்முடைய சுயபக்தியினாலோ, சுயபுத்தியினாலோ கர்த்தருடைய கிருபைகளை சம்பாதிக்க முடியாது. கர்த்தர் தம்முடைய பெரிதான இரக்கத்தினாலேயே நமக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபை சிறிது காலம் நம்மை விட்டு நீக்கப்பட்டிருந்தாலும், அவர் தம்முடைய மாறாத அன்பினாலும், பெரிதான இரக்கத்தினாலும், தம்முடைய கிருபையை நமக்கு மறுபடியுமாய் வெளிப்படுத்துவார்.

கர்த்தர் ஒருபோதும் மனுபுத்திரரை மனப்பூர்வமாய் சிறுமையாக்கி சஞ்சலப்படுத்துகிறதில்லை (புல 3:33). கர்த்தர் நமக்கு சிறுமையையும் சஞ்சலத்தையும் அனுமதிக்கிறார். நாம் தெளிந்த புத்தியடையவேண்டும் என்பதற்காகவும், கர்த்தரைப்பற்றிய ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும், கர்த்தர் நமக்கு சஞ்சலங்களை அனுமதிக்கிறார்.

நாம் இப்போது வேதனைகளை அனுபவித்தாலும், இதன் முடிவு பரிசுத்தமானது. நம்முடைய சஞ்சலத்தில் கர்த்தர் ஒருபோதும் பிரியப்படுகிறவரல்ல. நாம் சிறுமைப்பட்டிருக்கும்போது கர்த்தர் நம்மைப் பார்த்து பெருமைப்படுகிறவருமல்ல. அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரை சிறுமைப்படுத்தமாட்டார். யாரையும் சஞ்சலப்படுத்தவேண்டும் என்னும் விருப்பம் கர்த்தருடைய இருதயத்தில் இல்லை.

நம்முடைய சஞ்சலத்திற்கும், நம்முடைய சிறுமைக்கும் நாமே காரணம். கர்த்தர் காரணமில்லாமல் யாரையும் சஞ்சலப்படுத்தமாட்டார். கர்த்தர் தம்முடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறார். நாம் சிறுமைப்படுவதும், சஞ்சலப்படுவதும் நமக்கு நன்மையைக் கொடுக்கும் என்பதற்காகவே, கர்த்தர் நம்மைத் தண்டிக்கிறார்.

பல சமயங்களில் நமக்கு பாடுகளும் உபத்திரவங்களும் வருகிறது. நம்முடைய ஜீவியத்தில் நெருக்கங்களும் சஞ்சலங்களும் உண்டாகிறது. கர்த்தருடைய கரத்திலிருந்து இப்படிப்பட்ட தண்டனைகளை பெற்றுக்கொள்வதற்கு நாம் பாத்திரவான்களாயிருப்போம். இந்தத் தண்டனைகள் நமக்கு தேவை என்று கர்த்தர் தீர்மானம்பண்ணும்போது, நமக்கு சஞ்சலமும் சிறுமையும் உண்டாகிறது.

பாவிகள் மரித்துப்போவதில் கர்த்தர் பிரியப்படமாட்டார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். கர்த்தருடைய சிருஷ்டிகளில், எந்த சிருஷ்டியும் காரணமில்லாமல் சஞ்சலப்படுவது கர்த்தருக்கு சித்தமல்ல. அப்படிப்பட்ட சஞ்சலங்களில் கர்த்தர் ஒருபோதும் பிரியப்படுகிறவருமல்ல.

நாம் சஞ்சலங்களை அனுபவித்தாலும், நாம் சிறுமைப்பட்டாலும், கர்த்தர் நம்முடைய கஷ்டங்களைப் பார்த்து மனம் வருந்துகிறார். இஸ்ரவேலின் பாடுகளையும் உபத்திரவங்களையும் பார்த்து கர்த்தருடைய ஆத்துமா பரிதபிக்கிறது. நாம் வேதனைப்படும்போது, நம்முடைய வேதனைகளைப் பார்த்து, கர்த்தருடைய ஆத்துமாவும் வேதனைப்படும்.

கர்த்தர் நம்மை சிறுமைப்படுத்தினாலும், கர்த்தர் நம்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். அவர் மனப்பூர்வமாய் எந்த மனுபுத்திரரையும் சிறுமையாக்கமாட்டார். மனுபுத்திரர் என்னும் வார்த்தை, உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையும் குறிக்கிறது. இதில் இஸ்ரவேலின் காணியாட்சிக்குட்பட்டவர்களும் இருக்கிறார்கள், புறம்பானவர்களும் இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய காணியாட்சிக்குட்பட்டவர்கள். உலகப்பிரகாரமான ஜனங்களையே கர்த்தர் மனப்பூர்வமாய் சிறுமையாக்காமலிருக்கும் போது, அவருடைய பிள்ளைகளாகிய நம்மை, அவர் மனப்பூர்வமாய் சிறுமையாக்கமாட்டார் என்பது நிச்சயம்.

கர்த்தருடைய முகம் நமக்கு விரோதமாய் கோபமாயிருந்தாலும், அவருடைய கரங்களில் நம்மைத் தண்டிக்கும் பிரம்பு இருந்தாலும், நாம் கர்த்தருடைய இருதயத்திலுள்ள அன்பை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கவேண்டும். அதுவே நமக்கு மெய்யான சந்தோஷத்தையும், மெய்யான ஆறுதலையும் தரும்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு, மனுஷரை தம்முடைய கையாக பயன்படுத்துகிறார். மனுஷரை தம்முடைய கரத்திலுள்ள கருவிகளாகப் பயன்படுத்துகிறார். தம்முடைய பிள்ளைகளைத் திருத்துவதற்கு, கர்த்தர் ஒரு சில மனுஷரை தேர்ந்தெடுத்து, அவர்களை தம்முடைய கரங்களில் ஒரு கருவியாகப் பயன்படுத்தி, அவர்கள் மூலமாய் நம்மை சிட்சிக்கிறார்.

கர்த்தருடைய கரத்திலுள்ள கருவிகள் அநியாயமும், அக்கிரமமும், பாவமும் செய்யும்போது, கர்த்தர் அவர்கள்மீதும் பிரியப்படமாட்டார். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களையும் தண்டிப்பார்.

பொதுவாக கர்த்தருடைய ஜனத்திற்கு அவர்களுடைய சத்துருக்கள் மூலமாய் இரண்டு வழிகளில் சஞ்சலமும், பாடுகளும், வேதனைகளும் உண்டாகிறது. அவையாவன : 1. பிறருக்கு அநியாயமாய்த் தீங்கு செய்வது. 2. நியாயத்தைப் புரட்டுவது. கர்த்தர் இவ்விரண்டு வழிகளையும் அனுமதிக்கவில்லை என்பதை எரேமியா தீர்க்கதரிசி இங்கு தெளிவுபடுத்துகிறார்.

"ஒருவன் பூமியில் சிறைப்பட்டவர்கள் யாவரையும் தன் கால்களின்கீழ் நசுக்குகிறதையும், உன்னதமானவரின் சமுகத்தில் மனுஷருடைய நியாயத்தைப் புரட்டுகிறதையும். மனுஷனை அவனுடைய வழக்கிலே மாறுபாடாக்குகிறதையும், ஆண்டவர் காணாதிருப்பாரோ?" (புல 3:34-36) என்று எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார்.

மனுஷர் தங்களுடைய ஆயுதங்களின் பலத்தினால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தீங்கு செய்வதை, அவர் அனுமதிப்பதில்லை. பூமியில் சிறைப்பட்டவர்களை யாராவது தங்களுடைய கால்களினால் நசுக்கினால், கர்த்தர் அதில் பிரியமாயிருக்கமாட்டார். சிறைப்பட்டவர்கள் தங்களுடைய வேதனைகளை தாங்கிக்கொள்ள முடியாமல், கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, அவர்களுடைய வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் கர்த்தர் தமது கிருபையினால் செவிகொடுப்பார். மனிதாபிமானமில்லாமல், ஈவு இரக்கமில்லாமல் மனுஷருக்கு செய்யப்படும் தீங்குகளை கர்த்தர் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.

ஒரு சிலர் மனுஷருடைய நியாயத்தைப் புரட்டுவார்கள். வழக்கை மாறுபாடாக்குவார்கள். மனுஷருடைய வழக்குகளை நியாயமாய் விசாரித்து அவர்களுக்கு நீதியான தீர்ப்பு கொடுக்கவேண்டும். வழக்கை விசாரிக்கும்போது முகத்தாட்சணியமோ, பட்சபாதமோ காண்பிக்கக்கூடாது. நியாயவிசாரிப்பு சத்தியத்திற்கு கட்டுப்பட்டு நடைபெறவேண்டும். யாராவது நியாயத்தைப் புரட்டினால், கர்த்தர் அதை அங்கீகரிக்கமாட்டார்.

வழக்குகள் நேர்மையாய் நடைபெற வேண்டும். பொய்ச்சாட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பொய்யை மெய் என்றும், மெய்யை பொய் என்றும் சாதிக்கிறவர்களை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார். நியாயாதிபதிகள் அநீதியான தீர்ப்பு கொடுக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய தீயசெயல்களை தம்முடைய நீதியின் கண்களால் கவனித்துக்கொண்டிருக்கிறார். நியாயவிசாரிப்பு முழுவதுமே உன்னதமானவரின் சமுகத்தில் நடைபெறுகிறது.

பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள், அநீதியான தீர்ப்பு சொல்லுகிறவர்கள், நியாயத்தைப் புரட்டுகிறவர்கள், வழக்கிலே மாறுபாடு உண்டுபண்ணுகிறவர்கள் ஆகியோரின் துர்க்கிரியைகளை கர்த்தர் அங்கீகரிப்பதில்லை. அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வரும். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு கொடுக்கப்படும்.

கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம் புல 3:37-41

புல 3:37. ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?

புல 3:38. உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ?

புல 3:39. உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன?

புல 3:40. நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.

புல 3:41. நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக் கடவோம்.

கர்த்தர் நமக்கு சஞ்சலத்தையும் சிறுமையையும் கொடுக்கும்போது, நாம் கர்த்தரோடு விவாதம்பண்ணக்கூடாது. "உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன?" (புல 3:39) என்று எரேமியா கேட்கிறார். தேவன் சர்வஆளுகையுள்ளவர். அவர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய சர்வசிருஷ்டிகளையும் பராமரிக்கிறார். சிருஷ்டிகளாகிய நாம், நம்மை சிருஷ்டித்தவரோடு விவாதம்பண்ணக் கூடாது. ஆகையினால்தான் "உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்" என்று எரேமியா கேட்கிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். சிறையிருப்பில் தாங்கள் அனுபவிக்கிற எல்லா பாடுகளும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே உண்டாயிருக்கிறது என்று விசுவாசித்து, அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். சிறையிருப்பின் வேதனைகளை சகித்துக்கொள்ளவேண்டும். யூதா மனுஷருடைய பாவத்தின் நிமித்தமாகவே, கர்த்தர் அவர்களுக்கு அந்நிய தேசத்து சிறையிருப்பைக் கொடுத்து, அவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் தங்களுடைய பாவங்களுக்காக தங்களைத் தண்டிக்கும்போது, தண்டனையை அனுபவிக்கிறவர்கள், தண்டனையைக் குறித்து கர்த்தரிடத்தில் முறையிடக்கூடாது. "அவன் தன் பாவத்திற்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன" என்று எரேமியா கேட்கிறார்.

எல்லோரும் பாவம் செய்து, ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். ஆதாமின் சந்ததியில் வந்திருக்கிற நாம் எல்லோருமே, பாவமான மனுஷர்கள். கர்த்தர் நம்முடைய பாவங்களின் நிமித்தமாய் நம்மைத் தண்டிக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு எவ்வளவு தண்டனை கொடுக்கவேண்டுமோ, அவ்வளவு தண்டனையையும் கர்த்தர் நமக்கு கொடுப்பதில்லை. அவர் தம்முடைய கிருபையினால், நமக்கு குறைவான தண்டனையையே கொடுக்கிறார். ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் முறையிடுவதினாலோ, அவரோடு விவாதம்பண்ணுவதினாலோ எந்தவிதமான நியாயமுமில்லை.

நாம் கர்த்தரிடத்தில், நம்முடைய தண்டனைகளுக்காக முறையிடாமல், நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் ஒப்புரவாகவேண்டும். கர்த்தர் நம்முடைய சித்தத்திற்கு ஒப்புரஹாக வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. நாம்தான் கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய விருப்பத்தின் பிரகாரமாக கர்த்தர் நடந்துகொள்ளவேண்டும் என்றோ, நம்முடைய சித்தத்தின் பிரகாரமாக கர்த்தர் கிரியை நடப்பிக்கவேண்டும் என்றோ நாம் எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தருடைய சித்தமும், திட்டமும், விருப்பமும் தெய்வீகமானது. நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நம்மை சஞ்சலப்படுத்தும் போதும், சிறுமைப்படுத்தும்போதும், இதில் கர்த்தருடைய நோக்கம் என்ன என்பதை, நாம் அமர்ந்திருந்து தியானிக்கவேண்டும். நாம் வேதனைகளை அனுபவிக்கும்போது, நம்முடைய பாவங்களை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். "நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்" (புல 3:40) என்று எரேமியா சொல்லுகிறார். நம்முடைய வழிகளை நாம் எப்போதும் சோதித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போதுதான், நம்மால் நம்மை சோதித்து ஆராய்ந்து பார்க்க முடியும்.

நம்முடைய சுயவிருப்பங்களின் பிரகாரம் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கக்கூடாது. நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதுவே நம்முடைய உண்மையான நிலமையை புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவிசெய்யும். நம்முடைய நோக்கம் என்ன என்பதையும், நம்முடைய முடிவின் இலக்கு என்ன என்பதையும், நம்மை ஆளுகை செய்யும் பிரமாணம் எது என்பதையும் சோதித்துப் பார்க்கவேண்டும். நாம் தவறான வழிகளில் போவோமென்றால், நம்முடைய முடிவு நித்திய அழிவாகவே இருக்கும். நாம் கர்த்தருக்கு பிரியமான வழியில் போவோமென்றால், நம்முடைய முடிவு நித்திய ஜீவனாயிருக்கும்.

நாம் சஞ்சலப்படும்போது நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். "இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள்" (ஆகா 1:5). நாம் போகும் வழியில் ஏதாவது குழப்பமோ, கர்த்தருக்கு விரோதமான பாவமோ இருக்குமென்றால், நம்முடைய வழியை மாற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தரிடத்திற்குப் போகும் வழியே சரியான வழி. நாம் தவறான பாதையில் போகும்போது, ஆரம்பத்திலேயே நம்முடைய தப்பிதத்தைத் திருத்திக்கொண்டால், நமக்கு அதிக சேதாரமுண்டாகாது. கர்த்தரும் நமக்கு அதிகமான சஞ்சலங்களையும், அதிகமான குறைவுகளையும் கொடுக்கமாட்டார்.

ஒரு தேசம் முழுவதற்கும் சஞ்சலமும், வேதனையும், குறைவும் உண்டாகும்போது, நாம் நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்காமல், மற்றவர்களுடைய வழிகளைப்பற்றி குற்றம் சொல்லக்கூடாது. பிறருடைய தவறான வழிகளினால், அநேகருக்கு சஞ்சலமுண்டாயிருப்பதாக சொல்லக்கூடாது. கர்த்தரோ நமக்கு தெளிவான கட்டளையைக் கொடுக்கிறார். நாம் பிறருடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்கக்கூடாது. நாம் நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதன் பின்பு நாம் கர்த்தரிடத்தில் திரும்பவேண்டும். நம்மிடத்தில் தப்பிதங்கள் இருக்கும்போது, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் திரும்பவேண்டும் என்று சொல்லும்போது, நாம் ஏற்கெனவே கர்த்தரோடு கூடயிருந்தோம் என்றும் அதற்கு பொருள் உண்டு. நாம் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போன போது, நமக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. நமக்கு ஏராளமான சஞ்சலங்களும், அதிகமான குறைவுகளும் உண்டாயிற்று. நம்முடைய ஜீவியம் சீரடையவேண்டுமென்றால், நம்முடைய சஞ்சலங்களும் குறைவுகளும் நம்மைவிட்டு நீங்கவேண்டுமென்றால், நாம் மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும் போது, நம்முடைய வேண்டுதல்களும் விண்ணப்பங்களும், நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். "நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலி ருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக் கடவோம்" (புல 3:41) என்று எரேமியா சொல்லுகிறார்.

நம்முடைய ஜெபவார்த்தைகளில், நம்முடைய ஆத்துமாவை ஊற்றவேண்டும். நாம் ஜெபிக்கும்போது நம்முடைய ஆத்துமா, கர்த்தருக்கு நேராக திரும்புகிறது. "கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்" (சங் 25:1). நம்முடைய ஆத்துமாவை பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு உயர்த்தவேண்டும். நம்முடைய ஆத்துமா பரலோகத்திலுள்ள தேவனோடு நித்தியகாலமாய் கூடவே இருக்கவேண்டும் என்று விரும்புகிறது.

நாம் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஆத்துமாவை, பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு வழிநடத்தும் பாதைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் ஒவ்வொரு முறையும் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஆத்துமா தேவனுக்கு அருகாமையில் கிட்டிச்சேரவேண்டும். நாம் எத்தனை தரம் ஜெபம்பண்ணினாலும், நம்முடைய இருதயம் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கே உயர்த்தப்படவேண்டும்.

தேவரீர் மன்னியாதிருந்தீர் புல 3:42-54

புல 3:42. நாங்கள் துரோகஞ்செய்து, கலகம் பண்ணினோம்; ஆகையால் தேவரீர் மன்னியாதிருந்தீர்.

புல 3:43. தேவரீர் கோபத்தால் மூடிக்கொண்டு, எங்களைத் தப்பவிடாமல் பின்தொடர்ந்து கொன்றீர்.

புல 3:44. ஜெபம் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு உம்மை மேகத்தால் மூடிக்கொண்டீர்.

புல 3:45. ஜனங்களுக்குள்ளே எங்களைக் குப்பையும் அருவருப்புமாக்கினீர்.

புல 3:46. எங்கள் பகைஞர் எல்லாரும் எங்களுக்கு விரோதமாய்த் தங்கள் வாயைத் திறந்தார்கள்.

புல 3:47. திகிலும் படுகுழியும் பாழ்க்கடிப்பும் சங்காரமும் எங்களுக்கு நேரிட்டது.

புல 3:48. என் ஜனமாகிய குமாரத்தி அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது.

புல 3:49. கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப்பார்க்குமட்டும்.

புல 3:50. என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகிறது.

புல 3:51. என் நகரத்தினுடைய குமாரத்திகள் அனைவரினிமித்தமும், என் கண் என் ஆத்துமாவுக்கு நோவுண்டாக்குகிறது.

புல 3:52. முகாந்தரம் இல்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என்னை ஒரு பட்சியைப் போல வேட்டையாடினார்கள்.

புல 3:53. காவற்கிடங்கிலே என் பிராணனை ஒடுக்கி, என்மீதில் கல்லை வைத்தார்கள்.

புல 3:54. தண்ணீர் என் தலையின்மேல் புரண்டது; நாசமானேன் என்றேன்.

எரேமியா தீர்க்கதரிசி மனுஷரைப்பற்றிச் சொல்லும்போது, "உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்" (புல 3:39) என்று சொன்னார். கர்த்தர் நம்முடைய பாவங்களினிமித்தமாக நமக்கு சஞ்சலத்தையும் குறைவையும் கொடுக்கிறார். நாம் வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கும்போது, கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கக்கூடாது, முறையிடக்கூடாது. கர்த்தரோடு விவாதம்பண்ணவும் கூடாது.

எரேமியா மனுஷரைக்குறித்து நல்ல ஆலோசனை சொன்னாலும், மனுஷரால் கர்த்தரிடத்தில் முறையிடாமல் இருக்க முடியவில்லை. "நாங்கள் துரோகஞ்செய்து, கலகம் பண்ணினோம்; ஆகையால் தேவரீர் மன்னியாதிருந்தீர்" (புல 3:42) என்று எரேமியா சொல்லுகிறார். "பாவம்" என்று சொல்லுவதற்குப் பதிலாக, எரேமியா பாவத்தை "துரோகம்" என்றும், "கலகம்" என்றும் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அனுபவிக்கிற பாடுகளைப்பற்றி சொல்லும்போது, தங்களுடைய பாடுகளுக்கும், கர்த்தருக்கும் தொடர்பு இருப்பதுபோல பேசுகிறார். "தேவரீர் கோபத்தால் மூடிக்கொண்டு, எங்களைத் தப்பவிடாமல் பின்தொடர்ந்து கொன்றீர்" (புல 3:43) என்று எரேமியா சொல்லுகிறார்.

தங்களுடைய பாடுகளுக்கு கர்த்தருடைய கோபமே காரணம் என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தர் தங்களுடைய பாவங்களை மன்னிக்கவில்லை என்றும், கர்த்தர் தங்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை என்றும், எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். தேவனுக்கும் தங்களுக்கும் நடுவில் பிரிவினையாகிய ஒரு நடுச்சுவர் இருப்பதுபோல எரேமியா பேசுகிறார்.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் ஜனங்களை மூடிப்போட்டார். மரித்த பிரேதங்களை அடக்கம்பண்ணும்போது, அதை ஒரு மெல்லிய வஸ்திரத்தால் மூடுவது வழக்கம். அதன் பின்பு அந்த பிரேதத்தை அடக்கம்பண்ணி, அந்த நபரைப்பற்றி மறந்துவிடுவார்கள். அதுபோலவே கர்த்தரும், இஸ்ரவேல் ஜனங்களை செத்த பிரேதங்களைப்போல பாவித்து, அவர்களை மூடிப்போட்டு மறந்துவிட்டார் என்று எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை மூடியதோடு, அவர் தம்மையும் மேகத்தால் மூடிக்கொள்கிறார். இதனால் நம்முடைய ஜெபம், பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு போய்ச்சேருவதில்லை. கர்த்தர் தம்மை மூடியிருக்கும் மேகத்தைத் தாண்டி, நம்முடைய ஜெபம் அவருடைய சமுகத்தில் பிரவேசிப்பதில்லை. நம்முடைய ஜெபவார்த்தைகள் மேகத்திலேயே காணாமல் போய்விடுகிறது.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷருடைய நெருக்கங்களைப்பற்றிச் சொல்லும்போது, யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள ஜனங்களைப்பற்றியும் முறையிடுகிறார். "ஜனங்களுக்குள்ளே எங்களைக் குப்பையும் அருவருப்புமாக்கினீர்" (புல 3:45). அண்டை தேசத்தார் யூதாவின் மனுஷரைக்குறித்து தூஷணவார்த்தைகளைப் பேசினார்கள். அவர்களை ஏளனம்பண்ணி அவமானப்படுத்தினார்கள். இதனால் யூதருடைய சத்துருக்களும், அவர்களை ஏளனம்பண்ணுகிறார்கள். "எங்கள் பகைஞர் எல்லாரும் எங்களுக்கு விரோதமாய்த் தங்கள் வாயைத் திறந்தார்கள்" (புல 3:46) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷருக்கு திகிலும், படுகுழியும், பாழ்க்கடிப்பும், சங்காரமும் நேரிட்டது. "என் ஜனமாகிய குமாரத்தி அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது" (புல 3:48) என்றும், "என் நகரத்தினுடைய குமாரத்திகள் அனைவரினிமித்தமும், என் கண் என் ஆத்துமாவுக்கு நோவுண்டாக்குகிறது" (புல 3:51) என்றும் எரேமியா சொல்லுகிறார்.

யூதா மனுஷருடைய சத்துருக்கள் அவர்களை விரட்டிப் பிடிக்கிறார்கள். யூதர்களைப் பின்தொடர்ந்து வந்து, அவர்களை மேற்கொள்கிறார்கள். யூதர்களை அழிக்கும் வரையிலும் அவர்கள் ஓய்வெடுக்கவில்லை.

"முகாந்தரம் இல்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என்னை ஒரு பட்சியைப் போல வேட்டையாடினார்கள். காவற்கிடங்கிலே என் பிராணனை ஒடுக்கி, என்மீதில் கல்லை வைத்தார்கள்" *(புல 3:52,53).*

செத்துப்போன பிரேதத்தை கல்லறையில் அடக்கம்பண்ணி, அதன்மீது ஒரு கல்லை வைப்பதுபோல, இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுடைய சத்துருக்கள் வேட்டையாடி, காவல்கிடங்கிலே புதைத்துவிட்டார்கள். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ண முடியாமல், தோற்றுப்போனார்கள். யூதர்கள் செத்துப்போனவர்களைப்போல அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். சத்துருக்கள் யூதாதேசத்தைப் பார்க்கும்போது, அதை ஒரு செத்துப்போன தேசம் போலவும், அடக்கம்பண்ணப்பட்ட தேசம் போலவும் பார்க்கிறார்கள். யூதாவின் அழிவு, தண்ணீருக்குள் மூழ்கி செத்துப்போன மனுஷனுடைய அழிவைப்போலிருக்கிறது. "தண்ணீர் என் தலையின்மேல் புரண்டது; நாசமானேன்" *(புல 3:54)* என்று எரேமியா சொல்லுகிறார்.

இஸ்ரவேல் மனுஷருக்கு அதிகமான துக்கமும் பயமும் வந்திருக்கிறது. எருசலேமின் குமாரத்தி அதிகமான கேட்டை அடைந்திருக்கிறாள். இதனால் எரேமியாவின் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது. அவருடைய கண் இடைவிடாமல் ஓய்வின்றி சொரிகிறது *(புல 3:48,49).* எரேமியாவின் கண் அவருடைய ஆத்துமாவுக்கு நோவு உண்டாக்குகிறது *(புல 3:51).* எரேமியா யூதாவின் அழிவுகளை எவ்வளவு அதிகமாகப் பார்க்கிறாரோ, அவ்வளவு அதிகமாக அவருடைய ஆத்துமாவில் துக்கமுண்டாகிறது.

எரேமியா எருசலேமின் அழிவுக்காக அழுது புலம்பினாலும், தங்களுடைய அழிவை கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்ப்பார் என்று ஆறுதலாய்ச் சொல்லுகிறார் *(புல 3:50).* அது வரையிலும் எரேமியாவின் கண் இடைவிடாமல் அழும். தொடர்ந்து கண்ணீர் விடும். கர்த்தர் பரலோகத்திலிருந்து தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்தாலே போதும். அவர்களுடைய சஞ்சலங்களும், குறைவுகளும், பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் அவர்களைவிட்டு நீங்கிப்போகும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி இடைவிடாமல் தொடர்ந்து அழும்போது, அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் எதிர்பார்த்து இடைவிடாமல் காத்திருக்கிறார்கள். கர்த்தர் பரலோகத்திலிருந்து யூதாவின் மனுஷரை நோக்கிப் பார்க்கும் வரையிலும், அவர்களுடைய கண்கள் இடைவிடாமல், ஓய்வின்றி கண்ணீர் விட்டு அழுதுகொண்டேயிருக்கும்.

என் பிராணனை மீட்டுக்கொண்டீர் புல 3:55-66

புல 3:55. மகா ஆழமான கிடங்கிலிருந்து, கர்த்தாவே, உம்முடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிட்டேன்.

புல 3:56. என் சத்தத்தைக் கேட்டீர்; என் பெருமூச்சுக்கும் என் கூப்பிடுதலுக்கும் உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும்.

புல 3:57. நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர்.

புல 3:58. ஆண்டவரே, என் ஆத்துமாவின் வழக்கை நடத்தினீர்; என் பிராணனை மீட்டுக்கொண்டீர்.

புல 3:59. கர்த்தாவே, எனக்கு உண்டான அநியாயத்தைக் கண்டீர்; என் நியாயத்தைத் தீரும்.

புல 3:60. அவர்களுடைய எல்லாக் குரோதத்தையும், அவர்கள் எனக்கு விரோதமாக நினைத்த எல்லா நினைவுகளையும் கண்டீர்.

புல 3:61. கர்த்தாவே, அவர்கள் நிந்திக்கும் நிந்தையையும், அவர்கள் எனக்கு விரோதமாய் நினைத்த எல்லா நினைவுகளையும்,

புல 3:62. எனக்கு விரோதமாய் எழும்பினவர்களின் வாய்மொழிகளையும், அவர்கள் நாள்முழுதும் எனக்கு விரோதமாய் யோசிக்கும் யோசனைகளையும் கேட்டீர்.

புல 3:63. அவர்கள் உட்கார்ந்திருப்பதையும் அவர்கள் எழுந்திருப்பதையும் நோக்கிப்பாரும்; நான் அவர்களுடைய பாடலாயிருக்கிறேன்.

புல 3:64. கர்த்தாவே, அவர்கள் கைகள் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக அவர்களுக்குப் பலன் அளிப்பீர்.

புல 3:65. அவர்களுக்கு இருதய வேதனையைக் கொடுப்பீர், உம்முடைய சாபம் அவர்கள் மேல் இருக்கும்.

புல 3:66. கோபமாய் அவர்களைப் பின் தொடர்ந்து கர்த்தருடைய வானங்களின் கீழ் இராதபடிக்கு அவர்களை அழித்துவிடுவீர்.

எரேமியா தீர்க்கதரிசியின் இருதயத்திலே விசுவாசமும், பயமும், நம்பிக்கையும் ஒன்றாய்க் கலந்திருக்கிறது. சில சமயங்களில் இம்மூன்றுக்கும் இடையே அவருடைய உள்ளத்தில் போராட்டம் நடைபெறுகிறது. கர்த்தர் நல்லவர். அவரை நம்புகிறவர்களுக்கு, அவருடைய கிருபை என்றுமுள்ளது.

கர்த்தர் தங்களுடைய ஜெபத்தை கேட்பாரோ, கேட்கமாட்டாரோ என்னும் சந்தேகம் இஸ்ரவேல் மனுஷருடைய மனதில் இருந்தது. தங்களுடைய ஜெபம் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு, கர்த்தர் தம்மை மேகத்தால் மூடிக்கொண்டார் (புல 3:44) என்னும் பயமும் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருந்தது. ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார்.

எரேமியா பல சமயங்களில் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தில் பயம் இருந்ததுபோலவே, எரேமியாவின் இருதயத்திலும் பயம் இருந்தது. கர்த்தர் தன்னுடைய ஜெபத்தைக் கேட்பாரோ, கேட்கமாட்டாரோ என்று, யூதா மனுஷரைப்போல, எரேமியாவும் தன்னுடைய அவிசுவாசத்தினாலே பயப்பட்டார். ஆனாலும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார்.

"காவற்கிடங்கிலே என் பிராணனை ஒடுக்கி, என்மீதில் கல்லை வைத்தார்கள். தண்ணீர் என் தலையின்மேல் புரண்டது; நாசமானேன் என்றேன். மகா ஆழமான கிடங்கிலிருந்து, கர்த்தாவே, உம்முடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிட்டேன்" (புல 3:53-55) என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவின் சத்தத்தைக் கேட்டார். எரேமியா கர்த்தரிடத்தில் "என் பெருமூச்சுக்கும், என் கூப்பிடுதலுக்கும் உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும்" (புல 3:56) என்று விண்ணப்பம்பண்ணினார். கர்த்தர் எரேமியாவின் விண்ணப்பத்திற்கு தம்முடைய செவியை அடைத்துக் கொள்ளவில்லை. எரேமியாவின் சத்தத்தைக் கேட்டார்.

"நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர். ஆண்டவரே, என் ஆத்துமாவின் வழக்கை நடத்தினீர்; என் பிராணனை மீட்டுக்கொண்டீர்" (புல 3:57,58) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா கர்த்தரிடத்தில் ஏறெடுக்கிற ஜெபத்தை, தன்னுடைய "பெருமூச்சு" என்று சொல்லுகிறார். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய சுவாசத்தை கர்த்தருக்கு நேராக ஏறெடுக்கிறோம். நாம் கர்த்தரை நோக்கி பெருமூச்சுவிடுகிறோம். இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் கர்த்தருக்குள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள். ஜெபமானது புதிய மனுஷனுடைய சுவாசமாயிருக்கிறது.

நம்முடைய விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும்போது, அவருடைய இரக்கத்தின் காற்றை நமக்குள்ளே இழுக்கிறோம். நமக்குள்ளே போன கர்த்தருடைய கிருபையின் காற்று, நமக்கு வெளியே துதிகளாகவும், ஸ்தோத்திரங்களாகவும் வெளியேறுகிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம், ஜீவனுள்ளதாயிருக்கிறது என்பதற்கு, நம்முடைய பெருமூச்சே அடையாளமாயிருக்கிறது. மூச்சு இல்லையென்றால் ஜீவனுமில்லை. உள்ளே இழுத்த காற்றை, வெளியேற்றவும் வேண்டும். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்ட நாம், அவருக்கு ஸ்தோத்திர பலிகளையும் ஏறெடுக்கவும்வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். ஆனாலும் தங்களுடைய ஜெபம், கர்த்தருடைய சமுகத்தில் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு, கர்த்தர் தம்மை மேகத்தால் மூடிக்கொள்வாரோ என்னும் பயம் அவர்களுக்குள் உண்டாயிற்று. இதே பயம் எரேமியாவின் இருதயத்திலும் உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவின் பயத்தை நீக்குகிறார். "பயப்படாதே" என்று கர்த்தர் அவரிடத்தில் அன்போடு சொல்லுகிறார்.

"நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர்" (புல 3:57) என்று எரேமியா சொல்லுகிறார். நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியப்பொறுப்புக்களை விசுவாசத்தோடு நிறைவேற்றவேண்டும்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில் விசுவாசத்தோடு கிட்டிச்சேரும்போது, கர்த்தரும் தம்முடைய கிருபையோடும் இரக்கத்தோடும் நமக்கு அருகாமையில் வருகிறார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் பயத்தோடு வரும்போது, கர்த்தர் நம்மைப் பார்த்து "பயப்படாதே" என்று ஆதரவாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் ஜனத்திற்காக வழக்காடியிருக்கிறார். ஆண்டவர் அவர்களுடைய ஆத்துமாவின் வழக்கை நடத்தினார். அவர்களுடைய பிராணனை மீட்டுக்கொண்டார். அவர்களுக்கு உண்டான எல்லா அநியாயத்தையும் கர்த்தர் கண்டார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் நீதியும் நியாயமுமுள்ளவர். நம்முடைய வழக்குகளை நாம் கர்த்தரிடத்தில் சொல்லும்போது, கர்த்தர் நம்முடைய ஆத்துமாவின் வழக்குகளை நடத்துவார்.

நம்முடைய பாவங்களினிமித்தமாய் நமக்கு வந்திருக்கிற பாடுகளையும், வேதனைகளையும் கர்த்தர் காண்கிறார். கர்த்தருக்கு மறைவானது எதுவுமே இல்லை. அவர் நம்முடைய பாவங்களையும் பார்க்கிறார். நம்முடைய பாவங்களின் நிமித்தமாய் நாம் அனுபவிக்கிற வேதனைகளையும் பார்க்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி, "கர்த்தாவே, எனக்கு உண்டான அநியாயத்தைக் கண்டீர்" என்று சொல்லுகிறார். எரேமியா ஒரு தவறும் செய்யவில்லை. ஆனாலும் அவருக்கு அதிகமான வேதனைகளும், நெருக்கங்களும், பாடுகளும் உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவுக்கு உண்டான அநியாயத்தை தமது கிருபையினால் காண்கிறார். எரேமியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கும் சத்துருக்களுடைய எல்லா குரோதத்தையும் கர்த்தர் காண்கிறார். அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாக நினைத்த எல்லா நினைவுகளையும் காண்கிறார்.

கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்பதுபோலவே, நம்முடைய சத்துருக்கள் நமக்கு விரோதமாகப் பேசும் தூஷண வார்த்தைகளையும் செவிகொடுத்து கேட்கிறார். "கர்த்தாவே, அவர்கள் நிந்திக்கும் நிந்தையையும், அவர்கள் எனக்கு விரோதமாய் நினைத்த எல்லா நினைவுகளையும், எனக்கு விரோதமாய் எழும்பினவர்களின் வாய்மொழிகளையும், அவர்கள் நாள்முழுதும் எனக்கு விரோதமாய் யோசிக்கும் யோசனைகளையும் கேட்டீர்" (புல 3:61,62) என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக பொல்லாப்பு செய்ய நினைக்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்திருந்தாலும் எரேமியாவுக்கு விரோதமாக கூடி யோசிக்கிறார்கள். அவர்கள் எழுந்திருந்தாலும் எரேமியாவுக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். "அவர்கள் உட்கார்ந்திருப்பதையும் அவர்கள் எழுந்திருப்பதையும் நோக்கிப்பாரும்; நான் அவர்களுடைய பாடலாயிருக்கிறேன்" (புல 3:63) என்று எரேமியா கர்த்தரிடத்தில் தன்னுடைய நிலமையை எடுத்துச் சொல்லுகிறார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. நம்முடைய சத்துருக்களை நாம் நேசிக்கவேண்டும். நம்மைத் தூஷிக்கிறவர்களை நாம் ஆசீர்வதிக்க வேண்டும். கர்த்தரே நம்முடைய வழக்குகளை நடத்துகிறவர். நமக்கு விரோதமாகத் தீங்கு செய்தவர்களை, கர்த்தர் தம்முடைய நீதியினால் தண்டிப்பார்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தனக்கு கிடைக்கவேண்டும் என்று எரேமியா ஜெபிக்கிறார். அதே வேளையில், கர்த்தர் தம்முடைய நீதியினால், தன்னுடைய சத்துருக்களுக்கு பதில் செய்யவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். எரேமியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கிற சத்துருக்கள் பெலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை பெருத்தவர்கள். எரேமியாவால், தன்னுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ அவர்களை எதிர்க்க முடியாது. கர்த்தரே தன்னுடைய ஆத்துமாவின் வழக்கை நடத்த வேண்டும் என்றும், அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்குத்தக்கதாக, கர்த்தர் அவர்களுக்கு பலனளிக்கவேண்டும் என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

"கர்த்தாவே, அவர்கள் கைகள் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக அவர்களுக்குப் பலன் அளிப்பீர். அவர்களுக்கு இருதய வேதனையைக் கொடுப்பீர், உம்முடைய சாபம் அவர்கள் மேல் இருக்கும். கோபமாய் அவர்களைப் பின் தொடர்ந்து கர்த்தருடைய வானங்களின் கீழ் இராதபடிக்கு அவர்களை அழித்துவிடுவீர்" (புல 3:64-66) என்பதே எரேமியாவின் பெருமூச்சாயிருக்கிறது.

4 அதிகாரம்

எருசலேமின் அழிவுக்காக எரேமியா அழுது புலம்புகிறார். யூதாதேசத்திலே நல்ல மதிப்போடு இருந்தவர்கள்கூட இப்போது அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் (புல 4:1,2). யூதா தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று. அதனால் ஏராளமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டது (புல 4:3-10). எருசலேம் நகரத்தை சத்துருக்கள் அழித்துப்போட்டார்கள் (புல 4:11,12).

எருசலேமின் பிரபுக்களும், யூதமார்க்கத் தலைவர்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். எருசலேமின் அழிவுக்கு இவர்களுடைய பாவங்களே காரணம் (புல 4:13-16). எருசலேமிலே சகலமும் அழிந்துபோயிற்று (புல 4:17-20).

எருசலேமின் அழிவைப் பார்த்து ஏதோமியர்கள் சந்தோஷப்படுகிறார்கள். அவர்களுக்கும் அழிவு வரும் என்று எரேமியா சொல்லுகிறார் (புல 4:21).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சீயோனுக்கு திரும்பி வருவார்கள் (புல 4:22).

மங்கிப்போயிற்று
புல 4:1-12

புல 4:1. ஐயோ! பொன் மங்கி, பசும்பொன்மாறி, பரிசுத்த ஸ்தலத்தின் கற்கள் சகல வீதிகளின்முனையிலும் கொட்டுண்டுபோயிற்றே.

புல 4:2. ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே.

புல 4:3. திமிங்கிலங்கள் முதலாய்க் கொங்கைகளை நீட்டி, தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்; என் ஜனமாகிய குமாரத்தியோ வனாந்தரத்திலுள்ள தீக்குருவியைப் போல் குரூரமாயிருக்கிறாளே.

புல 4:4. குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது; பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை.

புல 4:5. ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் வீதிகளில் பாழாய்க்கிடக்கிறார்கள்; இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக் கொள்ளுகிறார்கள்.

புல 4:6. கைச்செய்கை இல்லாமல் ஒரு நிமிஷத்திலே கவிழ்க்கப்பட்ட சோதோமின் பாவத்துக்கு வந்த தண்டனையைப்பார்க்கிலும் என் ஜனமாகிய குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வந்த தண்டனை பெரிதாயிருக்கிறது.

புல 4:7. அவளுடைய நசரேயர் உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப் பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப் பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள்.

புல 4:8. இப்பொழுதோ அவர்களுடைய முகம் கரியிலும் கறுத்துப்போயிற்று; வீதிகளில் அறியப்படார்கள்; அவர்கள் தோல் அவர்கள் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு, காய்ந்த மரத்துக்கு ஒப்பாயிற்று.

புல 4:9. பசியினால் கொலையுண்டவர்களைப் பார்க்கிலும் பட்டயத்தால் கொலையுண்டவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்; அவர்கள் வயலின் வரத்தில்லாமையால் குத்துண்டு, கரைந்துபோகிறார்கள்.

புல 4:10. இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன, என் ஜனமாகிய குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின.

புல 4:11. கர்த்தர் தமது கோபத்தை நிறைவேற்றி, தமது உக்கிரகோபத்தை ஊற்றி, சீயோனில் அக்கினியைக் கொளுத்தினார்; அது அதின் அஸ்திபாரங்களைப் பட்சித்துப் போட்டது.

புல 4:12. சத்துருவும் பகைஞனும் எருசலேமின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான் என்கிறதை பூமியின் ராஜாக்களும் பூச்சக்கரத்தின் சகல குடிகளும் நம்பமாட்டாதிருந்தார்கள்.

எருசலேமில் சோகமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. பூர்வகாலத்தில் எருசலேம் நகரம் பசும் பொன்னைப்போல இருந்தது. இப்போதோ பசும்பொன் மாறிவிட்டது. பொன் மங்கிப்போயிற்று. பரிசுத்த ஸ்தலத்தின் கற்கள் சகல வீதிகளின் முனையிலும் கொட்டுண்டுபோயிற்று (புல 4:1).

எருசலேமில் கர்த்தருடைய ஆலயமுள்ளது. தேவாலயமே எருசலேமுக்கு மகிமை. அதுவே அவர்களுக்கு பாதுகாப்பு. கல்தேயர்கள் தேவாலயத்தை இடித்துப்போட்டார்கள். தேவாலயத்தில் பொன்னால் செய்யப்பட்ட பரிசுத்த பணிமுட்டுக்கள் ஏராளமாயிருந்தன.

"ஆலயத்தின் உட்புறத்தைச் சாலொமோன் பசும்பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்தின் மறைப்புக்கும் பொன் சங்கிலிகளைக் குறுக்கே போட்டு, அதைப் பொன்தகட்டால் மூடினான். இப்படி ஆலயம் முழுவதும் கட்டித் தீருமட்டும், அவன் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக இருக்கிற பலி பீடத்தை முழுவதும் பொன்தகட்டால் மூடினான்" (1இராஜா 6:21,22).

கல்தேயர்கள் தேவாலயத்தை இடித்துப்போட்டு, அதை அக்கினியினால் சுட்டெரித்தார்கள். தேவாலயத்திலுள்ள பொன்னையெல்லாம் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கற்களையெல்லாம் அக்கினியினால் சுட்டெரித்தார்கள். அதை எருசலேமின் வீதிகளிலே தூக்கி எரிந்துவிட்டார்கள். எருசலேம் நகரம் முழுவதுமாய் அழிந்து போயிற்று. அதன் வீதிகளில் கட்டிடங்களின் இடிபாடுகள் கொட்டிக்கிடந்தன. அந்த இடிபாடுகளோடு தேவாலயத்தின் கற்களும் கொட்டப்பட்டன.

எருசலேமிலுள்ள பிரபுக்களும் ஆசாரியர்களும் யூதாதேசத்தில் மிகவும் விசேஷமானவர்கள். அவர்கள் தங்கத்திற்கு ஒப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர். ஆனால் கல்தேயரோ அவர்களை அவமானப்படுத்திவிட்டார்கள்.

"ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்களே" (புல 4:2) என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேமிலுள்ள பொக்கிஷத்தில் பொன்னும் வெள்ளியும் இருந்தது. அதன் மதிப்பைவிட சீயோன் குமாரரின் மதிப்பு விலையேறப்பெற்றது. அவர்கள் தங்கத்திற்கு ஒப்பானவர்கள். ஆனால் கல்தேயர்களோ தங்கத்திற்கு ஒப்பான அவர்களை மண்பாண்டங்களைப்போல சாதாரணமாக எண்ணினார்கள். மண்பாண்டங்கள் உடைந்து ஓடாய்ப்போகும். மண்பாண்டங்களுக்கு பொன்னைப்போல மதிப்பு இல்லை.

கல்தேயர்கள் எருசலேமின் பிரபுக்களையும் ஆசாரியர்களையும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போனார்கள். பிரபுக்களும் ஆசாரியர்களும் எருசலேமிலே மதிப்போடும் மரியாதையோடும் இருந்தவர்கள். ஆனால் இப்போதோ கல்தேயர்கள் அவர்களை சிறைப்படுத்தி அவமானப்படுத்துகிறார்கள்.

எருசலேமிலுள்ள சிறு பிள்ளைகள் பசியினாலும் பட்டினியினாலும் வாடிப்போகிறார்கள். அவர்களுக்கு புசிக்க அப்பமுமில்லை. குடிக்க தண்ணீருமில்லை.

"திமிங்கிலங்கள் முதலாய்க் கொங்கைகளை நீட்டி, தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்; என் ஜனமாகிய குமாரத்தியோ வனாந்தரத்திலுள்ள தீக்குருவியைப்போல் குரூரமாயிருக்கிறாளே. குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது; பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை" (புல 4:3,4) என்று எரேமியா சிறுபிள்ளைகளின் பசியையும் பட்டினியையும் நினைத்து அழுது புலம்புகிறார்.

எருசலேமிலே உயர்ந்த அந்தஸ்துக்களிலிருந்தவர்களெல்லாம் இப்போது தரித்திரராயிருக்கிறார்கள். அவர்கள் நல்ல போஜனங்களைப் புசித்தவர்கள். நல்ல வஸ்திரங்களை உடுத்தியவர்கள். இப்போதோ அவர்களுக்கு புசிப்பதற்கு ஒன்றுமில்லாமல், வீதிகளில் பாழாய்க் கிடக்கிறார்கள். கல்தேயர்கள் பிரபுக்களின் நல்ல வஸ்திரங்களை உரிந்துவிட்டு, அவர்களுக்கு அடிமையின் வஸ்திரங்களை உடுத்துகிறார்கள்.

ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் வீதிகளில் பாழாய்க்கிடக்கிறார்கள்; இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக் கொள்ளுகிறார்கள் (புல 4:5).

எருசலேமின் மாடமாளிகைகளிலும், அரமனை போன்ற வீடுகளிலும் வசித்தவர்கள் இப்போது குப்பைமேடுகளில் கிடக்கிறார்கள். "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்" (சங் 113:7).

எருசலேமிலே அதிகமரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழ்ந்தவர்கள் இப்போது அவமானப்பட்டு பாழாய்க்கிடக்கிறார்கள். பரிசுத்தவான்கள் என்று எண்ணப்பட்டவர்களும் இப்போது மற்றவர்களைப்போல பாடுகளை அனுபவிக்கிறார்கள்.

யூதர்கள் நசரேய விரதம் இருப்பது வழக்கம். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, நசரேய விரதம் இருக்கிறவர்கள், போஜனவிஷயங்களில் அதிக கட்டுப்பாடோடிருப்பார்கள். இதனால் அவர்கள் உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப் பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப் பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள் (புல 4:7).

நசரேயர்கள் கர்த்தருக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அவர்களுடைய முகம் பிரகாசமாயிருக்கும். சீனாய் மலையிலிருந்து மோசே கீழே இறங்கி வந்தபோது அவருடைய முகம் பிரகாசமாயிருந்தது. அதுபோலவே எருசலேமின் வீதிகளில், நசரேய விரதம் இருந்தவர்களின் முகம் விசேஷித்த பிரகாசத்தோடிருந்தது.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் திராட்சரசம் அருந்தமாட்டார்கள். திராட்சப்பழங்களையும் புசிக்கமாட்டார்கள். அவர்கள் மதுபானம் அருந்தமாட்டார்கள். அவர்களுடைய சரீரம் பூரண ஆரோக்கியத்தோடிருக்கும். அவர்களுடைய முகமும் பிரகாசமாயிருக்கும்.

இப்பொழுதோ அவர்களுடைய முகம் கரியிலும் கறுத்துப்போயிற்று; வீதிகளில் அறியப்படார்கள்; அவர்கள் தோல் அவர்கள் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு, காய்ந்த மரத்துக்கு ஒப்பாயிற்று (புல 4:8).

இயேசுகிறிஸ்துவின் முகமும் அந்தக்கேடு அடையுமென்று ஏசாயா தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். "மனுஷனைப்பார்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்" (ஏசா 52:14).

பிரகாசமாயிருந்த நசரேயர்களுடைய முகம் இப்போது கறுத்துப்போயிற்று. அவர்களுடைய இருதயத்தில் வருத்தமும் வேதனையும் நிரம்பியிருக்கிறது. எருசலேமில் பஞ்சமுண்டாயிருப்பதினால் அவர்களுக்கு போஜனம் கிடைக்கவில்லை. அவர்கள் பசியிலும் பட்டினியிலும் இருக்கிறார்கள்.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் எருசலேமின் வீதிகளில் நடக்கும்போது, யூதர்கள் அவர்களுக்கு விசேஷித்த மதிப்பையும் மரியாதையும் கொடுப்பது வழக்கம். இப்போதோ நசரேயர்கள் வீதிகளில் நடக்கும்போது, அவர்களை ஒருவரும் கண்டுகொள்வதில்லை. அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பதில்லை. "நசரேயர்கள் வீதிகளில் அறியப்படார்கள்" என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேமில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. கல்தேயர்கள் எருசலேமைப் பிடித்தார்கள். நகரத்திலுள்ள யூதர்களையெல்லாம் தங்கள் பட்டயத்தால் வெட்டி கொன்றுபோட்டார்கள். கல்தேயரின் பட்டயத்திற்கு தப்பிய யூதர்கள் இப்போது பசியினாலும் பட்டினியினாலும் வேதனைப்படுகிறார்கள்.

பசியினால் கொலையுண்டவர்களைப் பார்க்கிலும் பட்டயத்தால் கொலையுண்டவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்; அவர்கள் வயலின்வரத்தில்லாமையால் குத்துண்டு, கரைந்துபோகிறார்கள் (புல 4:9).

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மேலும் எருசலேமின் குடிகள் மேலும் வந்திருக்கிறது. எருசலேமுக்கு மிகப்பெரிய அழிவு உண்டாயிற்று. பட்டயத்தால் உண்டான அழிவை விட, பஞ்சத்தால் உண்டாகும் அழிவு மிகவும் அதிகமாயிருக்கிறது. பட்டயத்தினால் வெட்டப்படுகிறவர்கள் ஒரே நாளில் செத்துப் போகிறார்கள். பசியினாலும் பஞ்சத்தினாலும் பட்டினியாய்க் கிடக்கிறவர்களோ கொஞ்சம் கொஞ்சமாக செத்துப்போகிறார்கள். அவர்கள் தங்களுடைய மரணத்தின் வேதனையை பூரணமாய் உணருகிறார்கள்.

எருசலேமின் பாவங்களும், மீறுதல்களும், அக்கிரமங்களும் சோதோம் கொமோராவின் அக்கிரமங்களைவிட அதிகமாயிருக்கிறது. கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் அழித்துப்போட்டார். அதுபோலவே கர்த்தர் இப்போது எருசலேமையும் அழித்துப்போடுகிறார்.

கர்த்தருடைய கிருபை எருசலேமுக்கு கிடைத்தது. அவருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களையும், பாதுகாப்புகளையும், பராமரிப்புகளையும் எருசலேமின் குடிகள் அனுபவித்தார்கள். இப்படிப்பட்ட விசேஷித்த சிலாக்கியங்கள் எதுவும் சோதோமுக்கோ கொமோராவுக்கோ கிடைக்கவில்லை. ஆகையினால் கர்த்தருடைய கோபம் எருசலேமின்மேல் மிகவும் அதிகமாயிருக்கிறது.

எருசலேம் நகரத்தில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. ஒருவருக்கும் ஆகாரம் கிடைக்கவில்லை. இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன, என் ஜனமாகிய குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின (புல 4:10). பிள்ளைகளுக்கு போஜனம் கொடுக்க வேண்டிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தங்களுக்கு போஜனமாக்கிக்கொள்கிறார்கள்.

எருசலேம் முற்றிலுமாய் அழிந்து போயிற்று. கர்த்தர் தமது கோபத்தை நிறைவேற்றி, தமது உக்கிரகோபத்தை ஊற்றி, சீயோனில் அக்கினியைக் கொளுத்தினார்; அது அதின் அஸ்திபாரங்களைப் பட்சித்துப்போட்டது (புல 4:11).

எருசலேமின் அழிவைப்பார்த்து சத்துருக்களும், பகைஞர்களும் ஆச்சரியப்படுகிறார்கள். பூமியின் ராஜாக்களிலும், உலகத்திலுள்ள குடிகளிலும் அநேகர் எருசலேமைப்பற்றி அறிந்து வைத்திருந்தார்கள். அதன் ஆசீர்வாதங்களை தங்கள் கண்களால் பார்த்திருந்தார்கள். இப்போதோ எருசலேம் அழிந்துபோயிற்று. இதைப் பார்க்கும்போது பூமியின் ராஜாக்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

எருசலேமுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு உண்டு என்பது அவர்களுடைய சத்துருக்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் யூதாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ண எல்லா தேசத்தாரும் பயந்தார்கள். அவர்கள் இஸ்ரவேலருக்குப் பயப்படவில்லை. இஸ்ரவேலின் தேவனுக்கு பயப்பட்டார்கள். இப்போதோ கர்த்தரே எருசலேமை அழித்துப்போட்டார். இதைப் பார்த்தபோது அவர்களுடைய சத்துருக்களுக்கும் மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

சத்துருவும் பகைஞனும் எருசலேமின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான் என்கிறதை பூமியின் ராஜாக்களும் பூச்சக்கரத்தின் சகல குடிகளும் நம்பமாட்டாதிருந்தார்கள் (புல 4:12).

ஆசாரியர்களின் அக்கிரமங்கள் புல 4:13-20

புல 4:13. அதின் நடுவில் நீதிமான்களின் இரத்தத்தைச் சிந்தின அதின் தீர்க்கதரிசிகளின் பாவங்களினாலும், அதின் ஆசாரியர்களின் அக்கிரமங்களினாலும் இப்படி வந்தது.

புல 4:14. குருடர்போல் வீதிகளில் அலைந்து, ஒருவரும் அவர்கள் வஸ்திரங்களைத் தொடக்கூடாதபடி இரத்தத்தால் கறைப்பட்டிருந்தார்கள்.

புல 4:15. விலகுங்கள், தீட்டுப்பட்டவர்களே, தொடாமல் விலகுங்கள், விலகுங்கள், என்று அவர்களை நோக்கிக் கூப்பிட்டார்கள்; மெய்யாய்ப் பறந்தோடி அலைந்து போனார்கள்; இனித் தங்கித் தரிக்கமாட்டார்கள் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்பட்டது.

புல 4:16. கர்த்தருடைய கோபம் அவர்களைச் சிதறடித்தது, அவர்களை இனி அவர் நோக்கார்; ஆசாரியருடைய முகத்தைப் பாராமலும் முதியோரை மதியாமலும்போனார்கள்.

புல 4:17. இன்னும் எங்களுக்குச் சகாயம் வருமென்று நாங்கள் வீணாய் எதிர்பார்த்திருந்ததினாலே எங்கள் கண்கள் பூத்துப்போயின; இரட்சிக்கமாட்டாத ஜாதிக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

புல 4:18. நாங்கள் எங்கள் வீதிகளில் நடவாதபடிக்கு எங்கள் அடிச்சுவடுகளை வேட்டையாடினார்கள்; எங்கள் முடிவு சமீபித்தது; எங்கள் நாட்கள் நிறைவேறிப்போயின; எங்கள் முடிவு வந்துவிட்டது.

புல 4:19. எங்களைப் பின்தொடர்ந்தவர்கள் ஆகாயத்துக் கழுகுகளைப்பார்க்கிலும் வேகமாயிருந்தார்கள்; பர்வதங்கள்மேல் எங்களைப் பின்தொடர்ந்தார்கள்; வனாந்தரத்தில் எங்களுக்குப் பதிவிருந்தார்கள்.

புல 4:20. கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவனும், எங்கள் நாசியின் சுவாசமாயிருந்தவனும் அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டான்; அவனுடைய நிழலிலே ஜாதிகளுக்குள்ளே பிழைத்திருப்போம் என்று அவனைக் குறித்துச் சொல்லியிருந்தோமே.

எருசலேமின் அழிவுக்கு யூதாமனுஷரின் பாவங்களே காரணம். கர்த்தர் தம்முடைய நீதியினால் எருசலேமை நியாயந்தீர்த்தார். எருசலேமிலுள்ள தீர்க்கதரிசிகளும் பாவம் செய்தார்கள். அவர்களுடைய ஆசாரியர்களும் அக்கிரமம் செய்தார்கள். அவர்கள் எருசலேமின் நடுவில் நீதிமான்களின் இரத்தத்தை சிந்தினார்கள்.

இதனால் தேவனுடைய கோபம் எருசலேமின்மேல் வந்தது. கர்த்தர் தமது கோபத்தை நிறைவேற்றி, தமது உக்கிரகோபத்தை ஊற்றி, சீயோனில் அக்கினியைக் கொளுத்தினார்; அது அதின் அஸ்திபாரங்களைப் பட்சித்துப்போட்டது (புல 4:11).

எருசலேமிலுள்ள தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஏராளமான பாவங்களை செய்திருக்கிறார்கள். அந்தப் பாவங்களில் ஒரு பாவம் மாத்திரம் இங்கு விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எருசலேமின் நடுவில் நீதிமான்களின் இரத்தத்தை சிந்தினார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் இந்த அக்கிரமத்தை சேர்ந்து நடத்தினார்கள்.

எருசலேமில் ஏராளமான கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளஆசாரியர்களும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றினார்கள். மோளேகுக்கு தங்களுடைய பிள்ளைகளை பலியிட்டார்கள். அவர்களை தீக்கடக்கப்பண்ணினார்கள். குற்றமில்லாத இரத்தத்தை சிந்தினார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளஆசாரியர்களும் குற்றமில்லாத பிள்ளைகளின் இரத்தத்தை சிந்தியோடு நீதிமான்களின் இரத்தத்தையும் சிந்தினார்கள். நீதிமான்கள் சத்தியத்திற்கும், யூதமார்க்கத்திற்கும் எடுத்துக்காட்டாய் ஜீவிக்கிறவர்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ சத்தியத்திற்கு பகைஞராயிருக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளஆசாரியர்களும் உபத்திரவப்படுத்துகிற ஆவிகளுக்கு அடிமைகளாயிருந்தார்கள். தங்களுக்கு விரோதமாக யார் பேசினாலும், யார் கிரியை நடப்பித்தாலும், அவர்களை உபத்திரவப்படுத்தி, அவர்களைக் கொன்றுபோட்டார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளஆசாரியர்களும் குருடரைப்போல வீதிகளில் அலைந்தார்கள். சத்தியத்தைக் பார்க்கக்கூடாதபடிக்கு அவர்களுடைய மனக்கண்கள் மங்கிப்போயிருந்தது. ஒரு சிலரின் மனக்கண்கள் குருடாயிருந்தது.

அவர்கள் நீதிமான்களின் இரத்தத்தை சிந்தினபடியினால் அவர்களுடைய வஸ்திரங்கள் இரத்தத்தினால் கறைப்பட்டிருந்தது. அவர்களுடைய வஸ்திரங்களை ஒருவராலும் தொடமுடியவில்லை. அவர்களுடைய இரத்தக்கறைகளை அவர்களால் சுத்திகரிக்கவும் முடியவில்லை.

கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றியும், கள்ளஆசாரியர்களைப்பற்றியும் ஒருவரும் நற்சாட்சி கொடுக்கவில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் பக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தங்களிடத்தில் அதிகமான பரிசுத்தம் இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

அவர்கள் வீதிகளில் போகும்போது, தங்களுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்தி காண்பிப்பதற்காக, "விலகுங்கள், தீட்டுப்பட்டவர்களே, தொடாமல் விலகுங்கள், விலகுங்கள்" (புல 4:15) என்று சொல்லுவது வழக்கம். கள்ளஆசாரியர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும், தங்களுக்கு அருகாமையில் யாரையும் அனுமதிப்பதில்லை. மற்றவர்கள் தங்களை தொட்டுவிட்டால், தங்களுக்கு அசுத்தமும், தீட்டும் வந்துவிடும் என்று சொன்னார்கள்.

இப்போதோ கள்ளத்தீர்க்கதரிசிகளின் அசுத்தமும், அக்கிரமமும், பாவமும் ஜனங்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. ஆகையினால் ஜனங்கள் அவர்களை மதிப்பதில்லை. அவர்கள் தங்களுக்கு அருகாமையில் வருவதையும் ஜனங்கள் விரும்புவதில்லை. இப்போது கள்ளத்தீர்க்கதரிசிகள் வீதிகளில் வரும்போது, "விலகுங்கள், தீட்டுப்பட்டவர்களே, தொடாமல் விலகுங்கள், விலகுங்கள்" (புல 4:15) என்று ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பார்த்து சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இரக்கமும் பொறுமையுமுள்ளவர். கள்ளத்தீர்க்கதரிசிகளோ கர்த்தருடைய பொறுமையை சோதித்தார்கள். அவருக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். கானான் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். அது கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்ற தேசம். இந்த நல்ல தேசத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளஆசாரியர்களும் இருப்பதை கர்த்தர் விரும்பவில்லை. கானான் தேசம் அவர்களை வாந்திபண்ணிப்போட்டது.

கர்த்தருடைய கோபம் அவர்களைச் சிதறடித்தது, அவர்களை இனி அவர் நோக்கார்; ஆசாரியருடைய முகத்தைப் பாராமலும் முதியோரை மதியாமலும் போனார்கள் (புல 4:16). கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் மெய்யாய்ப் பறந்தோடி அலைந்துபோனார்கள்; இனித் தங்கித் தரிக்கமாட்டார்கள் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்பட்டது (புல 4:15).

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் கள்ளத்தீர்க்கதரிசிகளை கானான் தேசத்தில் இராதபடிக்கு சிதறடித்துப்போட்டார். அவர்களால் இனிமேல் கானான் தேசத்திற்கு திரும்பி வரமுடியாது. தங்களுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ கள்ளத்தீர்க்கதரிசிகளால் மறுபடியும் எருசலேமுக்குள் பிரவேசிக்க முடியாது. கர்த்தருடைய கோபம் அவர்களை சிதறடித்திருக்கிறது. இனிமேல் அவர்கள் ஒன்றாய்க் கூடிசேருவதற்கு வாய்ப்பு இல்லை.

கர்த்தரும் இனிமேல் அவர்களை நோக்கிப் பார்க்கமாட்டார். கள்ளஆசாரியர்கள், எருசலேமிலுள்ள நல்ல ஆசாரியருடைய முகத்தைப் பார்ப்பதில்லை. அவர்கள் தேசத்திலுள்ள முதியோரை மதிக்கவில்லை. அவர்கள் சுயநலமுள்ளவர்களாக, தங்களுடைய நன்மைகளை மாத்திரமே நோக்கிப் பார்த்தார்கள்.

கல்தேயர்கள் எருசலேமுக்குள் பிரவேசித்து, நகரத்தை இடித்துப் போடுகிறார்கள். நகரத்திற்குள்ளே இருக்கிற யூதர்கள் மிகுந்த வேதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களால் எருசலேமின் வீதிகளில் நடக்க முடியவில்லை. கல்தேயர்கள் தங்கள் கண்களில் தென்படுகிற யூதர்கள் எல்லோரையும் பட்டயத்தால் வெட்டிப்போடுகிறார்கள்.

"நாங்கள் எங்கள் வீதிகளில் நடவாதபடிக்கு எங்கள் அடிச்சுவடுகளை வேட்டையாடினார்கள்; எங்கள் முடிவு சமீபித்தது; எங்கள் நாட்கள் நிறைவேறிப்போயின; எங்கள் முடிவு வந்துவிட்டது. எங்களைப் பின்தொடர்ந்தவர்கள் ஆகாயத்துக் கழுகுகளைப்பார்க்கிலும் வேகமாயிருந்தார்கள்; பர்வதங்கள்மேல் எங்களைப் பின்தொடர்ந்தார்கள்; வனாந்தரத்தில் எங்களுக்குப் பதிவிருந்தார்கள்" (புல 4:18,19) என்று எரேமியா யூதாமனுஷரின் வேதனைகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

தங்களுக்கு இனிமேல் ஒரு உதவியும் இல்லையென்றும், தங்களுடைய முடிவு சமீபித்தது என்றும், தங்களுடைய நாட்கள் நிறைவேறிப்போயிற்று என்றும், தங்களுக்கு முடிவு வந்துவிட்டது என்றும் யூதர்கள் நினைக்கிறார்கள்.

யூதர்கள் கல்தேயருக்கு பயந்து பல தேசங்களுக்கும் சிதறிப்போகிறார்கள். அந்த தேசத்தாரோ யூதர்களுக்கு ஒரு உதவியும் செய்யவில்லை. இதனால் அவர்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருவதற்கு முன்பு, அவர்கள் பல தேசங்களோடு உடன்படிக்கை செய்திருந்தார்கள். அவர்கள் மூலமாய் தங்களுக்கு சகாயம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாய்ப்போயிற்று.

"இன்னும் எங்களுக்குச் சகாயம் வருமென்று நாங்கள் வீணாய் எதிர்பார்த்திருந்ததினாலே எங்கள் கண்கள் பூத்துப்போயின; இரட்சிக்கமாட்டாத ஜாதிக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்" (புல 4:17) என்று எரேமியா சொல்லுகிறார்.

தங்களுக்கு பல தேசங்களிலிருந்து சகாயம் வரும் என்று யூதர்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கு சகாயம் வரவில்லை. சகாயத்திற்குப் பதிலாக ஆபத்து வந்தது. பாபிலோன் தேசத்திலிருந்து கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். எருசலேமின் வீதிகளில் யூதர்களால் நடமாட முடியவில்லை. கல்தேயர்கள் அவர்களுடைய அடிச்சுவடுகளை வேட்டையாடினார்கள்.

கல்தேயர்கள் எருசலேமைச் சுற்றிலும் முற்றிக்கைப்போட்டபோது, மதில் சுவருக்கு வெளியே, மதிலிடிக்கும் ஏந்திரங்களையும், அம்புகளை எய்யும் ஏந்திரங்களையும் வைத்திருந்தார்கள். அவை எருசலேமின் மதில் சுவர்களைவிட உயரமானவை. கல்தேயர்கள் இந்த ஏந்திரங்களின் மேலே நின்று எருசலேம் நகரத்திற்குள்ளே கூர்ந்து கவனிப்பார்கள். யூதர்கள் யாராவது எருசலேமின் வீதிகளில் நடந்தால், தங்களுடைய உயரமான ஏந்திரங்களிலிருந்து யூதர்கள்மீது அம்புகளை எய்து, அவர்களைக் கொன்றுபோடுவார்கள்.

யூதர்கள் கல்தேயருக்கு பயந்து பல தேசங்களுக்கும் சிதறி ஓடுகிறார்கள். கல்தேயர்களும் அவர்களை பிடிக்க பின்தொடருகிறார்கள். கல்தேயர்கள் மிகவும் வேகமாய் ஓடக்கூடியவர்கள். அவர்கள் ஆகாயத்து கழுகுகளைப் பார்க்கிலும் வேகமாய் ஓடுகிறவர்கள். யூதர்கள் கல்தேயருக்கு பயந்து பர்வதங்களுக்கு ஓடிப்போனார்கள். கல்தேயரோ பர்வதங்கள்மேலும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

வனாந்தரத்தில் ஓடிப்போனால் கல்தேயருக்கு தப்பித்துக்கொள்ளலாம் என்று யூதர்கள் யோசனைபண்ணுகிறார்கள். கல்தேயர்களோ யூதர்களை பிடிப்பதற்கு வனாந்தரத்திலும் பதிவிருக்கிறார்கள். யூதர்களால் எங்கு ஓடினாலும் கல்தேயருக்கு தப்பிக்க முடியவில்லை.

கல்தேயர்கள் எருசலேமிலுள்ள ராஜாவையும், பிரபுக்களையும், பெரியோரையும் சிறியோரையும், வாலிபரையும், புருஷரையும், ஸ்திரீகளையும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்துக்கு கொண்டு போகிறார்கள். கல்தேயரின் விலங்குகளுக்கு யூதர்களில் ஒருவனும் தப்பிக்கவில்லை.

"கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவனும், எங்கள் நாசியின் சுவாசமாயிருந்தவனும் அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டான்; அவனுடைய நிழலிலே ஜாதிகளுக்குள்ளே பிழைத்திருப்போம் என்று அவனைக்குறித்துச் சொல்லியிருந்தோமே" (புல 4:20) என்று எரேமியா சொல்லுகிறார்.

சீயோன் குமாரத்தியே
புல 4:21,22

புல 4:21. ஊத்ஸ்தேச வாசியாகிய ஏதோம் குமாரத்தியே, சந்தோஷித்துக் களிகூரு; பாத்திரம் உன்னிடத்திற்கும் தாண்டிவரும், அப்பொழுது நீ வெறித்து, மானபங்கமாய்க் கிடப்பாய்.

புல 4:22. சீயோன் குமாரத்தியே, உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை தீர்ந்தது; அவர் இனி உன்னை அப்புறம் சிறைப்பட்டுப்போகவிடார்; ஏதோம் குமாரத்தியே, உன் அக்கிரமத்தை அவர் விசாரிப்பார்; உன் பாவங்களை வெளிப்படுத்துவார்.

எரேமியாவைப்போலவே தாவீது ராஜாவும் புலம்பல் பாடல்களை பாடியிருக்கிறார். தாவீதின் புலம்பல் பாடல்களின் முடிவில் ஆறுதலான வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கும். மரித்துப்போனதுபோல இருக்கிறவர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகள் ஜீவனைக் கொடுக்கும். இருளிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும்.

எரேமியா தீர்க்கதரிசியும், தாவீதைப்போலவே, தன்னுடைய புலம்பல் பாடலின் முடிவில், யூதருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஜனத்தை உற்சாகப்படுத்துவதற்காக, எரேமியா ஆறுதலின் வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் முன்னறிவிக்கிறார்.

சீயோனுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் முடிவு வரும். கர்த்தருடைய ஜனங்கள் இப்போது வேதனைகளை அனுபவிக்கிறார்கள். கர்த்தர் நியமித்த காலம் வரையில் மாத்திரமே அவர்களுக்கு வேதனை வரும். கர்த்தர் ஒரு நோக்கத்திற்காகவே தம்முடைய பிள்ளைகளுக்கு வேதனைகளைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய நோக்கம் நிறைவேறிய பின்பு, அவர்களுடைய வேதனைகளும் நின்றுபோகும்.

"சீயோன் குமாரத்தியே, உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை தீர்ந்தது; அவர் இனி உன்னை அப்புறம் சிறைப்பட்டுப்போகவிடார்; ஏதோம் குமாரத்தியே, உன் அக்கிரமத்தை அவர் விசாரிப்பார்; உன் பாவங்களை வெளிப்படுத்துவார்" (புல 4:22) என்று எரேமியா சொல்லுகிறார்.

ஏதோம் தேசத்தார் யூதாவின் மனுஷருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். எருசலேமின் அழிவைப் பார்த்து அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். அவர்களுடைய சந்தோஷத்திற்கும் முடிவு வரும் என்று எரேமியா சொல்லுகிறார்.

"ஊத்ஸ்தேச வாசியாகிய ஏதோம் குமாரத்தியே, சந்தோஷித்துக் களிகூரு" (புல 4:21) என்று எரேமியா ஏதோமியரைப் பார்த்து வஞ்சக புகழ்ச்சி நடையில், இந்த வாக்கியங்களைச் சொல்லுகிறார்.

சீயோன் குமாரத்தி இப்போது கர்த்தருடைய கோபத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணுகிறாள். இந்தப் பாத்திரம் ஏதோம் குமாரத்திக்கும் கொடுக்கப்படும். அப்போது அவர்களுக்கும் வேதனைகளும், பாடுகளும் உண்டாகும். "பாத்திரம் உன்னிடத்திற்கும் தாண்டிவரும், அப்பொழுது நீ வெறித்து, மானபங்கமாய்க் கிடப்பாய்" (புல 4:21) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி ஏதோமின் அழிவைக்குறித்து ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார். "ஏதோமைக்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ?" (எரே 49:7).

5 அதிகாரம்

கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார் (புல 5:1-16). கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் பாழாய்க்கிடக்கிறது (புல 5:17,18).

கர்த்தர் தம்முடைய கிருபையை இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியும் காண்பிக்குமாறு எரேமியா பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார் (புல 5:19-22). எபிரெய பாஷையில் எழுதப்பட்டிருக்கும் பழைய சுருள்களில், இந்த அதிகாரத்திற்கு "எரேமியாவின் ஜெபம்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும் புல 5:1-16

புல 5:1. கர்த்தாவே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும்; எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும்.

புல 5:2. எங்கள் சுதந்தரம் அந்நியர் வசமாகவும், எங்கள் வீடுகள் புறத்தேசத்தார்வசமாகவும் தாண்டிப்போயின.

புல 5:3. திக்கற்றவர்களானோம், தகப்பன் இல்லை; எங்கள் தாய்கள் விதவைகளைப்போல் இருக்கிறார்கள்.

புல 5:4. எங்கள் தண்ணீரைப் பணத்துக்கு வாங்கிக் குடிக்கிறோம்; எங்கள் விறகு விலைக்கிரயமாய் வருகிறது.

புல 5:5. பாரஞ்சுமந்து எங்கள் கழுத்து நோகிறது; நாங்கள் உழைக்கிறோம், எங்களுக்கு இளைப்பாறுதல் இல்லை.

புல 5:6. அப்பத்தால் திருப்தியாகும்படி எகிப்தியருக்கும் அசீரியருக்கும் எங்களைக் கையளித்தோம்.

புல 5:7. எங்கள் பிதாக்கள் பாவஞ்செய்து மாண்டுபோனார்கள்; நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம்.

புல 5:8. அடிமைகள் எங்களை ஆளுகிறார்கள்; எங்களை அவர்கள் கையிலிருந்து விடுவிப்பாரில்லை.

புல 5:9. வனாந்தரத்தில் இருக்கிற பட்டயத்தினால் பிராணமோசத்துக்கு ஏதுவானவர்களாய் எங்கள் அப்பத்தைத் தேடுகிறோம்.

புல 5:10. பஞ்சத்தின் கொடுமையினால் எங்கள் தோல் அடுப்பங்கரையைப் போல் கறுத்துப்போயிற்று.

புல 5:11. சீயோனில் இருந்த ஸ்திரீகளையும் யூதா பட்டணங்களில் இருந்த கன்னிகைகளையும் அவமானப்படுத்தினார்கள்.

புல 5:12. பிரபுக்களுடைய கைகளை அவர்கள் கட்டி, அவர்களை ஏறத்தூக்கினார்கள்; முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை.

புல 5:13. வாலிபரை ஏந்திரம் அரைக்கக் கொண்டுபோனார்கள்; இளைஞர் விறகு சுமந்து இடறிவிழுகிறார்கள்.

புல 5:14. முதியோர்கள் வாசல்களில் உட்காருகிறதும், வாலிபர் கின்னரங்களை வாசிக்கிறதும் நின்றுபோயிற்று.

புல 5:15. எங்கள் இருதயத்தின் களிகூருதல் ஒழிந்துபோயிற்று; எங்கள் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று.

புல 5:16. எங்கள் தலையிலிருந்து கிரீடம் விழுந்தது; ஐயோ! நாங்கள் பாவஞ்செய்தோமே.

கர்த்தருடைய ஜனம் அந்நிய தேசத்து சிறையிருப்பில் பாடுகளையும் வேதனைகளையும், உபத்திரவங்களையும் அதிகமாய் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் துக்கம் மாத்திரமே இருக்கிறது. சந்தோஷம் சிறிதுமில்லை. அவர்கள் தங்களுடைய வேதனைகளையெல்லாம் கர்த்தருடைய கிருபாசனத்திற்கு முன்பாக வந்து ஒப்புவிக்கிறார்கள்.

"இப்பொழுதும் உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவனாகிய எங்கள் தேவனே, அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் எங்களுக்கும், எங்கள் ராஜாக்களுக்கும், எங்கள் பிரபுக்களுக்கும், எங்கள் ஆசாரியர்களுக்கும், எங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், எங்கள் பிதாக்களுக்கும், உம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல வருத்தமும் உமக்கு முன்பாக அற்பமாய்க் காணப்படாதிருப்பதாக" (நெகே 9:32).

தாங்கள் இதுவரையிலும் அனுபவித்து வந்த எல்லா பாடுகளையும் கர்த்தர் நினைவுகூரவேண்டும் என்றும், தாங்கள் இப்போதிருக்கிற பரிதாபமான நிலமையை கர்த்தர் கண்ணோக்கிப் பார்க்கவேண்டும் என்றும், இப்படிப்பட்ட பாடுகளும் வேதனைகளும் வரப்போகிற காலத்தில் தங்களுக்கு வரக்கூடாது என்றும், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர்களுடைய வேதனைகளையும், உபத்திரவங்களையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். அவையெல்லாவற்றையும் மொத்தமாய்ச் சேர்த்து சொல்லுவதற்காக, "நிந்தை" என்னும் ஒரே வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். "எங்கள் நிந்தையை நோக்கிப் பாரும்" என்று ஜெபம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய ஜனமாக தெரிந்தெடுத்திருக்கிறார். அவர்களை தமக்கு சொந்தமாக்கிக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய நாமம் மகிமையுள்ளது. கர்த்தருடைய ஜனம் நிந்தைகளை அனுபவிக்கும்போது, அவர்களுடைய நிந்தை கர்த்தருடைய நாமத்திலும், அவருடைய மகிமையிலும், கனத்திலும் பிரதிபலிக்கும்.

தங்களுடைய பாவங்களினிமித்தமாகவே தங்களுக்கு நிந்தை வந்திருப்பதை இஸ்ரவேல் ஜனத்தார் அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் அனுபவிப்பது பாவத்தின் நிந்தை. இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவிப்பது அவர்களுடைய வாலிபத்தின் நிந்தை. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை ஸ்தாபித்து, அதை உருவாக்கியிருக்கிறார். அவர்களுடைய தேசத்தின் ஆரம்ப நாட்கள், அவர்களுக்கு வாலிப நாட்களைப்போல இருந்தது. ஆரம்ப நாட்களிலேயே அவர்களுக்கு நிந்தை உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடம், "கர்த்தாவே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய முன்னோர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார்கள். கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றினார்கள். அவர்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். தங்களுடைய பாவங்களுக்கு அவர்கள் மனந்திரும்பவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வந்தது. கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பின் பிரகாரம், இஸ்ரவேல் ஜனத்தார் நிந்தையை அனுபவிக்கிறார்கள்.

தங்களுக்கு என்னென்ன நிந்தைகள் வந்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்தில் ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறார்கள். அவர்கள் ஏராளமான பாடுகளையும், வேதனைகளையும், நிந்தைகளையும் அனுபவித்து வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு இலச்சையும், குறைவும் உண்டாயிற்று.

அந்நியர்கள் இஸ்ரவேல் ஜனத்தார்மீது யுத்தம்பண்ணி, அவர்களுடைய பொக்கிஷங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்களுடைய சுதந்தரம் அந்நியர் வசமாயிற்று. அவர்களுடைய வீடுகள் புறத்தேசத்தார் வசமாய் தாண்டிப்போயிற்று (புல 5:2). இஸ்ரவேல் ஜனத்தார் கட்டிய வீடுகளில் அந்நியர்கள் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரோ பர்வதங்களிலும், வனாந்தரங்களிலும் தங்கள் சத்துருவுக்கு பயந்து ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்.

யூதாதேசம் இப்போது ஒரு விதவையைப்போலவும், திக்கற்ற பிள்ளைகளைப்போலவும் இருக்கிறது. "திக்கற்றவர்களானோம், தகப்பன் இல்லை; எங்கள் தாய்கள் விதவைகளைப்போல இருக்கிறார்கள்" (புல 5:3) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதாதேசத்தின் ராஜா யூதாவின் மனுஷருக்கு தகப்பனைப்போல இருக்கிறார். கல்தேயர்கள் யூதாவின் ராஜாவைக் கொன்றுபோட்டார்கள். இதனால் யூதர்கள் திக்கற்றவர்களாகவும், தகப்பன் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிதாவாகிய தேவனே தம்முடைய பிள்ளைகளுக்கு தகப்பனைப்போல இருக்கிறார். பிதாவாகிய தேவன் தங்களை கைவிட்டுவிட்டார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் அழுது புலம்புகிறார்கள்.

யூதர்களின் பட்டணங்கள் அவர்களுக்கு தாய்களைப்போல இருக்கிறது. அவர்களுடைய தாய்களோ விதவைகளைப் போல இருக்கிறார்கள். அந்தப் பட்டணங்கள் இப்போது அந்நியர் வசமாயிற்று. அவர்கள் யூதாவின் பட்டணங்களிலுள்ள வீடுகளையெல்லாம் இடித்துப்போடுகிறார்கள். யூதாவின் நகரங்களுக்கு மிகுந்த சேதம் உண்டாயிருக்கிறது.

யூதர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கைத் தேவைகளை சந்திப்பதற்குக்கூட மிகவும் கடினமாய் உழைக்கிறார்கள். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம். பூர்வகாலங்களில் இஸ்ரவேல் புத்திரர் தண்ணீரை இலவசமாகப் பெற்றுக் கொண்டார்கள். அவற்றை தாராளமாகக் குடித்து தங்களுடைய தாகத்தைத் தணித்துக்கொண்டார்கள். கானான் தேசத்திலே விறகுகளும் இலவசமாய்க் கிடைத்தது. ஆனால் இப்போதோ கானான் தேசத்தில் ஒரு ஆசீர்வாதமும் இல்லை. தண்ணீருக்கும் விறகுக்கும் குறைவு உண்டாயிற்று. இதனால் அவர்கள் தண்ணீரை பணத்திற்கு வாங்கி குடிக்கிறார்கள். அவர்களுக்கு விறகு விலைக்கிரயமாய் வருகிறது (புல 5:4).

யூதர்கள் தண்ணீரையும் விறகையும் பணத்திற்கு வாங்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எருசலேமில் பசியும் பஞ்சமும் அதிகமாயிருக்கிறது. அவர்களுக்கு அப்பம் கிடைக்கவில்லை. யூதர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். பாரம் சுமந்து அவர்களுடைய கழுத்து நோகிறது. அவர்கள் கடினமாய் உழைக்கிறார்கள். அவர்களுக்கு இளைப்பாறுதல் இல்லை (புல 5:5).

தங்களுடைய போஜனத்திற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சுதந்தரத்தையே அந்நியருக்கு விற்றுப்போடுகிறார்கள். "அப்பத்தால் திருப்தியாகும்படி எகிப்தியருக்கும் அசீரியருக்கும் எங்களைக் கையளித்தோம்" (புல 5:6) என்று எரேமியா சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் அப்பத்திற்காக அந்நியரிடத்தில் அடிமைகளாகயிருக்கிறார்கள்.

யூதர்கள் அப்பத்திற்காக எல்லா இடங்களிலும் அலைந்து தேடுகிறார்கள். "வனாந்தரத்தில் இருக்கிற பட்டயத்தினால் பிராணமோசத்துக்கு ஏதுவானவர்களாய் எங்கள்அப்பத்தைத் தேடுகிறோம்" (புல 5:9) என்று எரேமியா சொல்லுகிறார்.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்திலே அடிமைகளாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்காக பாரங்களை சுமக்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரரின் கழுத்து நோகிறது (புல 5:5). அவர்களுடைய நுகம் உபத்திரவத்தின் நுகமாயிருக்கிறது.

யூதாவின் மனுஷருக்கு பாபிலோன் தேசத்திலே இளைப்பாறுதல் இல்லை. அவர்கள் எப்போதும் உழைக்கவேண்டும். அவர்களுக்கு ஓய்வு நாளோ, இரவு வேளை ஓய்வோ கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு தங்களைக் கீழ்ப்படுத்தவில்லை. கர்த்தருடைய நுகம் இலேசானது. யூதர்கள் கர்த்தருடைய நுகத்திற்கு தங்களுடைய கழுத்தைக் கொடுக்காமல், இப்போது பாபிலோன் தேசத்தாரின் கடினமான நுகத்திற்கு தங்களுடைய கழுத்துக்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆளுகைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் பாபிலோன் தேசத்தாரின் ஆளுகைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய ஊழியக்காரர்களின் வார்த்தைகளுக்கும், அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவில்லை. ஆனால் இப்போது கல்தேயரின் எல்லா கட்டளைகளுக்கும் செவிகொடுத்து, அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்.

கர்த்தருடைய ஆளுகை கிருபை நிரம்பியது. கர்த்தரிடத்தில் அன்பும் இரக்கமும் அதிகமாயிருக்கிறது. அவர் தம்முடைய ஜனங்களை நீதியாயும், அன்பாயும் ஆளுகை செய்கிறவர். இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படியவில்லை. அந்நியர்கள் அவர்களைப் பிடித்து, தங்களுடைய ஆளுகைக்கு அடிமைப்படுத்தியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது வேதனைகளையும் பாடுகளையும் அனுபவிக்கிறார்கள். இந்த வேதனைகளுக்கு தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களே காரணம் என்று நினைக்கிறார்கள். "எங்கள் பிதாக்கள் பாவஞ்செய்து மாண்டுபோனார்கள்; நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம்" (புல 5:7) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பூர்வகாலங்களில் வசதியோடு வாழ்ந்தார்கள். அவர்களுடைய வீடுகளில் அடிக்கடி விருந்துகள் நடப்பது வழக்கம். ஆனால் இப்போதோ அவர்களுக்கு பஞ்சமுண்டாயிற்று. விருந்துகள் நடைபெறவில்லை. பஞ்சத்தின் கொடுமையினால் அவர்கள் தோல் அடுப்பங்கரையைப்போல் கருத்துப்போயிற்று (புல 5:10). "பஞ்சத்தின் கொடுமை" என்னும் வாக்கியத்திற்கு "பஞ்சத்தின் புயல்" என்று பொருள்படும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு அவமானமுண்டாயிற்று. சத்துருக்கள் சீயோனிலிருந்த எல்லோரையும் அவமானப்படுத்தினார்கள். இந்த அவமானத்திற்கு ஒருவரும் தப்பிக்கவில்லை.

"சீயோனில் இருந்த ஸ்திரீகளையும் யூதா பட்டணங்களில் இருந்த கன்னிகைகளையும் அவமானப்படுத்தினார்கள். பிரபுக்களுடைய கைகளை அவர்கள் கட்டி, அவர்களை ஏறத்தூக்கினார்கள்; முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை. வாலிபரை ஏந்திரம் அரைக்கக் கொண்டுபோனார்கள்; இளைஞர் விறகு சுமந்து இடறிவிழுகிறார்கள்" (புல 5:11-13).

பூர்வகாலங்களில் எருசலேமின் குடிகள் சந்தோஷமாயிருந்தார்கள். அப்போது எருசலேம் நகரம் சந்தோஷமான நகரமாயிருந்தது. இப்போதோ அவர்களுடைய சந்தோஷம் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டது. வாலிபர்கள் கின்னரங்களை வாசித்து சந்தோஷமாகப் பாடுவார்கள். ஆனால் இப்போது வாலிபர் கின்னரங்களை வாசிக்கிறது நின்றுபோயிற்று. கல்தேயர்கள் வாலிபரை ஏந்திரம் அரைக்கக் கொண்டுபோனார்கள்; இளைஞர் விறகு சுமந்து இடறிவிழுகிறார்கள் (புல 5:13).

பூர்வநாட்களில் முதியோர்கள் வாசல்களில் உட்கார்ந்து பொதுவான காரியங்களை பேசிக்கொள்வது வழக்கம். ஆனால் இப்போதோ முதியோர்கள் வாசல்களில் உட்காருகிறது நின்றுபோயிற்று. முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தின் களிகூருதல் ஒழிந்துபோயிற்று. அவர்கள் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று (புல 5:15). அவர்களுடைய நடனங்களும், சந்தோஷ கீதங்களும், சோககீதங்களாகவும், புலம்பல் கீதங்களாகவும் மாறிற்று.

"சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம் பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருவார்கள்" (நியா 21:21). இவர்களுடைய நடனங்கள் கண்ணியம் மிகுந்ததாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்கும். ஆனால் இப்போதோ யூதர்களிடத்தில் நடனமாடும் அளவுக்கு சந்தோஷமில்லை. அவர்களுடைய சந்தோஷங்களெல்லாம் துக்கங்களாய் மாறிற்று.

யூதர்களுடைய மகிமையெல்லாமே அவர்களைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு அவமானமும் நிந்தையும் உண்டாயிற்று. யூதர்களுடைய சமுதாய வாழ்வில் நியாயவிசாரிப்புக்கள் நடைபெறும். முதியோர்கள் வாசல்களில் உட்கார்ந்து நீதியான தீர்ப்பு சொல்லுவது வழக்கம். ஆனால் இப்போது முதியோர்கள் வாசல்களில் உட்காருவது நின்றுபோயிற்று.

அவர்கள் தலையிலிருந்து கிரீடம் விழுந்தது (புல 5:16). ராஜாவின் மதிப்பும், மரியாதையும் கீழே விழுந்தது மாத்திரமல்ல, அவருடைய தலையிலிருந்து கிரீடமும் விழுந்தது. யூதாதேசத்தை ஆளுகை செய்வதற்கு ராஜாவின் வாரிசுகள் யாருமில்லை. கல்தேயர்கள் யூதாவின் ராஜாவையும், அவருடைய பிள்ளைகளையும் பட்டயத்தால் வெட்டி கொன்றுபோட்டார்கள்.

கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர் புல 5:17-22

புல 5:17. அதினால் எங்கள் இருதயம் பலட்சயமாயிற்று; அதினால் எங்கள் கண்கள் இருண்டுபோயின.

புல 5:18. பாழாய்க்கிடக்கிற சீயோன் மலையின் மேல் நரிகள் ஓடித்திரிகிறது.

புல 5:19. கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய சிங்காசனம் தலைமுறைதலைமுறையாக நிலைநிற்கும்.

புல 5:20. தேவரீர் என்றைக்கும் எங்களை மறந்து, நெடுங்காலமாக எங்களைக் கைவிட்டிருப்பதென்ன?

புல 5:21. கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்; பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும்.

புல 5:22. எங்களை முற்றிலும் வெறுத்துவிடுவீரோ? எங்கள்பேரில் கடுங்கோபமாயிருக்கிறீரே!

எருசலேம் நகரம் அழிந்துபோயிற்று. கர்த்தருடைய தேவாலயம் பாழாய்ப்போயிற்று. யூதர்களுக்கு ஏராளமான அழிவுகள் ஏற்பட்ட போதிலும், தேவாலயத்தின் அழிவே அவர்களுக்கு பேரழிவாகயிருக்கிறது.

யூதா ஜனங்கள் தங்களுடைய பாவங்களினால் சீயோன் மலையை அசுத்தப்படுத்தினார்கள். அங்கே விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் சீயோன் மலையை அழிவுக்கு ஒப்புக்கொடுத்தார். சீயோன் மலை இப்போது பாழாய்க் கிடக்கிறது. அதின்மேல் நரிகள் ஓடித்திரிகிறது. நரிகள் காடுகளில் தாராளமாய் ஓடித்திரிவதுபோல, இப்போது இடிந்து கிடக்கிற தேவாலயத்திலும் ஓடித்திரிகிறது. அதினால் அவர்கள் இருதயம் பலட்சயமாயிற்று. அவர்கள் கண்கள் இருண்டுபோயிற்று (புல 5:17,18).

யூதாதேசம் நிலைத்திருக்கவில்லை. எருசலேம் நகரமும் நிலைத்திருக்கவில்லை. தேவாலயமும் இடிந்துபோயிற்று. ஆனாலும் கர்த்தர் என்றென்றைக்கும் இருக்கிறார். அவருடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும் *(புல 5:19)*. வேதனைகளையும் நிந்தைகளையும் அனுபவிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, இந்த சத்தியமே ஆறுதலைத் தருகிறது.

இந்த உலகத்தில் பல குழப்பங்கள் உண்டாகலாம். இந்தப் பிரபஞ்சத்தில் பேரழிவு வரலாம். இங்கு என்ன நடைபெற்றாலும், அது கர்த்தருடைய சிங்காசனத்தை பாதிக்காது. கர்த்தர் என்றென்றைக்கும் இருக்கிறார். அவருடைய சிங்காசனம் நித்திய காலமாய் நிலைத்து நிற்கும். பூமியிலுள்ள மனுஷர்கள் பல புரட்சிகளை செய்யலாம். விநோதமான காரியங்களை கண்டுபிடிக்கலாம். நாகரீகங்கள் மாறலாம். கர்த்தருடைய நித்திய சிந்தை ஒருபோதும் மாறுவதில்லை. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். கர்த்தருடைய நீதியும், சத்தியமும், பரிசுத்தமும், சர்வஞானமும் ஒருபோதும் மாறுவதில்லை.

கர்த்தர் தங்களை மறந்துவிட்டாரோ என்றும், தங்களைக் கைவிட்டுவிட்டாரோ என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் வேதனையோடு நினைக்கிறார்கள். "தேவரீர் என்றைக்கும் எங்களை மறந்து, நெடுங்காலமாக எங்களைக் கைவிட்டிருப்பதென்ன?" *(புல 5:20)* என்று யூதர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியோடு கேட்கிறார்கள்.

கர்த்தருடைய ஆலயம் அழிந்து போனாலும், கர்த்தர் மாறாதவராயிருக்கிறார். மாறாத கர்த்தர் தங்களை மறந்துவிடக் கூடாது என்று யூதர்கள் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடம் வழக்காடவில்லை. மன்றாடுகிறார்கள் அவர்கள் தங்களுடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தரிடத்தில் சொல்லி பணிவோடு மன்றாடுகிறார்கள்.

"கர்த்தவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்; ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?" *(எரே 12:1)*.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவரிடத்தில் பணிவோடு ஜெபம்பண்ணுகிறார்கள். "கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்; பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும்" *(புல 5:21)* என்று யூதர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தில் 21-ஆவது வசனம் கடைசியான வசனமல்ல. 22-ஆவது வசனமே இந்த அதிகாரத்தின் கடைசி வசனம் ஆனாலும் யூதரபீமார்கள். இந்த அதிகாரத்தின் 21-ஆவது வசனத்தை இரண்டுமுறை சொல்லி ஜெபம்பண்ணுவது வழக்கம்.

இந்த அதிகாரத்தின் 22-ஆவது வசனம் "எங்களை முற்றிலும் வெறுத்துவிடுவீரோ? எங்கள்பேரில் கடுங்கோபமாயிருக்கிறீரே!" என்று சோகமாக முடிவு பெறுகிறது. யூதரபீமார்கள் இந்தப் புஸ்தகத்தை சோகவார்த்தைகளால் முடிக்க விரும்பவில்லை. இதை தங்களுடைய ஜெபவார்த்தைகளினால் முடிக்க விரும்பி, 21-ஆவது வசனத்தை இரண்டுமுறை சொல்லுகிறார்கள்.

சங்கீதக்காரரும் ஒரு சில ஜெபவார்த்தைகளை திரும்பத் திரும்ப ஏறெடுத்திருக்கிறார்.

"தேவனே, எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்" *(சங் 80:3)*.

சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம் (சங் 80:7).

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்; உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்" (சங் 80:19).

கர்த்தர் தங்களை தம்மிடத்தில் திருப்பிக்கொள்ளவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் இப்போது விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் அவர்களை தம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்களுக்குள் மெய்யான மனந்திரும்புதல் உண்டாயிருக்கும். அவர்களுடைய இருதயம் மெய்யாகவே புதுப்பிக்கப்பட்டிருக்கும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்முடைய இருதயங்களைப் புதுப்பிக்கும்போது, அவர் தம்முடைய கிருபையான சிலாக்கியத்தினால் நம்முடைய நாட்களையும் புதியவைகளாக்குவார். நாம் கர்த்தருக்குள் புதுசிருஷ்டிகளாயிருப்போம். நமக்கு பழையவைகளெல்லாம் ஒழிந்துபோகும். நமக்கு எல்லாம் புதியவைகளாயிருக்கும்.